

# தமிழரசு

1-8-1987 ரூ. 1



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 85வது பிறந்த நாளன்று (15-7-87) சென்னையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கடராமன்



இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தல் 13-7-'87 அன்று நடை பெற்றது. குடியரசுத் துணைத் தலைவராக இருந்த திரு ஆர். வெங்கடராமன் போட்டியிட்டார். இவர் எதிர்க்கட்சி வேட்பாளரான திருவி.ஆர். கிருஷ்ண அய்யரைவிட 4,58,598 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். திரு வெங்கடராமன் அவர்கள் பெற்ற மொத்த வாக்குகள் 7,40,148ஆகும்.

25-7-'87 அன்று பகல் 12.15 மணிக்குக் குடியரசுத் தலைவர் பதவியினை ஏற்றார் திரு ஆர். வெங்கடராமன் அவர்கள். மாண்புமிகு இந்திய உச்ச நீதி மன்றத்தலைமை நீதிபதிதிருபதக் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

புதிய குடியரசுத் தலைவர் அவர்களின் வாழ்க்கை வரலாறு வருமாறு :

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பட்டுக்கோட்டையில் 4-12-1910-ல் வழக்குரைஞர் எஸ். ராமசாமி அய்யர் அவர்களின் மகனாகப் பிறந்தார்.

முதுகலைப்பட்டம் பெற்ற இவர், சட்டக் கல்லூரியில் பயின்று வழக்குரைஞர் ஆனார்.

காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டு, போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றார்.

1950 முதல் 1952 வரை இடைக்கால நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். 1957 முதல் 1967 வரை தமிழ்நாட்டில் தொழிலமைச்சராகப் பணியாற்றித் தமிழக தொழில் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டிருக்கிறார்.

1967 முதல் 1971 வரை திட்டக்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றிருந்த இவர் 1977-ல் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். 1980-ல் மைய அரசின் நிதி அமைச்சரானார். 1982-ல் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பேற்றார். 1984-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31-ஆம் நாளன்று இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.



## மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி

குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு ஆர். வெங்கடராமன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வாழ்த்துத் தந்தி அனுப்பினார். அதில் குறிப்பிட்டிருப்பதாவது:

“இந்தியக் குடியரசின் 8-வது ஜனாதிபதியாக இன்று பதவி ஏற்றுள்ள தங்களுக்கு, தமிழக மக்களின் சார்பிலும்,தமிழக அரசின் சார்பிலும் என் சார்பிலும் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

திரு. வெங்கடராமன் அவர்கள் குடியரசுத் தலைவர் பொறுப்பை ஏற்கும் முதல் தமிழ்நாட்டவர் என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018

பிரபவ-ஆடி 16

மலர் : 18 இதழ் : 3

1-8-1987




# மெட்ராஸ் கார்டன்ஸ்

சிங்காரச்சென்னைக்குமேலும் எழிலூட்டும் வகையில் சென்னை செண்ட்ரல் ரயில் நிலையம் அருகே - முன்பு விலங்குக்காட்சிச் சாலை இருந்த இடத்தில் ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்று உருவாகி வருகிறது. 'மெட்ராஸ் கார்டன்ஸ்' என்று வழங்கப் பெறும் இந்தச் சுற்றுலா மற்றும் உல்லாச வளாகத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா 16.7.'87 அன்று நடந்தது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் இதற்கான அடிக்கல்லை நாட்டினார். மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கண்டதும் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கைகளை அசைத்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் கையசைத்துத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

அயல் நாடுகளில் வாழும் இந்தியர்கள் நூறு பேர் சேர்ந்து நடத்திவரும் 'பல்லவா ஓட்டல் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து இந்த ஓட்டலைக் கட்டத் திட்டமிட்டுள்ளது. இந்த நிறுவனம் ஏற்கெனவே அமெரிக்காவில் உள்ள 'பிளோரிடா' நகரில் 'ராமடா இன்செயின் ஓட்டல்' என்ற நட்சத்திர ஓட்டலை நடத்தி வருகிறது.

எல்லா வசதிகளும் நிறைந்த இந்த நவீன ஓட்டல், 15 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.25 கோடி செலவில் கட்டப்படுகிறது. இதில் வெளிநாட்டு இந்தியர்களின் முதலீடு 25 சதவிகிதம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக முதலீடு 26 சதவிகிதம்; மீதி 49 சதவிகிதப் பணம் பொதுமக்களிடம் பங்குத்தொகை மூலம் பெறப்படும்.

இந்த ஓட்டல், இரண்டரை ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்படும். இதன் மூலம் 800 பேருக்கு நேரிடையாகவும், 1500 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் இந்த விழாவில் வரவேற்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்:

''1977-ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாடு பல்வேறு துறைகளில் முன்னேறி வருகிறது. 1977-ல் நமது ஆண்டு வருமானம் ரூ. 607 கோடியாக இருந்தது. இப்போது ரூ. 2,638 கோடியாக உயர்ந்துள்ளது.

''இப்போது மேலை நாட்டுப் பயணிகளைக் கவர்வதற்காகவும் அங்கே வாழும் இந்தியர்கள் தொழில்தொடங்கும் வகையிலும் இந்த ஓட்டல் கட்டப்படுகிறது.

''இந்தியாவிலேயே முதன் முதலில் தமிழ்நாட்டில்தான் மேலை நாட்டு இந்தியர்கள் மூலதனத்துடன் ஓட்டல் கட்டப்படுகிறது. இதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டும் இந்த விழாவில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்''.

பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பல்லவா ஓட்டல் நிறுவனத் தலைவர் திரு பழனி ஜி.பெரியசாமி அவர்கள், வெள்ளித் தட்டில், தங்கக் கரணையை வைத்துப் பரிசளித்தார். பிறகு அவர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இந்த நாள் நமது தமிழ் நாட்டுச்சரித்திரத்தில் ஒரு பொன்னாள். தமிழக முதல்வரும், நமது இதய தெய்வமுமான டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பொற்கரத்தால் இந்த அடிக்கல் நாட்டுவிழா நடந்ததை மிகவும் பெருமையாகக் கருதுகிறேன்.

''அவர் அமெரிக்கா வந்தபோது, அங்குள்ள அனைத்துத் தமிழர்களும் ஒன்று சேர்ந்து சந்தித்தோம். சென்னையைப் பூங்காவாக மாற்றிப் புதுப்பொலிவுடன் விளங்க வைக்க வேண்டும்; ஏழைகளின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்று திட்டங்களைச் சொல்லி எங்களை அழைத்தார். அதன் பிறகு நாங்கள் நூறு தமிழர்கள் ஒன்று கூடி இந்த ஓட்டலுக்கு முதலீடு செய்கின்றோம்.

''இதற்குப் பலர் உதவி செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்துக்கு உதவியாக இருந்த மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆசியால் இதைத் தொடங்குவதை எங்கள் கடமையாகக் கொண்டுள்ளோம்''.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள் முதலானோர் கலந்து கொண்டனர்.

—நமது செய்தியாளர்

# தமிழக அரசின் தமிழ்த் தொண்டு

வைணவர்கள் வணங்கும் பெரும் திருத்தலமாக விளங்கும் திருவரங்கத்தில் தாயார் அம்மன் சந்நிதி அருகில் கம்பர் தான் இயற்றிய காவியமான இராமாயணத்தை அரங்கேற்றம் செய்ய அனுமதி கேட்டார். ஆனால், அதற்கு உடன் அனுமதி வழங்கப்படவில்லை. கம்பர் பிறந்தது தஞ்சை மாவட்டம். ஆனால் கம்பரின் மகன் அம்பிகாபதிக்கும் தஞ்சையை ஆண்ட சோழ மன்னன குலோத்துங்கன் மகள் அமராவதிக்கும் ஏற்பட்ட காதல் விவகாரத்தினால் அரசின் ஆத்திரத்திற்கு ஆளாகி, வேறு நாட்டிறகுத் தஞ்சம் புக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. கம்பராமாயணத்தைச் சிதம்பரம் நடராஜர் கோயிலில் அரங்கேற்றம் செய்ய முயன்றதாகவும், அங்கும் தில்லை தீட்சதர்கள் அனுமதி தரவில்லை என்றும் சொல்வதுண்டு.

பல்லவர்கள் ஆட்சி புரிந்த காலத்திலும், பிற்காலச் சோழர்கள் ஆட்சிக் காலத்திலும் சமஸ்கிருதம் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தது. சமஸ்கிருதமே மந்திரம் சொல்லத் தகுதியான மொழி, மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் தூது செல்ல உதவும் மொழி என்ற எண்ணம் பரவி, தமிழ் மொழியும், தமிழ் நூல்களும் புகழ் மங்கியிருந்தன.

எனவே, கோயில்களில் சமஸ்கிருதத்தில்தான் வேதமே ஓத வேண்டும் என்றிருந்த காலத்தில் வேதியர் குலத்தில் உதித்த திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் ஆகியோர் பக்திப் பாடல்களைத் தமிழில் பாடுவதை ஒரு இயக்கமாக ஆரம்பித்து, தமிழ்நாடு பூராவும் நகரங்கள், பட்டி தொட்டிகள் எல்லாம் தேவாரம், திருவாசகங்களைப் பாடி வந்தார்கள். அந்தச் சூழ்நிலையில்தான் கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றம் செய்ய முயன்றார்.

கம்பருடைய இராமாயணப் பாக்கள் பாடப்பட்ட பொழுது சபையில் உள்ளோர் மொழி மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியால் வேண்டாவெறுப்புடன் கேட்டு வந்தனர். அந்த நேரத்தில்தான் எதிரே வானவெளியில் நரசிங்கம் தோன்றிச் சிரம் அசைத்துக் கரம் கொட்டிப் பாராட்டைத் தெரிவித்து மறைந்தது. அதன் நினைவாக இன்றும் திருவரங்கத்தில் நரசிங்கம் தோன்றி மறைந்த இடத்தில் நரசிங்க மூர்த்தி பிரதிஷ்டை செய்து போற்றி வருகின்றனர். தெய்வமே தோன்றி கம்பராமாயணத்தைப் பாராட்டியபின் அவையில் உள்ள சான்றோர்களும் அங்கீகரிக்க கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்டது.

அரங்கேற்றம் செய்த இடத்திற்கு எதிரில், இருக்கும் மேட்டழகிய சிங்கர் உள்ள மண்டபத்தில் கம்பர் பாடிய மூன்று பாடல்கள் எழுதப் பெற்றிருந்தவை மறைவதும், பின் தோன்றுவதுமாக இருந்த நிலைமையை மாற்றித், தமிழகத்தைப் பத்து ஆண்டுகளாக ஆண்டு வரும் தன்னிகரில்லாத முதலமைச்சர் புரட்சித் தலைவர் மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சியில் அறநிலையத்துறை பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு திரு வி.வி.சுவாமிநாதன் அவர்கள் என்னைக் கருவியாக்கி, கம்பர் பாடிய பாடல்கள் மூன்றையும் பளிங்குக் கற்களில் வடித்துக் கம்பருடைய பாக்களுக்கு ஏற்பட்ட நிலையாமையை நீக்கி, நிரந்தர நிலை பெறும் வண்ணம் மேட்டழகிய சிங்கர் மண்டபத்திலேயே அதிகாரிகள், அர்ச்சகர்கள், கோயில் தக்கார் முன்னிலையில் திறந்து வைத்தார். தமிழுக்கு எம்.ஜி.ஆர். ஆட்சியில் செய்த சாதனைகளில் இதுவும் காலம் உள்ளளவும் ஒரு சான்றாக நிலவும். மேற்படி சலவைக் கல்லில் பொறிக்கப்பட்ட கம்பருடைய மூன்று பாக்களும் கீழே தரப்படுகின்றன.



திருவரங்கம் ஆலயத்தில் இடம் பெற்றுள்ள புதிய கல்வெட்டின் முன்னே மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு-மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள்.

**நசைதிறந்து இலங்கப் பொங்கி**
**'நன்றுநன்று' என்ன நக்கு**
**விசைதிறந்து உருமு வீழ்ந்த**
**தென்னவே தூணின் வென்றி**

**இசைதிறந்து உயர்ந்த கையால்**
**எற்றினன் எற்ற லோடும்**
**திசைதிறந்து அண்டங் கீறச்**
**சிரித்தது செங்கட் சீயம்**

**பிளந்தது தூணு மாங்கே**
**பிறந்தது சீயம் பின்னை**
**வளர்ந்தது திசைகள் எட்டும்**
**பகிரண்டம் முதல மற்றும்**
**அளந்ததுஅப் புறத்துச் செய்கை**
**யார்அறிந்து அறைய கிற்பார்**

**விளர்ந்தது ககன முட்டை**
**கிழிந்தது கீழும் மேலும்**

**மன்றலம் துளப மாலை**
**மானுட மடங்கல் வானில்**
**சென்றது தெரிதல் தேற்றாம்**
**சேவடி படியில் தீண்ட**
**நின்றதோர் பொழுதின் அண்ட**
**நெடுமுகட்டு இருந்த முன்னோன்**
**அன்றவன் உந்தி வந்தா**
**னாம் எனத் தோன்றி னானால்**

—டாக்டர் கு. திருமேனி
தமிழ்த்துறைத் தலைவர்,
தேசியக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

# திருவரங்கக் கோயிலில் புதிய கல்வெட்டு

# மகளிர் குல மணிவிளக்கு

சரோஜினி வரதப்பன்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் நூற்றாண்டு முடிவு பெற இருக்கும் நேரத்தில் அவர்களைப் பற்றிச் சில நினைவுகளைக் கூறுவதில் நான் பெருமை அடைகின்றேன். 'பெண்ணிற் பெருந் தக்க யாவுள' என்ற பொன்மொழிக்கும், 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வாக்கின்படியும் நம்முன்னே வாழ்ந்து காட்டியவர் டாக்டர் ரெட்டி அவர்கள், அவருடன் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்புப் பெற்றது என்பெரும் பேறாகக் கருதுகின்றேன். நாங்கள் அவர்களை டாக்டர் அம்மா என்றுதான் குறிப்பிடுவது வழக்கம்.



அனாதைகள் மட்டுமின்றி எல்லோருக்குமே தாயாக வாழ்ந்து காட்டினார்கள் டாக்டர் அம்மா. வாழ்க்கை முழுவதும் போராட்டங்களைச் சமாளித்து வெற்றி பெற்ற பெருமையை அவரது வாழ்க்கை வரலாறு கூறும். சிறு வயதிலேயே சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட அநீதிகளைக் களைய அவர் விரும்பினார். பாரதியாரின் புதுமைப் பெண்ணாகத் திகழ்ந்தார்.

புதுக்கோட்டையில் பிறந்த அவர், பல இடர்ப்பாடுகளைத் தாண்டி, மகாராஜா கல்லூரியில் முதல் பெண் மாணவியாகச் சேர்ந்ததைக் கேட்கும்போது நாம் வியக்காமல் இருக்க முடியாது. இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் விடா முயற்சி, தன்னம்பிக்கை, தளரா உறுதி, காரியத்தைச் சாதிக்கும் திறமை மூலம் அவர் பல முதல் ஸ்தானத்தைப் பிடித்துள்ளார் என்று பார்க்கும்போது அன்னாருடைய சாதனைகள் நமக்கு உற்சாகம் ஊட்டுகின்றன. முதல் பெண் மருத்துவ மாணாக்கராக, முதல் மேல்சபைப் பெண் அங்கத்தினராக, முதல் பெண் தலைவியாக, பல்வேறு சமூகச் சீர்திருத்தச் சட்டங்களைக்கொண்டு வரக் காரணமாக இருந்த அம்மையார் அவர்களின்தொண்டு தமிழகப்பெண்களுக்குப் பெருமை தரக்கூடியது.

சிறந்த மருத்துவராக விளங்கிய டாக்டர் அம்மா பணம் ஈட்டுவதுதான் வாழ்க்கையின் இலட்சியம் என்று நினைத்திருந்தால் எவ்வளவோ சம்பாதித்திருக்கலாம். அடையாற்றில் தன் கணவருடன் மருத்துவத் தொழிலில் ஈடுபட்டிருந்த டாக்டர் அம்மா எங்கள் குடும்பத்தின் மருத்துவர் என்று கூறிக்கொள்ளுவதில் நான் பெருமை அடைகின்றேன்.

நான் பள்ளிச் சிறுமியாக இருந்த காலத்தில் எங்கள் வீட்டிற்கு டாக்டர் வந்துபோனது பசுமையாக எனக்கு நினைவு வருகின்றது. பளபளவென்று மின்னும் பெரிய வைரக் கம்மல், பட்டொளி வீசும் பெரிய கூரை போட்ட காஞ்சீபுரம் புடவை உடுத்தி மிடுக்காக நடந்து வருவார். மயிலாப்பூரில் வசித்த பல செல்வந்தர் குடும்பங்களுக்கு மருத்துவராக விளங்கினார். ரொம்பக் கண்டிப்பு. அதே டாக்டர் அம்மா தேசியப்பற்று மிகுந்தவராக இருந்தமையால் பெருவாரியாகப் பொருளீட்டக் கூடிய மருத்துவத் தொழிலை விட்டுச் சமுதாயத் தொண்டில் ஈடுபட்டார். ஏழை, எளியவர்கள், அனாதைக் குழந்தைகளுக்குப் பணி செய்ய முற்பட்டார். தனக்குக் கிடைத்தபெரும் பதவியையும் உதறித்தள்ளினார். மகாத்மா காந்திஜியின் தேசிய இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அதன் பிறகு அவருடைய வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பம். ஆடம்பர வாழ்க்கை அவருக்கு ஒத்துவரவில்லை. எளிய வாழ்க்கை, தூய கதராடை, ஒரு சன்னியாசி போலத் தன்னுடைய தேவைகளைக் குறைத்து, பெண்கள், குழந்தைகளின் நலத்திற்குத் தன் வாழ்நாள் முழுவதும் செலவிட முடிவு செய்தார்.

டாக்டர் ரெட்டி அவர்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் மிக நெருக்கமான உறவு. என் தகப்பனார் புரசைவாக்கத்தில் குடியிருந்து தனது ஆரம்பக் கல்வி பெற்ற நேரத்தில் டாக்டர் குடும்பமும் புரசையில் வாழ்ந்ததாகவும் அவர்கள் சேர்ந்து பள்ளி போவது குறித்து என் தகப்பனார் சொல்லியிருக்கிறார். அதன் பிறகு தேசிய இயக்கத்தில் ஒன்றாக ஈடுபட்டுள்ளார்கள். பிறகு சட்டசபையிலும் சேர்ந்து பணி புரிந்துள்ளார்கள். என்னுடைய தகப்பனார் அமைச்சராக இருந்த காலங்களில் பலமுறை அவர்களுடன் சென்று நான் டாக்டர் அம்மாவைச் சந்தித்துள்ளேன்.

டாக்டர் அவர்கள் இந்திய மாதர் சங்கத்தின் ஆரம்ப நாட்கள் முதல் சிறந்த ஈடுபாடு கொண்டவர்கள் என்பது என் தாயார் மூலம் எனக்குத் தெரியும். ஸ்ரீமதி மார்கரட் கஸின்ஸ் அம்மையாருடன் டாக்டர் ரெட்டி இந்தியமாதர் சங்கத்தை உருவாக்கியுள்ளார்கள். அதன் பிறகு 1927-ஆம் ஆண்டில்



டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியும் அவரது கணவரும் தமது புதல்வர்களுடன் (1940)

இந்திய மாதர் சங்கம் அகில இந்திய அளவில் வளர வேண்டும் என்று மிகுந்த பிரயாசையுடன் முதல் மாநாடு பூனாவில் கூட்டினார்கள். பெண்கல்வி, பால்ய விவாகத்தைத் தடை செய்வது போன்ற பல முன்னேற்றப் பணிகளில் அகில இந்திய மாதர் சங்கமாகப் பரிணமித்து இதை ஓர் மாபெரும் பெண்கள் இயக்கமாக மாற்றிய பெரும் பணியில் டாக்டர் அம்மா முன்னணியில் நின்றார்கள்.

1931-ஆம் ஆண்டு லாகூரில் நடந்த அகில இந்திய மாதர் மாநாட்டின் தலைவியாக டாக்டர் அம்மா முதல் தமிழ்நாட்டுப் பிரதிநிதியாக விளங்கியது மட்டுமின்றி பல்வேறு சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப் பாடுபட்டார்கள். அதே நேரத்தில் இந்திய மாதர் சங்கத்தையும் சென்னையில் சீரும் சிறப்புமாக நடத்தி வந்தார்கள். இந்திய மாதர் சங்கத்தில் என் தாயார் முக்கிய உறுப்பினராக இருந்து வந்த காலங்களில் நான் அவர்களுடன் கூட்டங்களுக்குப் போவது வழக்கம். இது எனக்கு மிகுந்த உற்சாகத்தையும் சமூக நலப்பணி புரிய ஊக்கத்தையும் அளித்தது. சுதந்திரம் பெற்ற 1947-ஆம் ஆண்டு சென்னையில் அகில இந்திய மாதர் மாநாடு கூடியது. அப்பொழுது என் தாயார் சற்றுசுகவீனமாக இருந்த காரணத்தால் என்னைக் காரிய தரிசியாகத் தேர்ந்தெடுத்தார்கள். எனவே எனக்கு டாக்டர் அம்மாவிடம் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்புகள் நிறையக் கிடைத்தன.

டாக்டர் அவர்களிடம் பணி புரிவது ஒரு பெரும் படிப்பினை, எடுத்த காரியத்தை முடிப்பது, ஓயாது பெண்கள் நலத்திற்கு உழைப்பது, விழிப்புணர்ச்சியுடன் இருந்து உடனடியாக நிவாரணம் செய்ய முற்படுவது போன்ற பல நற்பண்புகள் டாக்டர் அம்மாவிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம். ஏழை, எளியவர், பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடு இன்றிப் பழகக் கூடிய தலைவி டாக்டர் அம்மா. அதே நேரத்தில் நம் முதுகைத் தட்டிக் கொடுத்து நம்மிடம் வேலை வாங்குவதிலும் அம்மா கைதேர்ந்தவர்கள். யாரிடம் என்ன திறமை உள்ளது என்பதை நன்றாக ஆராய்ந்து, பக்குவமாக அவர்களை உபயோகப்படுத்திக் கொள்ளும் சாதுர்யம் அம்மாவிடம் பூரணமாக இருந்தது.

அம்மாவினுடைய சகோதரி புற்று நோயில் மிகவும் கஷ்டப்பட்டதைப் பார்த்த டாக்டர், புற்றுநோய் ஆஸ்பத்திரி ஆரம்பிக்க எண்ணம் கொண்டார். அப்பொழுது மருத்துவர்களில் சிலர் 'புற்றுநோய் தீராத வியாதி, இதற்குச் செலவிடுவது விரயம்' என்று நினைத்தார்கள். ஆனால் டாக்டர் அம்மா ஒரே நோக்குடன், 'துன்புறுபவர்களுக்கு நிவாரணம் அளிப்பதுதான் மனிதாபிமானச்செய்கை' என்பதைஆணித்தரமாக எடுத்துச்சொன்னார்கள். முழுமூச்சுடன் புற்றுநோய் ஆஸ்பத்திரியை இந்திய மாதர்சங்கத்தின் மூலமாகவே தோற்றுவிக்கப் பிரயத்தனம் செய்தார்கள். அதற்கு அரசு நிலம் தேவைப்பட்டது. பிரும்மப்பிரயத்தினம்செய்ய வேண்டியதாய் இருந்தது. என் தகப்பனார் அமைச்சராக இருந்தமையால் அடிக்கடி எனக்கு டெலிபோன் மூலம் டாக்டர் அம்மா நினைவுபடுத்துவார்கள். அவர்களுடைய விடா முயற்சியினால் அரசினர் நிலத்தை ஒதுக்கினார்கள். அப்பொழுது பாரதப் பிரதமராக இருந்த பண்டித ஜவகர்லால் நேரு அடிக்கல் நாட்ட வேண்டும் என டாக்டர் அம்மா விரும்பினார்கள். அப்போது தமிழக முதல் அமைச்சராக அறிஞர் ராஜாஜி இருந்தார். அவர் சம்மதம் அளிக்கவில்லை. டாக்டர் அம்மா விடுவதாக இல்லை. எனக்குப் பலமுறை டெலிபோன் செய்து எப்படியாவது நேருவைச் சம்மதிக்க வைக்கமுயலுமாறு கூறினார்கள். அவர்களின் விடாமுயற்சி பயனளித்தது. நேரு அவர்கள் சம்மதம் அளித்தார். ராஜாஜியின் தலைமையிலே புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்ச்சி மறக்க முடியாதது. மே மாதம் கடும் வெயிலில் பிற்பகல் 11.45 மணிக்கு இந்த விழா எங்களுக்குத் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டது. கொடுத்த நிலமோ காந்திநகர் கனால் ரோடில் வால்போன்ற சிறிய இடம். அஞ்சா நெஞ்சம் படைத்த டாக்டர் அம்மா பொட்டல் காடாக இருந்த இடத்தில் ஒரு தட்டுப்பந்தல் போட்டு எளிமையாக விழா ஏற்பாடு செய்துவிட்டு பாரதப் பிரதமர், ராஜாஜிஆகியோரின் பாராட்டுகள் பெற்றார்கள். அன்று ஜவகர்லால் அடிக்கல் நாட்டிய புற்றுநோய் ஆஸ்பத்திரி இன்று ஆலமரமாகப் பரந்து ஆசியாக் கண்டத்திலேயே முதன்மையான ஆஸ்

பத்திரியாக விளங்கி, பல்லாயிரக் கணக்கானநோயாளிகளின் துயரம் துடைக்கும் சிகரமாக விளங்கு கின்றது என்றால், டாக்டர் அம்மாவின் உழைப்பு திருவினை ஆக்கியது என்பதைச் சொல்ல வும் வேண்டுமா?

இதே போல அனாதைக் குழந் தைகளுக்கு ஒரு முன்னோடியான இல்லமாக ஔவை இல்லத்தைத் துவக்கினார்கள்.

மேலவையில் இருந்த காலத் தில் உருப்படியான பல சட்டங் களைக் கொண்டு வந்தார்கள். தேவதாசி ஒழிப்புச் சட்டம் உலகப் பிரசித்தமானது. பல தாரச் சட்டம் வந்தபோது பல சட்ட உறுப்பினர்களே அதற்கு விரோதமாக இருந்தமையால் சட்டம் அமலுக்கு வரும் தினம் இந்திய மாதர் சங்கத்தின் அங் கத்தினர்களை எல்லாம் ஒன்று திரட்டி Visitors gallory யில் உட் கார வைத்துப் பெண்களின் பலத்தை அரசுக்கு எடுத்துக் காட்டினார்கள். அன்று நானும் அந்தக் கூட்டத்தில் இருந்தது என்னால் மறக்க முடியாது. இவ் வாறு பெண்களுக்கு எந்தக் கோடியில் ஓர் இடையூறு என்று கேட்டாலும் உடனடியாகச் சிறி எழுந்து, காரசாரமாகத் தன்



மருத்துவக் கல்லூரி மாணவி முத்துலட்சுமி

கருத்துரையைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி விடுவார்கள். அதற்குப் பெரும் மதிப்பும் உண்டு.

இப்படிப்பட்ட ஒரு பெரும் தலைவி இம்மாதர் சங்கத்திற்கு இருந்தமையால் அவர்கள் காலம் பொற்காலமாக அமைந்து பல நல்ல பணிகள் புரிய முடிந்தது. எத்தனை பெரும் தேசிய தலைவிகள், உலகத் தலைவிகள் எல்லாம் சென்னையில் டாக்டர் அம்மாவின் தலைமையின் கீழ் இயங்கி வந்த இம்மாதர் சங்கத் தின் விழாக்களில் பங்கு கொண்டு பாராட்டிச் சென்றுள்ளார்கள்.

கடைசியாக இந்திய மாதர் சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட டாக்டர் அம்மா விரும்பினார்கள். அவர்களுடைய கடைசி ஆவலைப் பூர்த்தி செய்ய அன்றுள்ள அரசு மனமுவந்து கபாலீஸ்வரர் தேவஸ்தானத் திற்குச் சொந்தமான பத்து கிரௌண்ட் நிலத்தை இம்மாதர் சங்கத்திற்கு வழங்கினார்கள். தள்ளாத நிலையிலும் டாக்டர் அம்மா நேரில் வந்து அடிக்கல் நாட்டு விழாவில் பங்கு பெற் றார்கள். அதுதான் கடைசி நிகழ்ச்சி. கட்டடம் முடிந்த நேரம் டாக்டர் அம்மா மறைந்து விட்டார்கள். ஆனால் அவர்கள் ஆசியுடன் அந்தக் கட்டடத்தில் இன்று வேலைக்குப் போகும் பெண்கள் 100 பேருக்குரிய ஹாஸ்டல் நல்ல முறையில் நடக் கின்றது. அத்துடன் குழந்தைகள் காப்பகங்கள் 2 செவ்வையாக நடந்து வருகின்றன. அவர்கள் கைபட்ட இடம் எல்லாம் வளர்ந் துள்ளது. அன்று ஐந்து கிளைகள் கொண்ட இம்மாதர் சங்கம், இன்று 60 கிளைகளைப் பெற்று, தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 50 ஆயிரம் பெண்களுக்கு எழுத் தறிவு அளித்துள்ளது என்பதைப் பெருமையுடன் கூறி, இது எங் களது நூற்றாண்டு அஞ்சலி என்று சமர்ப்பிக்கின்றேன்.

ஸ்தாபனங்களை ஆரம்பித் தால் மட்டும் போதாது. அவை செவ்வையாகச் செயலாற்றத் தகுதியுள்ள தொண்டர்கள் தேவை. அம்மாவிற்கு இரண்டா வது வரிசைத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளிப்ப திலும் நல்ல திறமை உண்டு என்பதை நிரூபித்துவிட்டார்கள். இளம் வயதுத் தொண்டர்களி டம் அன்புடன் பேசி அவர்களை ஊக்குவிக்கும் பாங்கு மிகுந்த வர்கள். மேடையில் நம்மைப் பேச வைப்பார்கள். உடனே நம்மை அழைத்து நீ ரொம்ப நன்றாகப் பேசினாய் அம்மா என்று உற்சாகப்படுத்தவும் தவற மாட்டார்கள்.

தேசிய உலக அரங்குகளில் நான் பங்கு கொள்ள நேரிடும் போதெல்லாம் டாக்டர் அம்மா விடம் ஸ்வாதீனமாக ஓடிச் சென்று கருத்துக்கள் கேட்பேன். அவர்களுக்கிருந்த ஞாபகச் சக்தி அபாரமானது. கண்ணை மூடிக் கொண்டு மளமளவென்று கருத்து களை அள்ளி வீசுவார்கள். அவை அனைத்தும் மிக உயர்ந்த கருத்துக்களாகப் பாராட்டப் படும். இவ்வாறு அவர்களது அடிச்சுவட்டில் பயிற்சி பெற்ற நான், அவர்களுக்குப் பிறகு தமிழ் நாட்டிலிருந்து அனைத்திந்திய மாதர் மாநாட்டில் 1980-ல் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட போது, என் தாயாரின் மறைவு எவ்வளவு பாதித்ததோ அதே போல டாக்டர் அம்மா இல்லையே என்ற குறை எனக்கு தலை தூக்கியிருந்தது. ஏனென் றால் என் தாயாரிடம் டாக்டர் அம்மா அடிக்கடி கூறுவார்கள். ‘ஞானசுந்தரம்மா! உங்கள் பெண் ரொம்ப சமர்த்து. சரோஜினியை நான் என் பெண் ணாக ஸ்வீகரித்துக் கொண்டேன்’ என்று அன்பொழுகக் கூறுவார் கள்.

அவர்களின் தீர்க்க தரிசனம் தனக்குப் பின் தான் ஆரம்பித்த ஸ்தாபனங்களை நல்ல முறையில் பேணிப் பாதுகாக்கத் தனது மகன் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி யையும், மருமகள் மந்தாகினி கிருஷ்ணமூர்த்தியையும் நல்ல முறையில் பயிற்சி கொடுத்து விட் டார்கள். அத்துடன் டாக்டர் சாந்தாவின் அயரா உழைப்பு. திறமை, புற்றுநோய் ஆஸ்பத் திரிக்குப் பெரும் பலமாக அமைந்து விட்டது. இவ்வாறாக பல்வேறு துறைகளில் நாட்டின் நலனில் அக்கறை கொண்டு அம்மையார் ஆற்றிய பணிகள் அளவில் அடங்காது.

தமிழக சமூகநல வாரியத்தின் முதல் தலைவியாகவும் பொறுப் பேற்று அரிய சாதனைகள் புரிந்த வர் நம் டாக்டர் அம்மா என்று பார்க்கும்போது சமூக நலத்தில் தொண்டாற்றுபவர்கள் அத் தனை பேரும் அவர் காட்டிய வழியில் செல்வோமேயானால் நாடு நலம் பெறும். அவரைப் போன்ற தேசப்பற்றும் நலிந்த வர்களிடம் அன்பு, ஆதரவு காட்டுவது தைரியமாகப் பெண் களின் உரிமைகளை எடுத்துச் சொல்லுவது, கடமை உணர்ச்சி யுடன் அல்லும் பகலும் உழைப் பது போன்ற திறன் பெற்ற நன்முத்துக்களைத் தமிழகம் ஏராளமாக உருவாக்கட்டும்!

# இரும்புச் சத்து நிறைந்த உப்பு

# இந்தியாவிலேயே முதன்முதலாக...

# தமிழ்நாட்டில் தயாராகிறது!

**நா**ட்டிலேயே முதன்முறையாக தமிழ்நாடு உப்பு நிறுவனம் இரும்புச் சத்து ஊட்டப்பட்ட உப்பைத் தயாரிக்கிறது.

இரும்புச் சத்து ஊட்டப்பட்ட உப்பினால் என்ன நன்மை?

இரத்த சோகை நோய் வராமல் இந்த உப்பு காப்பாற்றும். இரும்புச் சத்து, உணவில் குறைந்து காணப்படுவதால்தான் இரத்த சோகை நோய் ஏற்படுகிறது.

உலகெங்கும் ஏறத்தாழ 500 கோடிப் பேர் இரத்த சோகை நோய் பிடித்தவர்களாக இருப்பதாக உலகசுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. நம்நாட்டில் ஏறத்தாழ 40 சதவிகிதம் பேர் இரத்த சோகை நோய்க்குஆளாகியிருக்கிறார்கள். இவர்களில் 40 முதல் 60 சதவிகிதத்தினர் சிறுவர்கள்;மொத்தத்தில் பெரும் அளவில் பெண்கள்தான் இரத்த சோகை நோய்க்கு ஆளாகிறார்கள்.

தமிழ்நாட்டில் இரத்தசோகை எங்கு அதிகமாகக் காணப்படுகிறது என்பதைக் கண்டறிய 1985-ஆம் ஆண்டில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின்படி தருமபுரி மாவட்டத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்திலும் (பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராஜர் மாவட்டம் ஆகிய பகுதிகளையும் சேர்த்த பழைய மாவட்டப்பகுதி) அதிக அளவில் இரத்த சோகை நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

இந்த ஆய்வின்படி அந்த மாவட்டங்களில் 6 வயதுக்குஉட்பட்ட சிறுவர்களில் 87 சதவிகிதம் பேருக்கு இந்த நோய் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 18 வயது முதல் 44 வயது வரை உள்ள பெண்களில் 84 சதவிகிதம் இரத்த சோகை நோய்க்கு ஆளாகியுள்ளனர்.

மக்கள் நல்வாழ்வில் அக்கறை கொண்ட அரசுக்கு, இரத்த சோகை நோயைச் சமுதாயத்திலிருந்து களைந்தெறிவது பெரும் கடமையாகும். இந்த நோக்கத்தோடுதான் தமிழ்நாடு உப்பு நிறுவனம், இரும்புச்சத்து நிறைந்த உப்பைத் தயாரிக்கவிருக்கிறது.



இராமநாதபுரம் மாவட்டம், வாலி நோக்கத்தில் இரும்புச் சத்து ஊட்டப்பட்ட உப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்களின் ஒரு பகுதியையும்இரசாயனப்பொருள்களையும் ( UNICEF ) ஐ.நா. மன்றக் குழந்தைகள் நிவாரண நிதி அமைப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்காக மத்திய அரசின் உணவு மற்றும் சத்துணவு வாரியம் தேவையான உதவிகளைச் செய்துள்ளது.



ஐந்தாண்டுகளுக்கான நடைமுறைச் செலவு உட்பட ஏறத்தாழ 70 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

வாலி நோக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள இரும்புச்சத்து ஊட்டப்பட்ட உப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை தொடக்கத்தில் ஏழாயிரம் டன், இரும்புச்சத்து ஊட்டப்பட்ட உப்பைத் தயாரிக்கும். இந்தத் தொழிற்சாலையின் மொத்த உற்பத்தித் திறன் 15 ஆயிரம் டன்னாகும்.

இங்குஉற்பத்தியாகும்இரும்புச் சத்துநிறைந்த உப்பு, சமூகநலத் துறை அமைப்புகளுக்கும், முதலமைச்சர் குழந்தைகள் இலவசச் சத்துணவுத் திட்ட சத்துணவுக் கூடங்களுக்கும் முதலில் வழங்கப்படும்.

1987 ஆகஸ்ட் திங்களில் தனது உற்பத்தியைத் தொடங்கவிருக்கிற இந்த நிறுவனம் ஆரோக்கிய வாழ்வுக்கு அடிப்படையான உதவியை வழங்கும் அமைப்பாகத் திகழப்போவது உறுதி.

—நமது செய்தியாளர்

# சிறுபான்மை மொழியினருக்குத் தமிழில் பயிற்சி

தமிழ்நாடு தேர்வாணையத்தால் நடத்தவிருக்கும் இரண்டாம் தமிழ்த் தேர்வில் தேர்வு பெறும் பொருட்டு, தமிழக அரசில் பணியாற்றும் சிறுபான்மை மொழியினருக்கு தமிழில் தீவிரப்பயிற்சி அளிக்க, தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இப்பயிற்சி சென்னை தரமணியில் (அடையாறு மத்திய பாலிடெக்னிக் வளாகம்) பன்னாட்டுத் தமிழ்ப் பயிற்சி நிலையத்தில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயல்நாடுகளில் தமிழ்ப்பயிற்சித் துறையால் நடத்தப்பட்டு வருகிறது. 13-10-1986-லிருந்து 28-10-1986, மேலும் 16-4-1987 லிருந்து 30-4-1987 வரை இரண்டு முறை இப்பயிற்சி நடத்தப்பட்டுள்ளது. அதில் 151 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். அடுத்த பயிற்சி 1987 செப்டம்பர்/அக்டோபர் நடத்தப்பட இருக்கிறது.

2. தேர்வாணையத்தால் நடத்தப்படும் இரண்டாம் மொழித்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டிய அரசுப் பணியாளர்கள், துறைத் தலைமை அலுவலர் வழியாக அவர்களது விண்ணப்பத்தைப் பயிற்சி ஆணையர் மற்றும் செயலர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பயிற்சி 2)த் துறைக்கு அனுப்பலாம். விண்ணப்பம் வந்து சேருவதில் உள்ள தாமதத்தைத் தவிர்ப்பதற்காக விண்ணப்பத்தின் முன்நகலைப் பயிற்சி ஆணையர் மற்றும் செயலருக்கு அனுப்பலாம்.

3. இன்னும் தேர்வு பெற வேண்டிய, அரசுப் பணியில் பணியாற்றும் சிறுபான்மை மொழியினரின் கவனத்திற்கு, மேலே குறிப்பிட்டுள்ள விளம்பரத்தைக் கொண்டு வருவதோடு, தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பணியாளரின் விண்ணப்பத்தை 1-9-1987க்கு முன்னால் அரசுக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு துறைத் தலைமை அலுவலர்கள்/துறை அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

4. விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(1) அலுவலரின் பெயர் மற்றும் பதவியின் பெயர் ...

(2) வேலை பார்த்து வரும் துறைத் தலைமை அலுவலகம்/துறையின் பெயர் ...

(3) பிறந்த நாள் ...

(4) அரசுப் பணியில் சேர்ந்த நாள் ...

(5) இதற்கு முன்னர் இத்தேர்வு எழுத முயற்சி மேற்கொள்ளப் பட்டால் அதன் விவரங்கள் ...

விண்ணப்பதாரரின் கையொப்பம்

பயிற்சி ஆணையர் மற்றும் செயலர்,
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (பயிற்சி 2)த் துறை
சென்னை.

# குறிப்பிடத் தக்க குடிநீர்த் திட்டப் பணிகள்



"அனைத்து மக்களுக்கும் நல்ல குடிநீர் கிடைக்கச் செய்வதே என்னுடைய இலட்சியம் மற்றும் கடமையாகும்" என்று மாண்புமிகு தமிழக முதல்வராக டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பேற்ற முதல் நாளன்று (30.6.77) கொடுத்த உறுதிமொழி மறக்க முடியாததாகும்.

அந்த உறுதிமொழியை நிறைவேற்றிக் காட்டுவதில் — தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும் மேற்கொண்டுள்ள அரிய நடவடிக்கைகள் வியக்கத்தக்கவைகளாகும்.

பருவமழை பொய்த்து — தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்ற இந்நேரத்தில், அந்த இருபெரும் வாரியங்களும் அயராமல் ஆற்றிவரும் அண்மைக்கால அற்புதத் தொண்டுகள் இங்கே தொடர்கின்றன...

ஜூன் திங்களில் பள்ளிகள் - கல்லூரிகள் திறக்கப்பட்டன.

பருவமழை தவறியதால் உண்டான குடிநீர்ப் பிரச்னை காரணமாகக் கல்விக் கூடங்களின் திறப்பு தள்ளி வைக்கப்படக் கூடும் என்றிருந்த சிலரது எதிர்பார்ப்புகள் இல்லையாயின.

சென்னை நகர மக்களுக்குக் குடிநீர் வசதி அளிக்கும் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் யுனைடெட் இந்திய இன்ஸ்யூரன்ஸ் நிறுவனம் ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கியது. இந்நிதியில், சென்னை நகரில் 20 குடிநீர்த் தொட்டிகள் அமைக்கும் நற்பணியின் முதல் கட்டமாக, சாந்தோம் சர்ச் வளாகத்தில் முதல் குடிநீர்த்தொட்டி திறந்து வைக்கப்பட்டது.

அதைத் திறந்து வைத்த சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத் தலைவர் திரு. ஜேப்பியார் பேசுகையில் இதற்கு முன்பாகச் சென்னை நகரின் முக்கிய இடங்களில் 60 குடிநீர்த் தொட்டிகள் திறக்கப் பட்டுள்ளவிவரத்தைத்தெரிவித்தார். "எந்தப் பள்ளியில் - கல்லூரியில் குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பினும் எங்களுக்குத் தெரிவியுங்கள். உடனே குடிநீர் வழங்குகிறோம்" என்றும் அவர் அக்கூட்டத்தில் தெரிவித்தார்.

## தெலுங்கு கங்கைத் திட்டம்

இதற்கிடையில் சென்னைக்குக்கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொணரும் 'தெலுங்கு கங்கை' திட்டப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டு வருகின்றன.

ரூ. 847 கோடி செலவில் நிறைவேற்றப் பட்டு வரும் இத்திட்டம் பற்றி விசாகப் பட்டினம் வந்திருந்த மாண்புமிகு ஆந்திர மாநில நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்து இங்கே நாம் நினைவு கூரத் தக்கதாகும். "தெலுங்குகங்கை திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவோம். இத்திட்டத்திற்காக இதுவரை 220 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு வாக்கில் இத்திட்டம் மூலம் பயன் பெறமுடியும்" என்று கூறியிருக்கிறார் அவர்.



"காவிரி நீர் பிரச்னை தீர, நடுவர் குழு அமைக்கும்படி மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்" என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

கேரள மாநிலத்தில் மேற்குநோக்கிப் பாய்ந்து கடலில் வீணாகும் தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிடும் பிரச்னை குறித்து, முந்திய கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இப்போது அங்கே புதிய அரசு அமைந்திருப்பதால், மீண்டும் இப்பிரச்னை குறித்து இரண்டு மாநிலங்களுக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்த உதவுமாறு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு சங்கரானந்தை வலியுறுத்திக் கேட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், தம்மை வந்து சந்தித்த மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு சங்கரானந்திடம் (10.7.87) காவிரிநீர் பிரச்னையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என வலியுறுத்தினார்.

இதுகுறித்து மைய அரசு விரைவில் முடிவெடுக்கும் என்று தெரிவித்திருக்கிறார் மாண்புமிகு மத்திய அமைச்சர்.



சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் கல்வி நிறுவனங்களுக்கு மட்டும் ஏறத்தாழ 50 லாரிகள் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. லாரிகளில் டேங்கர்கள் மட்டுமல்ல; பத்தாயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள ஃபிளக்ஸி டேங்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.

சென்னை மாநகரின் எல்லாப் பகுதிக்கும் கீழ்ப்பாக்கம் டேங்கரிலிருந்து குடிநீர் வழங்குவதற்குப் பதில், அந்தந்தப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளைப் பயன்படுத்தி ஆங்காங்கே குடிநீர் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தண்டனைக்குரிய பெருங்குற்றம்

குடிநீர்க் குழாய்களைத் துண்டித்துத் தண்ணீர் எடுப்பதும், குடிநீர் வழங்குவதற்குக் காசு வசூலிப்பதும் தண்டனைக்குரியதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரக் காவல் துறை ஆணையரும் இதை வலியுறுத்தியிருக்கிறார். இதைக் கண்காணிப்பதற்காகவே சிறப்புக் காவல் பிரிவொன்று வயர்லெஸ் பொருத்திய வாகனத்தோடு அமைக்கப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகரில் உள்ள 150 வட்டத்திற்கும், வட்டத்திற்கொன்றாக 150 டிராக்டர்களில் குடிநீர் வழங்கப்படுகிறது. இவை தவிர, 160 லாரிகளும் நகரெங்கும் இடையறாது குடிநீர் வழங்கி வருகின்றன.

தண்ணீர் எடுக்கவும், சுத்தப்படுத்தவும், வழங்கவும் மின்சாரம் முக்கியமல்லவா? எதிர்பாராமல் ஏற்படும் மின்தடை தவிர்க்கப்பட ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 20 ஜெனரேட்டர் வாங்கவும் ஏற்பாடாகியுள்ளது.

முட்டுக்காடு சாலை வழியாக ஆழ்குழாய்க் கிணறு மூலம் நீரேற்றித் தென் சென்னைப் பகுதிக்குத் தண்ணீர் வழங்கும் திட்டத்திற்குத்




தமிழக அரசு இரண்டரைக் கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இதன் முதல் கட்டமாக இந்திரா நகர், சாஸ்திரி நகர், காமராஜ் நகர் மற்றும் கஸ்தூரிபா நகரின் ஒரு பகுதி ஆகியவற்றுக்கு ஆழ்குழாய்க் கிணறுமூலம் தண்ணீர் வழங்குவதற்காக ரூ. 60.54 இலட்சத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டம் (17.7.87) சிறப்புறத் துவக்கிவைக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் நாள்தோறும் 12 இலட்சம் காலன் தண்ணீர் வழங்கப்படுவதால் குடிநீர் பிரச்னை எழவில்லை.

போரூர், கொரட்டூர், அம்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஏரிகளை ஆழப்படுத்தவும் அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

## பெண்களுக்கு வேலைவாய்ப்பு

நடைபாதைவாசிகளின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்வதற்காகச் சென்னை நகரெங்கும் ஏறத்தாழ 100 இடங்களில் 'குளுகுளு' குடிநீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இன்னும் பல இடங்களிலும் அதுபோல் வைக்கப் பெருமுயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இத்தொடடிகள் மூலம் குடிநீர் வழங்குவது மட்டுமல்ல; அத்தொட்டிகளைப் பராமரிப்பதற்காகவென ஒவ்வொரு பெண்மணிக்கு வேலையும் வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சென்னை நிருபர்கள் சங்கக்கூட்டத்திற்கு வருகைதந்த சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வடிகால் வாரியத் தலைவர் திரு ஜேப்பியார் —''சென்னை நகரில் ஜப்பான் உதவியோடு 220 கோடி ரூபாய் செலவில் நாள்தோறும் இரண்டுகோடி காலன் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். நெய்வேலி நிலக்கரி மூலம் இயங்கவிருக்கும் இந்த ஆலை மூலம் 17 கோடி ரூபாய் மதிப்புள்ள உப்பு மற்றும் ரசாயனப் பொருட்கள் கிடைக்கும்; அவை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படும். 170 கோடி ரூபாய் வரை இத்திட்டத்திற்காக ஜப்பான் உதவும். இந்த ஆலையின் மூலம் 1500 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்'' என்று தெரிவித்தார்.

பருவமழை பொய்த்த காரணத்தால் சென்னைக்குக் குடிநீர் வழங்கக்கூடிய-புழல், சோழவரம், பூண்டி ஏரிகளெல்லாம் வறண்டு போயிருக்கின்றன. அங்கெல்லாம் பத்திரிகையாளர்களை அழைத்துப் போய்க் காட்டினார்கள் பெருநகரக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத் தலைவர் திரு. ஜேப்பியார், நிர்வாக இயக்குநர் திரு இரா. வரதராஜலு இ.ஆ.ப., இருவரும்.

அப்போது அவர்கள்—''இப்போது, நாள் தோறும் சென்னை வாழ் மக்களுக்கு 4 கோடி காலன் தண்ணீர் வழங்கி வருகிறோம். தொழிற்சாலைகளுக்காக 90 இலட்சம் காலன் வழங்கப்படுகிறது. சென்னை நகரில் உள்ள மக்களுக்குச் சீராகக் குடிநீரை வழங்க ஜூலை முதல் தேதியிலிருந்து ஒருநாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கப்படும்'' என்று தெரிவித்தார்கள்.

''செயற்கை மழை பெய்விக்க ஒரு தனி விமானமும் வாங்கப் பட்டிருக்கிறது. அவ்விமானம் மூலம் அண்மையில் சோழவரம் பகுதியில் 7.5 மில்லி மீட்டர் மழை பெய்விக்கப்பட்டது. வாரிய ஊழியர்கள் 24மணி நேரமும் ஷிஃப்ட் முறையில் பணியாற்றி வருகிறார்கள். பாலாற்றிலிருந்து உலக வங்கி உதவியோடு சென்னை நகருக்குத் தண்ணீர் கொண்டு வர ஒரு திட்டமும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு 60 கோடி ரூபாய் வரை செலவாகலாம்'' என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.



''நேற்றிரவு (25.7.87) செயற்கைமழை பெய்யச்செய்யும் முயற்சி நமக்கு வெற்றி தந்திருக்கிறது. இதன் காரணமாக 3 மணிநேரம் மழை பெய்தது. புழலேரிப்பகுதியில் 30 மில்லி மீட்டர் மழையும், பூண்டி நீர்த்தேக்கத்தில் 24 மில்லி மீட்டர் மழையும் பெய்திருக்கிறது. பாலாற்றிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ. 20 கோடி ஒதுக்கியிருக்கிறார். உலக வங்கி ரூ. 158 கோடி ஒதுக்கியுள்ளது'' என்று நந்தனம் 'ஒய்' பிளாக் குடிநீர்க் குழாய்த்திறப்பு விழாவில் பேசுகையில் குடிநீர் வாரியத் தலைவர் திரு ஜேப்பியார் தெரிவித்தார்.



சென்னையில் உள்ள குடிசை வாழ் மக்களுக்கு, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் பிளாஸ்டிக் குடங்கள் (15.7.87) வழங்கப் பட்டன.

வாரியத் தலைவர் திரு. ஜேப்பியார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு தொழில் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் திரு க. இராசாராம் முதலகட்டமாக 30 ஆயிரம் பேருக்கு பிளாஸ்டிக் குடங்களை வழங்கினார். மொத்தத்தில் ஒரு லட்சத்து 79 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்ட இக்குடம் ஒன்று 15 ரூபாய் 97 காசு விலையுள்ளதாகும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், சென்னைப் பெருநகரக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும் இரவு பகல் கருதாமல் போர்க்கால வேகத்தில் பணியாற்றி வருகின்றன என்பது யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத பேருண்மையாகும்.

—நமது செய்தியாளர்



# கிராமங்களில் குடிநீர் வசதியை அதிகப்படுத்தல்!

கிராமங்களில் குடிநீர் வசதியை மேம்படுத்தும் பொருட்டு குடிநீர் தொழில்நுட்பக் குழுமத்தைச் சென்ற ஆண்டில் மத்திய அரசு துவக்கியது.

ஊரகப் பணிகளில் குறைந்த செலவில் விஞ்ஞானத் தொழில் நுட்ப உதவியுடனும், தேசியப் பரிசோதனைக் கூடங்களின் உதவியுடனும் குடிநீர் வழங்குவது இதன் நோக்கம். இதன் முதல்கட்டப் பணியாக இந்தியாவில் 11 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழகத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டில் இத்திட்டம் துவக்கப்பட்டது.

நடப்பு ஆண்டில் தென்னார்க்காடு மற்றும் சேலம் மாவட்டங்களும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.—

இத்திட்டத்தின் கீழ் 1307 குடியிருப்புகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர் வழங்கத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. ரூ. 21 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை ஒன்று மத்திய அரசுக்கு ஒப்புதலுக்காக அனுப் பப்பட்டுள்ளது. முதல் கட்டமாக முற்றிலும் குடிநீர் வசதியில்லாத 496 குடியிருப்புகளுக்கு நீர் ஆதாரம் தோற்றுவிக்க ரூ. 2 கோடியை மத்திய அரசு அனுமதித்துள்ளது.

இத்திட்டத்தின் மற்ற பிரிவுகள் பற்றியும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து செப்டம்பர் மாதத்திற்குள் மத்திய அரசு ஒப்புதலுடன் திட்டப் பணிகள் துவக்கப்படும். இத்திட்டத்தின் முழுப் பணிகளும் 1989ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்படும் நீர் ஆதாரங்களை இரண்டாண்டுகளுக்குப் பராமரிக்கத் தேவையான நிதியை மத்திய அரசு அளிக்கும்.

—மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் (16-7-87) செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தது.



# முனுசாமியின் முன் யோசனை




R K SWAMY/NIA/2977 TM

முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

(ஜெனரல் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

# சுகாதாரத் துறையில்

## ஊர்தி ஓட்டுநர் பணியிடைப் பயிற்சி

வெ. அன்பழகன், இயக்குநர், மாநிலச்சுகாதாரப் போக்குவரத்துத் துறை

தமிழ்நாட்டில் மருத்துவத்துறையைச் சார்ந்த மாவட்ட மருத்துவமனைகள், தாலுக்கா மருத்துவமனைகள, காசநோய்த் திட்டம், தொழுநோய்த் திட்டம். மருத்துவக் கல்வித் துறையைச் சார்ந்த பெரிய அரசு மருததுவமனைகள் மற்றும் கல்லூரிகள், பொதுச்சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறையைச் சார்ந்த பல திட்டங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், குடும்ப நலத் திட்டத்தைச் சார்ந்த நிலையங்கள், இந்திய மருத்துவத்துறை மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டுத்துறை ஆகிய துறைகளைச் சார்ந்து ஏறத்தாழ 2,000 ஊர்துகள் உள்ளன. அவற்றில் சுமார் 1,800 ஊர்திகள் ஓடும் நிலையிலும், சுமார் 200 ஊர்திகள் கழிக்கப்பட வேண்டிய ஓடா நிலையிலும் உள்ளன. மேற்கூறிய துறைகளைச் சார்ந்த ஊர்திகளின் பராமரிப்பு, பழுதுபார்ப்பு வேலைகளைத் தமிழ்நாடு மாநில சுகாதாரபபோக்குவரத்துத் துறை கவனித்து வருகிறது. 1981 ஜூலையில் தொடங்கப்பட்ட இத்துறை தனது பணியினைச் செவ்வனே செய்வதன் மூலம் சுகாதாரம் மற்றும் மருத்துவப் பணிகள் தமிழ்நாட்டில் தங்கு தடையின்றி நடை பெற ஒரு காரணமாக உள்ளது.

இந்தத் துறையில் ஒரு மத்தியப் பணி மனையும், ஆறு மண்டலப் பணிமனைகளும் இருக்கின்றன. அத்துடன் 9 மாவட்டப் பணிமனைகளும், 20 நடமாடும் பணிமனைகளும் உள்ளன. மேலே கூறியுள்ள துறைகளைச் சேர்ந்த ஊர்திகளை, அவைகளின் தலைமையகத்திலேயே, நடமாடும் பணிமனையைச் சார்ந்த தேர்ந்த ஊழியர்கள், பராமரித்துச் சோதனை செய்து, ஊர்திகள் செவ்வனே ஓட வழி வகுக்கின்றனர். மத்திய மற்றும் மண்டலப் பணிமனைகளில் பெரும் பழுதுகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. மாவட்டப் பணிமனைகளில் இரண்டாம் நிலை பழுது பார்க்கும் வேலை செய்யப்படுகிறது. உடற்கூடு பழுதுகள் பார்க்க இத் துறையில் தற்போது போதிய வசதிகள் இல்லாததால் தமிழ்நாடு அரசு அங்கிகாரம் பெற்ற தனியார் பணிமனைகளில் பழுதுகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

இத்துறைகளைச் சார்ந்த வாகனங்களை ஓட்டுவதற்கு, ஆங்காங்கு, ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள் ஓட்டுநர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் வாகனங்கள் ஓட்டும் அனுபவத்தோடு மட்டுமே பணியில் சேர்கிறார்கள். இந்த ஓட்டுநர்கள் வாகனங்களை ஓட்டும் பயிற்சியோடு அன்றாடம் பராமரிக்கும் திறம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். திருச்சியில் உள்ள தமிழ்நாடு மாநிலச் சுகாதாரப் போக்குவரத்துத் துறையைச் சார்ந்த மத்திய பணிமனையில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி கடந்த ஒரு வருடமாக இயங்கி வருகிறது. இந்த ஓட்டுநர்கள் பயிற்சிப் பள்ளியில் ஓட்டுநர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பணியிடைப் பயிற்சிக்காலம் இரண்டு வாரங்கள். இந்தக் காலத்தில் ஓட்டுநர்களுக்கு வாகனங்களைப் பற்றிய குறிப்புகள், வாகனங்களை இயக்கும் முறை, வாகனங்களின் பகுதிகளைப் பற்றிய குறிப்புரைகள், அவை இயங்கும் விதம், இன்ன பிற, விரிவாகச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. ஓட்டுநர்களுக்கு வாகனங்களில் மிக முக்கியமாக தினசரி கவனிக்க வேண்டிய பராமரிப்புமுறை, வாராந்திர பராமரிப்பு முறை, மாதாந்திர பராமரிப்பு முறை, ஆறு மாத காலத்திற்கு ஒரு முறை செய்ய வேண்டிய பராமரிப்பு ஆகியவை பற்றிப் பயிற்சி அளிப்பதோடு வாகனங்கள் ஓட்டுவதற்குச் சரியான வழிமுறைகள் பற்றியும் அறிவ்க்கப்படுகிறது. வாகனங்களின் இயக்கத்தில் அவற்றிற்கு என்னென்ன தேய்மானம் மற்றும் உடைபாடுகள் ஏற்படுகின்றன என்பது பற்றி விளக்கப்படுகின்றது. ஒழுங்காக ஓட்டும் முறைகள் பற்றியும், தவிர்க்கப்பட வேண்டியவை யாவை, செயல் முறைப்படுத்தப்பட வேண்டியவை யாவை என்பது பற்றியும் அறிவிக்கப்படுகின்றன. அவையாவன :—



**செய்ய வேண்டியவை**

எண்ணெய்யை எப்போதும் சுத்தமாக வைக்க வேண்டும்.

இன்ஜின் ஆயில் தொட்டியின் அளவு சரியாக இருக்கிறதா எனப் பார்க்க வேண்டும். தேவைப்பட்டால் தேவையான அளவிற்கு எண்ணெய் ஊற்ற வேண்டும்.

மசகு எண்ணெய் அளவுகோலை அதனுடைய இடத்தில் சரியாகப் பொறுத்தி எண்ணெய் ஊற்றும் வாயைச் சரியாக மூடவேண்டும்.

ரேடியேட்டரில் நீர்மட்டம் கழுத்து மட்டும் இருக்கவேண்டும். தேவைப்பட்டால் நிரப்பவும்.

ரேடியேட்டர் மூடி சரியாக மூடி இருக்க வேண்டும் சீல் சரியாக உள்ளதா எனப் பார்க்க வேண்டும்.

பயணத்திற்கு முன் தேவையான எரிபொருள் தடையில்லாமல் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் காற்று சுத்திகரிப்பில் சரியான அளவிற்கு எண்ணெய் இருக்கிறதா



எனச் சோதனை செய்து வாரம் ஒருமுறை சரியான அளவிற்கு எண்ணெய் நிரப்ப வேண்டும்.

மசகெண்ணெய், எரிஎண்ணெய், தடைஎண்ணெய், ஒழுக்குகள் உடனுக்குடன் சோதிக்கப்பட வேண்டும்.

அனைத்து போல்ட்களையும், நட்டுகளையும் சரியான இறுக்கத்தில் வைக்க வேண்டும்.

உருளைப்பட்டைகளிலுள்ள காற்றழுத்தத்தினைச் சோதிக்க வேண்டும்.

வாகனத்தில் பொருத்தப்பட்டு இருக்கும் பட்டைகளும், உதிரிப் பட்டையும் சரியான காற்று அழுத்தத்தோடு இருக்க வேண்டும்.

அவசியக் கருவிகளைப் பார்த்து வைக்கவேண்டும்.

**செய்ய வேண்டாதவை**

எண்ணெய் சரியாகச் சூடாகும்வரை இன்ஜின் சுழற்சியை அதிகமாக்கக் கூடாது.

இன்ஜின்சுழற்சியைஅதிகமாக்கும்போது எச்சரிக்கை விளக்கு எரியா விட்டால் இன்ஜினை மேலே இயக்கக் கூடாது.

அவசியம் இல்லாதபோது எந்த மாறுதலையும் செய்யக்கூடாது.

ரேடியேட்டரில் தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தால் இன்ஜினை மேலே இயக்கக்கூடாது.

பேன் பெல்ட்டைச் சரி செய்ய மறக்கக் கூடாது.

இன்ஜினை சீரான வேகத்தில் ஓட்டாமல் வாகனத்திற்குச் சிரமம் தரக் கூடாது.

தொடர்ந்து இன்ஜினுக்கோ, வாகனத்திற்கோ அதிகச் சுமை ஏற்றக் கூடாது.

மலைச் சரிவுகளின் கீழ் வரும்போது வண்டிகளை நிறுத்தக் கூடாது.

கிளட்ச் பெடல் மீது எப்போதும் கால்வைத்து ஓட்டக் கூடாது.

மின்கலத்தில் பொருத்திகள், மின் கலத்தின் நீர் மட்டங்களைச் சோதனை செய்ய மறக்கக்கூடாது.

தடையைத் தவறாக உபயோகிக்கக்கூடாது.

வாகனங்களை உரிய காலத்தில் பராமரிக்க மறந்து விடக்கூடாது.

சந்தேகம் ஏற்படுங்கால் அனுமதிக்கப்பட்ட தொழிற்சாலைகளிலோ, பராமரிப்பு நிலையங்களிலோ காண்பிக்க வேண்டும். ...

ஒரே உற்பத்தியாளரின் மசகெண்ணெய் உபயோகிக்க வேண்டும்.

எஸ்.ஏ.இ. 30 அல்லது 40 போன்ற மசகெண்ணெய் பெட்ரோல் அல்லது டீசல் வாகனங்களுக்கு உபயோகிக்க வேண்டும்.

வாகனம் ஓடிக்கொண்டிருக்கும்போது ஓட்டுநரின் கவனம் சாலையிலும் சாலையில் போகும் மற்ற வாகனங்களிலும் கவனிப்பாக இருக்க வேண்டும்.

எந்தத் தவறையும் இதுதான் என்று அனுமானிக்காமல் சரியான அனுமதிக்கப்பட்ட பராமரிப்பு நிலையத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.

ஓட்டுநர்கள் வாகனங்களை ஓட்டும்போது அருகில் இருப்பவர்களிடம் சளசளவென்று பேசக் கூடாது.

வாகனங்களை ஓட்டும்போது, ஓட்டுநர்கள் மதுபானங்களை அருந்தியிருக்கவோ அருந்தவோ கூடாது. வாகனங்களை இயக்கும்போது புகை பிடிக்கக் கூடாது.

அசதியான நேரத்திலும், சோர்வுற்ற நேரத்திலும் குழப்பம் அடைந்த நேரத்திலும் நெடுந்தூரம் பயணம் செய்யக் கூடாது.



மேலே சொன்னவையோடு எந்த முறையில் வாகனங்களை இயக்கினால் கொடுக்கப்பட்ட எரிபொருளுக்கு அதிகமான தூரத்தைக் கொடுக்க முடியும்; சிக்கனமாக எரிபொருள் செலவு, மசகெண்ணெய்ச் செலவு செய்ய முடியும் என்பதனைப் பற்றியும், பல செயல் முறைகளைப் பற்றியும், வாகனங்களில் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வழி முறைகள், செயல் பாடுகள் பற்றியும் அறிவிக்கப்படுகின்றன.

இந்தப் பணியிடைப் பயிற்சிக்குப் பின் ஓட்டுநர்களின் வாகனம் ஓட்டும் திறமையும் கடமை உணர்வும், வாகனங்களின்பால் தனிக் கவனமும், அக்கறையும் குறிப்பிடும் அளவுக்கு அதிகரித்திருக்கின்றன என்ற கருத்து, வாகனம் உபயோகிக்கும் அலுவலர்களிடையே பரவலாக உள்ளது. பணியிடைப் பயிற்சி பெற்ற ஓட்டுநர்களும் இப்பயிற்சியினால் ஏற்பட்டுள்ள தனித்திறமையை உணர்ந்து புத்துணர்வு கொள்கிறார்கள்.

இதுவரை பணியிடைப் பயிற்சி துவங்கிய ஓராண்டில், ஒரு தொகுதிக்குச் சுமார் 20 ஓட்டுநர்கள் வீதம் 20 பயிற்சித் தொகுதிகள் சிறப்பாக முடிந்துள்ளன. வருங்காலத்தில் இம்மாதிரிப் பணியிடைப் பயிற்சியினால் விபத்துகள் நிகழாமல் தடுக்க இயலும் என்ற எண்ணத்தில் இந்தத் துறை நமது நாட்டிற்கும், மக்களுக்கும் செய்து வரும் தொண்டில் வீறுநடை போடுகிறது.

# குடிசைவாழ் மக்களுக்குக் குடங்கள்



குடிசையில் வாழும் மக்கள் தண்ணீர் சேகரித்து வைத்துக் கொள்வதற்காக பிளாஸ்டிக் குடம் இலவசமாக வழங்கப்படும் என்று முந்திய சட்டமன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் திட்டத்தின் முதற்கட்டம் 15-7-87 அன்று சைதாப்பேட்டையில் தொடங்கி வைக்கப்பட்டது.

விழாவிற்கு வந்திருந்தோரை, சென்னை குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் திரு இரா. வரதராஜுலு, இ.ஆ.ப. வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது :

"சென்னை குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்குப் பாலாற்றிலிருந்து 20 மில்லியன் காலன் நிலத்தடி நீர் கொண்டு வர ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஜுலையில் மேலும் ஆயிரம் ஆழ்துளைக் குழாய்களும் ஆகஸ்டு மாதத்தில் மேலும் ஆயிரம் ஆழ்துளைக் குழாய்களும் அமைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர, தண்ணீர் டாங்குகளும் கூடுதலாக்கப்படும்.

"போர்க்கால அடிப்படையில் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை குடிநீர் வாரியம் சமாளித்து வருகிறது. சென்னை நகரின் தண்ணீர்ப் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டுமக்கள்விவேகமாக இருக்கிறார்கள். மூன்று பெரிய ஏரிகளிலும் தண்ணீர் இல்லாதநிலையில் ரூ. 5 கோடி செலவில் நிலத்தடி நீர் எவ்வாறெல்லாம் கொண்டுவரப்படுகிறது என்பதை மக்கள் தெரிந்து வைத்துள்ளனர்."

தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி

"சென்னை நகரில் 40 லட்சம் மக்கள் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் தண்ணீர் தரும் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறது குடிநீர் வடிகால் வாரியம். ஏரிகள் வறண்டு கிடக்கும் நிலையிலும் சுற்றுப்புறங்களில் எங்கெல்லாம் நிலத்தடி நீர் கிடைக்கிறதோ அங்கிருந்தெல்லாம் நீரைச் சென்னைக்குக் கொண்டு வருகிறது வாரியம். ஒரு நாளில் 12 முதல் 14 மணி நேரம் வரை வாரியத்தின் ஊழியர்கள் உழைத்து வருகின்றனர்.

நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்ற சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியத் தலைவர் திரு ஜேப்பியார் தமது உரையில் தெரிவித்தார்.:

"இன்று முதல் கட்டமாக 30 ஆயிரம் பேருக்கு இலவச பிளாஸ்டிக் குடங்கள் வழங்கப்படுகின்றன. இம்மாதம் 25-ஆம் தேதிக்குள் சென்னை நகரில் உள்ள குடிசை வாழ் மக்கள் சுமார் ஒரு இலட்சத்து 79 ஆயிரம் பேருக்கு பிளாஸ்டிக் குடம் வழங்கப்பட்டு விடும். ஒரு குடத்தின் விலை ரூ. 15.97. இதற்காகும் மொத்தச் செலவு 28 இலட்சத்து 62 ஆயிரத்து 210 ரூபாய்.

"ஏழு மாதங்களுக்கு முன்னர் அண்ணா நகரில் ரூ. 15 கோடி செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை முதல்வர் எம். ஜி. ஆர் துவக்கி வைத்தார். கீழ்ப்பாக்கம் நீர்த்தேக்கத்தில் தண்ணீர் வந்த பிறகே அது நிறைவேற்றப்படும். திருவான்மியூர், இந்திராநகர் குடிநீர்த் திட்டம் ரூ. 2.5 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வைஜயந்திமாலா பாலி பேசுகையில், "குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் தமிழக அரசும், குடிநீர் வாரியமும் சிறப்பாகச் சேவை புரிகின்றன" என்று குறிப்பிட்டார்.

சைதைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு சைதை துரைசாமி பேசுகையில், "சென்னை நகரில் உள்ள தனியார் தெருக்களில் அடிப்படை வசதிகள் மற்றும் பாதாளச் சாக்கடைகள் அமைப்பதற்கு ரூ. 5 கோடி செலவிடப்பட உள்ளது" என்று தெரிவித்தார்.

"மற்றப் பகுதிகளில் வாழும் குடிசைவாழ் மக்களுக்கு நாளை முதல் இலவசக் குடங்கள் வழங்கப்படும்" என்று கூறினார் சென்னை மாவட்ட ஆட்சியாளர் திரு புஜங்கராவ் இ.ஆ.ப.

இலவச பிளாஸ்டிக் குடம் வழங்கும்திட்டத்தைத்தொடங்கி வைத்த மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு க.இராசாராம் தெரிவித்தார்:

"எல்லாருக்கும் தண்ணீர் கிடைக்க வேண்டும் என, தாய் மனத்து முதல்வர் எம். ஜி. ஆர் அவர்கள் எல்லாவித முயற்சிகளையும் எடுத்து வருகிறார்.

"புழல் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி ஆகியவற்றை ஆழப்படுத்தி நீரைத் தேக்கி வைக்கத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. சுதந்திரம் அடைந்த 40 ஆண்டுக்கால வரலாற்றில் யாரும் செய்யாத வகையில் ஏழை மக்களுக்கு இலவசக் குடங்களையும் இப்போது வழங்குகிறார் நமது முதல்வர். அவர் ஏழைகள் படும் துன்பங்களை அனுபவித்து அறிந்தவர். அதனால்தான் அவர் ஏழைகள் நலம் பெற சத்துணவு போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்."

சென்னை குடிநீர் வாரியப் பொறியியல் இயக்குநர் திரு சிவ. தெய்வமணி நன்றி கூறினார்.

(நமது செய்தியாளர்)




*நீலகிரி மாவட்டத்தில்*

# வனத் துறைக்கு கம்பி இல்லாத் தகவல் தொடர்பு

நீலகிரி மாவட்டத்தில் மொத்த நிலப்பரப்பில் வனங்கள் மட்டும் 53 விழுக்காடுகள் ஆகும். எனவே மாவட்டத்தில் சரிபாதியாக உள்ள வனத்துறையின் செல்வங்கள் பாதுகாக்கப்பட்டால்தான் இம்மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளும் மக்களின் முன்னேற்றமும் தொய்வின்றித் தொடர முடியும். ஆனால் இம்மாவட்டத்திலுள்ள அரசு வனக்காடுகளில் யானை வேட்டை மற்றும் சந்தனமரக் கடத்தல் ஆகியவை தற்போது வனத்துறையை எதிர்நோக்கியுள்ள இருபெரும் பிரச்சினைகளாக உள்ளன. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வாக 3.5.87 அன்று உதகமண்டலம் அரசு வனத்துறை ஓய்வு விடுதியில் கம்பியில்லாத் தகவல்தொடர்புத் தொகுப்பினை மாண்புமிகு செய்தி, சுற்றுலா, மின்சாரம் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் துவக்கி வைத்தார்.

வனச் செல்வங்கள் களவாடப்படுவதைத் தடுக்கும் வனத்துறை அதிகாரிகளின் பணிக்கு உதவும் வண்ணம் ரூ.17 லட்சம் செலவில் ''வயர்லஸ்'' வசதி செய்யப்பட்டுள்ளது. **இப்படி வனத்துறைக்கு வயர்லஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது இந்தியாவிலேயே இதுதான் முதல் தடவையாகும்.**

நீலகிரி மண்டல வனப்பாதுகாவலா திரு வி.ஆர். சித்திரபூ, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே. கல்லன், திரு கே. உச்சிகவுடர் தமிழ்நாடு சுற்றுலா இயக்குநர் திரு ராஜ்குமார் மற்றும் தலைமை வனவிலங்குக் காவலர் திரு பத்மநாபன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.எஸ்.ஸ்ரீபதி அவர்கள் தலைமை தாங்கிய இவ்விழாவில் மாண்புமிகு தமிழக அரசு செய்தி, சுற்றுலா, மின்சாரம் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. வி.வி. சுவாமிநாதன் அவர்கள் மாவட்டத்திலுள்ள வன மையங்களுக்கும் உதகமண்டலத்திற்கும் கம்பியில்லாத் தகவல் தொடர்புத் தொகுப்பினைத் துவக்கி வைத்து அதற்கான உரிமத்தை நீலகிரி மண்டல வனப் பாதுகாவலர் திரு சித்திரபூ அவர்களிடம் வழங்கினார்.

இவ்விழாவில் அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில், 'நீலமலை பழுப்பு மலையாக மாறி வருகிற அவலநிலை தடுக்கப்பட வேண்டுமென்றும், வனக்காட்டில் உள்ள சந்தன மரங்கள், ஈட்டி மரங்கள், யானைத் தந்தம் ஆகியவற்றைத் திருடும் சமூக விரோதிகள் பயன்படுத்தி வருகிற நவீன ஆயுதங்களுக்கு ஈடாக வனத்துறை அலுவலர்களுக்குத் துப்பாக்கிகள் மற்றும் வெடி மருந்துகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், தற்போது வனச்செல்வங்களைத் திருடுபவர்களைக் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்து, கடுங்காவல் தண்டனை அளிக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், பள்ளியில் படிக்கும் மாணவர்கள் வருடம் ஒன்றுக்கு 5 மரங்கள் நட்டு வளர்க்கச் செய்தால் மாநிலத்தில் 1.5 கோடி மரங்கள் வளரும் என்றும், மாணவர்களின் இம்மாதிரியான பணிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் மதிப்பெண் தருவதன் மூலம் வனங்கள் விரிவுபடுத்தப்படலாம் என்றும், ஜப்பானில் கடற்கரையில் காற்று வீசி மண்சரிவு ஏற்படுவதை மரம் நட்டு காற்றுத் தடுப்பான்கள் அமைத்து மண்வளத்தைப் பாதுகாப்பது போல் நம் நாட்டில் முன்னேற்றப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும்' குறிப்பிட்டார்.

நமது நாட்டிற்கு முன்னோடி என்று சொல்லத்தக்க வகையில் இம்மாவட்டத்தில் வனத்துறைக்குக் கம்பியில்லாத் தகவல் தொடர்புத் தொகுப்பினை வழங்கியதன் மூலம் இனிவரும் ஆண்டுகளில் வனச் செல்வங்கள் களவாடப்படுவது விரைவாகக் கண்டுபிடிக்கப்பட்டு வனவளமும், வன வருவாயும் நிச்சயம் கூடும் என்று நம்பலாம்.

# தமிழகத்தின் முதலாவது ஊர்க்காவல் படைப் பயிற்சி-தகவல் மையம்



தமிழக அரசு தலைமைக்காவல் துறை அதிகாரியும் ஊர்க்காவல் படை கமாண்டன்ட் ஜெனரலுமான திரு கே.ரவீந்திரன், இ.கா.ப., அவர்கள் 26.5.87 அன்று உதகமண்டலத்தில் ஊர்க்காவல் படைப் பயிற்சி மற்றும் தகவல் மையத்தைத் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு ஊர்க்காவல் படை ஐ.ஜி. திரு.வி.வைகுந்த் அவர்கள் தலைமை வகித்த இவ்விழாவில் ரூ. 3.64 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள ஊர்க்காவல் படை பயிற்சி மையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் திரு கே. ரவீந்திரன் அவர்கள் தமிழகத்தில் முதலாவதாக இத்தகைய மையம் திறக்கப்படுவதாகவும், இம்மாவட்டத்தின் இயற்கையையும் சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாப்பதில் ஊர்க்காவல் படையினரின் பணி பாராட்டத்தக்க வகையில் உள்ளதாகவும், இனி இங்குள்ள ஊர்க்காவல் படையினர் இலவசமாக மருத்துவ முகாம்களைத் தொடர்ந்து நடத்துவதில் ஈடுபட வேண்டுமென்றும், பல்வேறு இனத்தாரிடையே சகிப்புத்தன்மையையும், கட்டுப்பாட்டு உணர்வினையும் பரப்ப வேண்டுமென்றும்' குறிப்பிட்டார்.

விழாவிற்குத் தலைமை வகித்த திரு வி.வைகுந்த அவர்கள் தனது உரையில் 'நீலகிரி மாவட்டத்தின், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதில் இங்குள்ள ஊர்க்காவல் படையினர் பொதுமக்களிடத்தில் ஓர் எழுச்சி உணர்வினை ஏற்படுத்தியுள்ளதாகவும், நமது நாட்டிலேயே இம்மாவட்ட ஊர்க்காவல் படையினர் மட்டுமே இத்தகைய சிறப்பான பணியில் ஈடுபட்டுள்ளதாகவும், இன்று இங்கு திறக்கப்பட்டுள்ள இம்மையத்தில் ஒரே சமயத்தில் 50 பேர்களுக்குப் பயிற்சியளிக்க முடியும்' என்றும் குறிப்பிட்டார்.



இவ்விழாவில் உரையாற்றிய நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., அவர்கள் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புப் பற்றிப் பொது மக்களிடத்தில் விழிப்பு ஏற்படும்படி முனைப்பு இயக்கம் நடத்தப்பட வேண்டுமென்றார். மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் திருமதிஅர்ச்சனா இராமசுந்தரம் அவர்கள் ஊர்க்காவல் படை நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை வாசித்தார். மேலும் இவ்விழாவில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட அலுவலர், திரு எஸ். ராமசுந்தரம், கோயம்புத்தூர் போலீஸ் டி:எஸ்.பி. திரு பி. வி. சந்திரகிஷோர், ஊர்க்காவல் படை முன்னாள் ஏரியா கமாண்டர்கள் திரு டி. எம். சுப்பிரமணியம், கே.ஆர். ராமகிருஷ்ணன் ஆகியோரும் சிறப்புரை ஆற்றினர்.

விழா துவக்கத்தில் ஊர்க்காவல் படை உதவி கமாண்டன்ட் திரு கே.ஆர். மணி அனைவரையும் வரவேற்றார். ஏரியா கமாண்டர் திரு.என்.நடராஜன் நன்றி கூறினார்.

**அ. சந்திரசேகரன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**உதகமண்டலம்.**

# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



**வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!**

**உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ½%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.**

**மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.**

TNSC BANK

**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001**

**TNSC—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி**

TNSC BANK/184

# புரட்சிக்கவிஞருக்கு திருச்சியில் விழா

பாவேந்தர் பாரதிதாசன்அவர்களின் 97-ஆவது பிறந்த நாள் விழா திருச்சி நகரில் 9-7-87 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

பிற்பகல் 4 மணி அளவில் நாயன இசையுடன் விழா தொடங்கியது.

விழாவுக்கு வந்திருந்தோரை, செய்தி மக்கள் தொடர்புத்துறை



துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் வரவேற்றுப் பேசினார்.

அரசவைக் கவிஞர் புலவர் புலமைப்பித்தன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. பாவேந்தர் பார்வையில் பொதுவுடைமை என்னும் தலைப்பில் கவிஞர் மணல்மேடு குருநாதனும், பாவேந்தர் பார்வையில் மொழிப் பற்று என்ற தலைப்பில் கவிஞர் தங்க அன்புவல்லியும் கவிதை பாடினர்.

பின்னர் சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி மாணவியர் பாவேந்தர் பாடல்களையும், வேறுசில பாடல்களையும் பாடி, மக்களை மகிழ்வித்தனர்.

அதன் பின்னர் பேராசிரியர் டாக்டர் எஸ். பாலச்சந்திரன் பாவேந்தரின் கவிதைத் திறன் குறித்து உரையாற்றியும் இசை பாடியும் விளக்கினார். அவர் குறிப்பிட்டதாவது :

''20-ஆம் நூற்றாண்டில் மாபெரும் எழுச்சியை - வரலாற்றை-சிந்தனை ஓட்டத்தை-தமிழ் இயக்கத்தை - சமுதாய - உணர்வை - தேசியக் கனலை - மானிடக்கோட்பாட்டை - பண்பாட்டை-மிகச் சிறந்த முறையில் பாடிய கவிஞர் ஒருவர் உண்டென்றால் அவர்தான் பாரதிதாசன்.

'மானிடத்தின்மகத்துவத்தைக் கவிதையில் தீட்டிக்காட்டிய அந்த மகத்தான கவிஞர் மாநிலக் கவி அல்லர் - உலகப் பெருங்கவி ஆவார். மக்களுக்கு வாழ்க்கையைக் கொடுக்கின்ற - பண்பாட்டைக் கொடுக்கின்ற கவிதை, அவரது கவிதை''

மாலையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்திற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசிய செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூர சுந்தரபாண்டியன் இ.ஆ.ப. அவர்கள் குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாடு அரசு, தமிழ்நாடும் அரசு! தமிழர் நலம் பேணும் அரசு. தமிழுக்குப் பாடுபட்ட பெருமக்களை மறக்காத அரசு. வீரர்களைப் போற்றாத நாட்டில் வீரர்கள் தோன்ற மாட்டார்கள்; கவிஞர்களைப் போற்றாத நாட்டில் கவிஞர்கள் தோன்ற மாட்டார்கள் என்ற கருத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன வேறுபாடு இன்றி சாதி மத வேறுபாடு இன்றி பல பெருமக்களுக்கு விழா எடுத்து வருகிறார்.

''இந்தியாவில் முதன் முதலில் குடும்ப நலத்தின் சிறப்பைக் குறித்துக் கவிதை பாடிய பெருமை பாவேந்தருக்கு உண்டு''

பாவேந்தர் பாரதிதாசனின் திருவுருவப்படத்தை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் திறந்து வைத்தார்.

அடுத்து, முசிறி சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ். ரத்தின வேலு பேசுகையில்,

''சமுதாயச் சிந்தனைகளைத் தமிழ் மக்களுக்குத் தந்த பாரதி யார் இலக்கணம் என்றால், அதற்கு உரை நடையாக-தெளி வுரையாகத் திகழ்ந்தவர் பாவேந்தர் பாரதிதாசன்'' என்று தெரிவித்தார்.

அடுத்து உரையாற்றிய திரு வெறும்பூர் சட்டமன்ற உறுப் பினா திரு அண்ணாதாசன் குறிப் பிட்டார்:

''சுதந்தர வேட்கையை அழ காக-ஆழமாகப் பதிய வைத் தாரே பாரதி, அவரது பாணியில் அவர் விட்டுச் சென்ற சிந்தனை களை-நாட்டு நலத்தை - சமு தாய மறுமலர்ச்சியை மக்களுக்கு எடுத்துச் சொல்லிப் புரட்சிக்கவி என்று புகழப் பெற்றவர் பாவேந் தர் பாரதிதாசன்.''

அடுத்து, கதர் கிராமத்தொழில் வாரியத் துணைத் தலைவர் திரு நா. காமராசன் உரையாற்றுகை யில் தெரிவித்தார்:

''உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம்; குண்டு வீச்சுக்களின் பயங்கரம் சூழ்ந் திருந்த சமயம்; விமானங்களின் பாய்ச்சல்கள் தொடர்ந்து வந்த சூழ்நிலை; ஜெர்மன் நாட்டிலே ஒரு கூடத்திலே மகாகவி கதேயின் பாராட்டு விழா நடை பெற்றுக் கொண்டிருந்தது. இதுதான் ஒரு கவிஞனின் பெருமைக்குச் சான்று. இத்தகைய பெருமை பெற்றவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார்.''

அடுத்து, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்ட தாவது:

''பாரதியாருடன் பத்தாண்டுக் காலம் நெருங்கிப் பழகியவர். பாவேந்தர். ஜாதிக்கொடுமை, தீண்டாமை மதம் ஆகியவை குறித்து விளக்கமாகப் பாடியிருக் கிறார். அவரது பெயரால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு பல்கலைக் கழ கத்தை உருவாக்கியிருக்கிறார்.''

சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்ற மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராஜன் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''புலவர்கள், கவிஞர்கள் நமது நாட்டில் நிறையத் தோன்றி யிருக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலர்தான் காலத்தால் மறக்க முடியாதவர்களாக இருக் கிறார்கள். அவர்களில் குறிப் பிடத்தக்க ஒருவர், பாவேந்தர் பாரதிதாசன் ஆவார்.

''பொதுவாக கவிதை என்றால் தூங்க வைத்துவிடும் என்று சொல்வார்கள். ஆனால் தூங்கிக் கிடந்தவர்களைத் தட்டி எழுப் பியது பாவேந்தரின் கவிதை.

''கவிதை என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதை நிரூபித்தவர் பாரதிதாசன். தமிழ் உணர்வு-வெறி-வேகம் - ஊட்டம் பெற்றது அந்த மகாகவியினால் தான்! அவருக்கு எடுக்கப்படும் விழா, தமிழுக்கு எடுக்கப்படும் விழாவாகும்.''

அடுத்து, மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமி நாதன் அவர்கள் தமது உரையில் தெரிவித்தது வருமாறு:

''பாரதிதாசன் அவர்களைப் பேராசிரியர்களும் புலவர்களும் ஏற்றுக் கொள்ள மறுத்த காலம்; பேரறிஞர் அண்ணா அவர்களின் 'திராவிட நாடு' புரட்சிக் கவிஞரின் பாடலை ஏந்தாமல் வெளிவராது.

''பாரதிக்கும் பாரதிதாசனுக் கும் உள்ள வேற்றுமை என்ன தெரியுமா என்று கேட்டு அதற் குரிய விடையையும் எங்களிடம் தெரிவித்தார் பேரறிஞர் அண்ணா. அந்த விடை இதுதான்:

''ஜாதி மதம் கூடாது என்று சொன்ன பாரதி 'ஆயிரம் உண் டிங்கு ஜாதி' என்று கூறினார். அதே நேரத்தில் 'வாழ்கின்றார் முப்பது கோடி மக்களெனில் சூழ் கின்ற பேதமும் அந்தத் தொகை யிருக்கும்' என்று பாடினார் பாரதி தாசன்.

''அவர் காளியிடம் வரம் கேட் கிறார் இந்திய சுதந்தரத்தைத் தர வேண்டும் என்று. இவரோ 'கொலைவாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே' என்று கூறுகிறார்''.

''அந்தப் புரட்சிக் கனலை - தீபத்தை - அணைய விடாமல் காக்க வேண்டுமென்பதனால் தான் இந்த விழாவை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் நடத்தி வருகிறார்.

''பாரதிதாசனின் கவிதை நமக்கு நம்பிக்கை ஊற்றாக விளங்குகிறது''

மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பிலிருக்கும் திரு அ.மு. காசி விஸ்வநாதன் அரசு நலத் திட்டம் குறித்து விளக்க உரை ஆற்ற, நலத்திட்ட உதவிகளை யும் பாரதிதாசன்கட்டுரை கவி தைப்போட்டிகளில் பரிசு பெற்ற மாணவ மாணவியர்களுக்குப் புத்தகங்களையும் மாண்பு மிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்கள் வழங்கினார்.

விழா இறுதியில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி கூறினார்.

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே!—உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ?—நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

நீர்கனல் நல்ல நிலம் வெளிகாற்றென
நின்ற இயற்கைகளே! உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!

தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ?—பசி
தீரும் என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

—பாவேந்தர் பாரதிதாசன்



# பாம்புத் தோல் பதுக்கல் கண்டுபிடிப்பு

நிலத்தை உழுது, நீர்பாய்ச்சி, காவல்காத்து, கஷ்டப்பட்டு, விளையும் தானியங்களை 'நமது நாட்டில் லட்சக்கணக்கான எலிகள் கணிசமாக அழிப்பதுண்டு. வரப்பின் பொந்தில் வாழும் பாம்புகள் இந்த எலிகளைப் பிடித்து விவசாயியின் நண்பனாக விளங்கி வருபவை. அப்படிப்பட்ட பாம்புகளை அழித்து நாட்டு நலனுக்குக் குந்தகமான கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரத்தைத் தடுக்க, அரசு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தினை இயற்றியுள்ளது. இச்சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு காவல்துறையினருக்கு நேரடியாக வழக்குப் பதிவு செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய அரசு பாம்புத் தோல் வணிகத்தினைத் தடை செய்துள்ளது.



சுரங்க அறையில் பதுக்கி வைக்கப்பட்ட பாம்புத்தோல் மூட்டைகள்

தமிழகக் காவல்துறை, வனப்பிரிவின் காவல் துறைத் தலைவர் திரு அ. ராஜமோகன், இ.கா.ப. அவர்களது ஆணையின்பேரில், 5.3.87 அன்று வனப்பிரிவு, காவல் கண்காணிப்பாளர்கள் திருவாளர்கள் எஸ். சரவணப்பெருமாள், இ.கா.ப. மற்றும் ரெ. வை. கோபாலன், இ.கா.ப. ஆகிய இருவரும் ஒரு படையுடன் சென்னை அருகே உள்ள குரோம்பேட்டை, பர்கீத் தோல் பதுனிடும் தொழிற்சாலையைச் சுற்றி வளைத்து வேட்டையாடினர்.



தொட்டிகளில் ஊறவைத்த பாம்புத்தோல்கள்



இதன் பயனாக, அந்தத் தொழிற்சாலையில் சட்டத்திற்குப்புறம்பாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1,22,308 பலவகையான பாம்புத்தோல்கள் கைப்பற்றப்பட்டன. இந்தப் பாம்புத்தோல்களின் மதிப்பு ரூ. 20 லட்சத்திற்கும் மேலானதாகும். அரசின் சட்டத்தை மீறிய பர்கீத் தோல் பதனிடும் தொழிற்சாலை உரிமையாளரான திரு. கே. எம். எஸ். சம்சுதீன் கைது செய்யப்பட்டார். தலைமறைவாக இருந்த அவரது சகோதரர் திரு அபுபக்கர் நீதிமன்றத்தில் சரண் அடைந்தார்.

தமிழகக் காவல்துறையின் இந்த வேட்டையானது, இந்தியாவிலேயே மிகப்பெரிய வேட்டை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கு இந்திய நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட பாம்புத் தோல் பதுக்கல் தடுப்பு வழக்குகளிலேயே மிகப் பெரியவழக்காகும்.




**19-6-1987-ஆம் நாள் அண்ணா மாவட்டம் பழனி திருக்கோவிலில் ரூ. 3 கோடி செலவில் அமைக்கப்படவுள்ள திட்டங்களுக்கு மாண்புமிகு சுற்றுலா-மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

# அண்ணா மாவட்டத்தில் வளர்ச்சிப்பணிகள்!

அண்ணா மாவட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க ஆழ்துளைக்கிணறு மற்றும் போர்வெல குழாய்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. திண்டுக்கல் பகுதிக்கு ஆகஸ்டு மாதம் முதல் பேரணைக் குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

பழனியில் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க லாரிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் வடிகால் வாரியம மூலம் கோடை கால நீர்சேமிப்புக் குளத்தில் 33 சதவீதம் கூடுதலாக நீரைத்தேக்கி வைக்கும் வகையில் திட்டம் செயலபடுத்த துவங்கியுள்ளது. அரசு இதற்காக ரூ. 75 ஆயிரம் செலவிட அனுமதித்துள்ளது. மேலும் பழனி வரதமாநதியில் இருந்து கோடை நீாத தேக்கக் குளத்திற்கு நீர் செல்லுகிறவகையில் ஏற்பாடு செய்ய ரூ. 12.5 இலட்சம் செலவிடப்படும். வரதமா நதியிலிருந்து பழனிக்கு 15 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் திறந்துவிடப்படும்.

கொடைக்கானலில் குடிநீர் வழங்கல் சிராகஉள்ளது. மேட்டுப்பாங்கான இடங்களில் குடிநீர் லாரிகள் மூலம்ம விநியோகிக்கப்பட்டு வருகிறது. ரூ.4.4 இலட்சம் செலவில் கொடைக்கானலில் 16 இடங்களில்போர்வெல் குழாய்கள் போடப்படும். கொடைக்கானல் பகுதியில் மழை பெய்திருப்பதால் பழைய அணைக்கட்டில் 21 அடி தண்ணீர் உள்ளது.

குமரன்பார்க்கில் ரூ. 3 இலட்சம் செலவில் பொழுதுபோக்காளர்களுக்கு வசதிகள் செய்யும் பணி துவங்கியுள்ளது. திண்டுக்கல் நகராட்சி பயணியர் விடுதியில் மேல் மாடியிலுள்ள இரு அறைகளும் குளிர் சாதனம் பொருத்தப்பட்டு பயணிகளுக்குக் குறைவான வாடகையில் நகராட்சி அளிக்கும்.

அண்ணா மாவட்டத்தில் நிலவிவரும் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க 175 போர்வெல் போடப்பட்டுள்ளது. ரூ. 43.75 இலட்சம் இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூ. 7.50 இலட்சம் செலவில்30 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

வறட்சி நிவாரணப் பணிகள் 'தாட்கோ' திட்டம் மூலம் 177 வேலைகள் ரூபாய் நூற்று ஐம்பது இலட்சம் செலவில் நிறைவேற்றத் துட்டமிடப்பட்டு ரூ. 30.75 இலட்சம் இதுவரை செலவழிக்கப்பட்டுள்ளது. 58 வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

மேலும் வேளாண்மைப் பணிகளுக்கு உதவும் வகையில் கசிவு நீர்க்குட்டைகள், கிணறுகள் ஆழப்படுத்தும் பணிகள் மற்றும் குளக்கரைகள் உயர்த்துதல் போன்ற பணிகளுக்காக ரூ.70.50 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டு ரூ.41.04 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

அண்ணா மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகளில் 40 குடி தண்ணீர்க் கிணறுகளுக்காக ரூ. 1.50 இலட்சம் செலவிடப்படும். பழனி மற்றும் திண்டுக்கல் நகராட்சியில் 4 கிணறுகளுக்காக ரூ. இரண்டு லட்சம் செலவிடப்பட்டுள்ளது. மொத்தம் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ரூ.133.81 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டு ரூ.74.06 இலட்சம் இது வரை செலவிடப்பட்டுள்ளது.

**வி. கோவிந்த பிரசாத்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், அண்ணா மாவட்டம்.**



# அண்ணா மாவட்டத்தில் அழகான வீடுகள்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 192 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி அரசு அலுவலர்கள், பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள், குறைந்த நடுத்தர மற்றும் உயர்தர வருவாய்ப் பிரிவினருக்களுக்காக வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளன.

குலுக்கல் முறை வீடு ஒதுக்கீடு திட்டத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக ரூ. 6,300 மதிப்பில் கழிப்பறைகளுடன் கூடிய 40 மனைகளும, ரூ. 59 ஆயிரம் மதிப்பில் நடுத்தர வருவாய் பிரிவினருக்காக கட்டப்பட்ட 204 வீடுகளும், 97 ஆயிரம் மதிப்பில் உயர்தரப் பிரிவினருக்காகக் கட்டப்பட்ட 96 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

அண்ணா மாவட்டம், திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு அருகிலும், இராணி மங்கம்மாள் காலனியிலும இதுவரை அரசு அலுவலர்களுக்கு வாடகை அடிப்படையில் வீடுகள் ஒதுக்கீடு செய்யும் திட்டத்தின்கீழ் ரூ. 1 கோடியே 51 இலட்சம் செலவில் 270 குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இராணி மங்கம்மாள் காலனியில் குறைந்த வருவாய் பிரிவினருக்கு 75 வீடுகளும், நடுத்தர வருவாய் பிரிவினருக்கு 484 வீடுகளும், உயர்தர வருவாய்பிரிவினருக்கு 155 வீடுகளும் ரூ. 4 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**நடைபெறவுள்ள வேலைகள்**

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக 234 அடுக்குமாடி வீடுகளும், 159 குடியிருப்புகளும், குறைந்த வருவாய் பிரிவினருக்காக 108 அடுக்கு மாடி வீடுகளும் 179 குடியிருப்புகளும், மத்தியதர பிரிவினருக்கு 54 அடுக்குமாடி வீடுகளும், 207 குடியிருப்புகளும் ரூ. 5 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அண்ணா மாவட்டம், ஒட்டன் சத்திரத்தில் 74 ஏக்கர் நில்ப் பரப்பு கையகப்படுத்தப்பட்டு 'ஹட்கோ' நிதி உதவியுடன் உறுப்பினர்களிடம் கட்டுமான மதிப்பீட்டில் 30 சதவீதம் பணம் பெற்றுக்கொண்டு ரூ.1 கோடியே 2 இலட்சம் மதிப்பீட்டில் 180 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

கொடைக்கானலில் 6 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 48 குடியிருப்புகள் கட்டுவதற்கும், நிலக்கோட்டையில் 70 ஏக்கர் நிலப்பரப்பும், பழனியில் 100 ஏக்கர் நிலமும் கையகப்படுத்தப்பட்டு வீடுகள் கட்டுவதற்குரிய பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.



# உயிர் உரம்

'அசோலா' எனப்படும் அதிசய 'உயிர் உரம்' (Biofertilizer) பற்றி, கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தற்போது நடைபெற்று வரும் ஆய்வுகள் வெற்றி பெற்றால், விவசாயிகள் தங்கள் சாகுபடித் தேவைகளுக்கென இரசாயன உரங்களையே பெரிதும் நம்பி இருப்பது கணிசமாகக் குறைந்துவிடக் கூடும். இந்த ஆய்வுகள் 'இந்திய-அமெரிக்க அறிவியல், தொழில்நுட்ப முன்முயற்சித் திட்ட' ஆதரவுடன் கோவையில் மேற்கொள்ளப்படுகின்றன.

''நிச்சயம் நாங்கள் இதில் ஒரு புதிய சாதனை படைக்கத்தான் போகிறோம்'' என்கிறார் இந்த ஆய்வுத் திட்டத்தின் தலைமை ஆய்வாளரும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 'வேளாண் நுண்ணுயிரியல் துறையின் இணைப் பேராசிரியருமாகிய டாக்டர் ச.கண்ணையன்.

'அசோலா' (Azolla) என்பது என்ன?

இது நெல் வயல்களில் வளரக்கூடிய ஒருவகை நீர்த்தாவரம்; இது பெரணி இனத்தைச் சார்ந்தது; இத்தாவரம் மிக மிகச் சிறிய இலைகளையும், துல்லியமான வேர்களையும் கொண்டது; பெரும்பாலும் சிறு ஓடைகள், குளங்கள் ஆகியவற்றில் இயற்கையிலேயே வளரக்கூடியது. இது நெல் வயலின் தண்ணீரில் மிதந்து காற்று மண்டலத்தில் இருக்கும் தழைச்சத்தைச் சேகரித்து நெற்பயிருக்கு அளிக்கின்றது.

அசோலாவின் இலைப்பகுதியில் 'அனபேனா' Anabaena என்னும் நீலப்பச்சைப் பாசி வளர்கிறது. இது சூரிய ஒளியைப் பயன்படுத்திக் காற்று மண்டலத்தில் இருக்கும் தழைச்சத்தைக் கிரகித்து அசோலாவிற்குக் கொடுக்கிறது. இதன் மூலம் அசோலா பசுமை நிறமாக நன்கு வளருகின்றது.

அசோலாவில் வளரும் நீலப்பச்சைப் பாசி 'அனபேனா அசோலா' என்று அழைக்கப்படுகிறது. அசோலாவின் இலைகள் மேல்பகுதி, அடிப்பகுதி என இரண்டு பகுதிகளாக இருக்கின்றன. இதன் மேல் இலைப்பகுதி வளர்ச்சியடையும்போது, அனபேனா, நீலப்பச்சைப் பாசியும் நன்கு வளர்ந்து, மேல் இலையின் உட்பகுதியை அடைந்து விடுகின்றது. இந்த நீலப்பச்சைப் பாசியின் திசுக்களில் இருக்கும் நைட்ராஜினேஸ் Nitrogenase என்னும் உயிர்ச்சத்து, காற்றிலுள்ள தழைச்சத்தைக் கிரகிக்கும் தன்மை பெற்றது.

அசோலா தனது சிறு வேர்கள் மூலம் தாது உப்புகளைக் கிரகித்து அனபேனாவுக்கு அளிக்கிறது; இதன் மூலம் அனபேனா நன்கு வளர்ச்சி அடைகிறது; பதிலுக்கு அது காற்று மண்டலத்திலுள்ள தழைச்சத்தைக் கிரகித்து அசோலாவுக்கு அளிக்கிறது. இதன் மூலம் அசோலா நன்கு வளருகின்றது; இவ்வாறு அசோலாவும் அனபேனா நீலப்பச்சைப் பாசியும் ஒருங்கிணைந்த கூட்டு வாழ்க்கை அமைத்துக் கொண்டு தழைச்சத்தைக் கிரகிக்கின்றன. இத்தழைச்சத்தை நெற்பயிர் கிரகித்துக் கொண்டு நன்கு வளர்கிறது.

அசோலா உயிர் உரத்தை நெல் வயல்களில் முறைப்படி வளர்த்துப் பயன்படுத்துவதன் மூலம், நெல் மகசூலைப் பெருமளவுக்குப் பெருக்கலாம்; ஏன் இரட்டிப்பாகவும் ஆக்கலாம்.

அசோலா பெரும்பாலும் கோடை காலத்தைத் தவிர, மற்றெல்லாப் பருவங்களிலும் நன்கு வளருகின்றது. இதனைத் தொட்டிகளிலோ அல்லது வயல்களிலோ வளர்க்கலாம். நெல் நாற்றங்கால் தயாரிப்பது போன்று 'அசோலா நாற்றங்கால்' தயாரித்து, அதிலிருந்து அசோலாவை எடுத்து, நடவு நட்ட வயல்களுக்குப் பயன்படுத்தலாம். அல்லது நெல் வயல்களிலேயே ஊடு பயிராகவும் அதனை வளர்க்கலாம்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் விவசாயிகள், பல நூற்றாண்டுகளாகத் தங்களது நெல் வயல்களில், அசோலாவை உயிர் உரமாகப் பயன்படுத்தி வருகிறார்கள்; அண்மையில், சீன நாடு அசோலா வளர்ச்சிக்கென மிகப் பெரிய திட்டமொன்றைத் துவங்கியுள்ளது.

கிட்டத்தட்ட எல்லாவிதப் பருவநிலைகளிலும் சாகுபடி செய்யக்கூடியதும், வேகமாக வளரக்கூடியதுமான அசோலா மெக்ஸிகானா' Azolla mexicana என்னும் புதிய ரக அசோலா தேர்வு செய்யப்பட்டிருப்பது, இந்த ஆய்வுத் திட்டத்தின் மிகப் பெரிய சாதனையாகும்.

''நெல் வயல்களில் அசோலா மெக்ஸிகானாவை வளர்ப்பதானது, ஒவ்வொரு வயலிலும் ஓர் அம்மோனியா ஆலையை நிறுவுவதற்குச் சமம்'' என்கிறார் அமெரிக்க விவசாய நிபுணர் டாக்டர் ரெய்ன்ஸ்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்



சிதம்பரனார் மாவட்டம்

# வளர்ச்சிப் பணியில் புதிய உத்வேகம்

புதிதாக உருவாக்கப்பட்ட சிதம்பரனார் மாவட்டத்தில் வறட்சிப் பணி ஒரு புதிய உத்வேகத்துடன் செயல்பட்டு வருகிறது! இங்கு 2,651 குடிநீர்க் கிணறுகளும், 1,974 ஆழ்குழாய்க் கிணறுகளும், 875 விசை இறைப்பான்களும் உள்ளன. ஆனாலும் சமீபத்திய கடுமையான வறட்சி காரணமாகக் குடிநீர்ப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.

முதல் தவணையாக 325 ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்க அனுமதியளித்து, இதன்படி வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 150 ஆழ்குழாய்க் கிணறுகளும், குடிநீர் வடிகால் வாரியத்தின் பொதுத் திட்டத்தின்கீழ் 175 ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படும். இரண்டாவது கட்டமாக மேலும் 100 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திட அரசு அனுமதித்துள்ளது. இதன்மூலம் இதுவரை 335 ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கென வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் இதுவரை இம்மாவட்டத்தில் சுமார் ரூ. 150 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ. 9.79 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

19 புதிய கிணறுகள் அமைக்கும் பணி ரூ. 6.10 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஒன்றியப் பகுதிகளில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்திட ரூ.4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 232 குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தும் பணி ரூ.9·76 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

லாரிகள் மூலம் கிராமங்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்வதற்கு ரூ. 31.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நல்ல குடிநீர் கிடைக்காத கடலோரக் கிராமங்கள் உள்ள தூத்துக்குடி, ஒட்டப்பிடாரம், விளாத்திக்குளம் ஒன்றியப் பகுதிகளில் லாரி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

கோவில்பட்டி நகராட்சிப் பகுதியில் லாரி மூலம் குடிநீர் வழங்க ரூ. 50,000-ம், தூத்துக்குடி நகராட்சிக்கு ரூ. 25,000-ம் அரசு அனுமதித்துள்ளது.

பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்த ரூ. 2.20 இலட்சமும், குடிநீர்க் குழாய்கள் இணைப்பு விரிவுபடுத்தும் பணிக்கு ரூ.3 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளர்க்கு வேலை வாய்ப்பு அளித்திட ரூ.483இலட்சம் ஒதுக்கீடு செய்யக் கேட்டதில், முதல் கட்டமாக ரூ.25 இலட்சம் அரசு அனுமதியளித்துள்ளது. இதன் மூலம் 344 வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டதில் சுமார் 1.05 இலட்சம் மனித நாட்கள் பயன்பெற்றுள்ளன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுரைக்காய்ப்பட்டி, ரணசூரநாயக்கர்பட்டி, சித்தவநாயக்கர்பட்டி, ரெட்டியார்பட்டி, சங்கரலிங்கபுரம் ஆகிய ஏழு கிராமங்களில் ரூ. 7.70 இலட்சம் மதிப்பில் சமுதாயக் கிணறுகள் தோண்டப்படுகின்றன. இதன் மூலம் 491 ஏக்கர் நிலமும், 4,500 மனித நாட்களும் பயன்பெறும்.

குமாரகிரி; கோடங்கிபட்டி, தங்கம்மாள்புரம், ரணசூரநாயக்கர்பட்டி, தலைக்காட்டுபுரம், சங்கரலிங்கபுரம், சின்னவநாயக்கர்பட்டி, மாசார்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ. 9.60 இலட்சம் செலவில் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கப்படுகின்றன. இதனால் 1,800 ஏக்கர் நிலமும், 20,000 மனித நாட்களும் பயன்பெறும்.

குட்டைகள் புதுப்பிக்கும் பணி 109 இடங்களில் ரூ. 9.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலம்புவனம், சுரைக்காய் பட்டி, சித்தவநாயக்கன்பட்டி, சின்னவநாயக்கர்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ. 2.30 இலட்சம் செலவில் மண் அரிப்புச் சுவர்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுவதால் 1,604 ஏக்கர் நிலம் பயனடைவதுடன் 10,800 மனித நாட்கள் பயன்பெறும்.

புதிய கால்வாய் அமைக்கவும், பழைய கால்வாய்களை சீரமைக்கவும் ரூ. 1.50 இலட்சம் செலவிடப்படும். இதனால் 2,800 ஏக்கர் நிலப்பரப்பும், 12,000 மனித நாட்களும் பயன்பெறும். விளாத்திக்குளம் பெரிய கண்மாயில் ரூ. 3.75 இலட்சம் மதிப்பில் மூன்று கிணறுகள் வெட்டும் பணி நடக்கிறது.

விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள் சூர்யகாந்தி, எள், நிலக்கடலை, திருத்திய முறையில் பயிர் செய்வோருக்கு 50% நிதி உதவி வழங்கப்படுகிறது.

இப்பகுதியில் பட்டுப் புழு வளர்ச்சிக்கென மூன்று ஆண்டுகளில் 1,250 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி பயிரிட ரூ.1 கோடி வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படும். இதன்மூலம் 10,000 கிராமப் பெண்கள் வேலை வாய்ப்புப் பெறுவதோடு, ஆண்டு ஒன்றுக்கு விவசாயிக்கு ஏக்கருக்கு ரூ. 10,000 வருமானம் கிடைக்கவும் வழி உள்ளது.

இவ்வாறு அரசின் நலத்திட்ட உதவிகள் எல்லாம் புதிய மாவட்டத்தை வளம் சேர்க்கப் பயன்படுத்தப்படுகின்றன. சமீபத்தில் வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட நிலச்சீர்திருத்த ஆணையர் மற்றும் செயலர் அவர்கள் வந்திருந்தார்கள். நல்லோர் பலர் வாழ்த்துக்களோடு வல்லமை பெற்ற அரசு அலுவலர்களால் இம்மாவட்டம் செழித்தோங்கும்!

**ரெ. இராவணன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சிதம்பரனார் மாவட்டம்.**

# பெரியார் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி



கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து பெரியார் மாவட்டம் பிரிக்கப்பட்ட 1979-ஆம் ஆண்டு இம்மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையமும் தொடங்கப்பட்டது. அப்போது இம்மாவட்டத்தில் 650 சிறுதொழில்களே பதிவு செய்யப்பட்டிருந்தன. அன்று முதல் இவ்வாண்டு மார்ச் மாத இறுதியில் இத்தொழில்களின் எண்ணிக்கை 3,672 ஆக உயர்ந்துள்ளது. இத்தொழில்களில் 29,296 பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

**மூலப்பொருள்களின் வளர்ச்சி :**

இம்மாவட்டத்தில் வேளாண்மையே முக்கியத் தொழிலாகும். நெல், மஞ்சள், கரும்பு, நிலக்கடலை, தேங்காய், பருத்தி முதலியவை மிக முக்கியமான விளை பொருட்களாகும். காட்டுவளமும், மலைவளமும், குறிப்பிடத்தக்க அளவு இல்லாவிடினும், சந்தனம், மூங்கில், புங்கம், கடுக்காய், கற்றாழை போன்ற மலை மற்றும் காட்டுப் பொருட்களும் குறிப்பிட்ட அளவு கிடைக்கின்றன. வேளாண்மைப் பொருட்கள் பெருமளவு கிடைப்பதால் அப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டுதான் தொழில் வளம் பெருகுகின்றது. விவசாயக் கருவிகள், கட்டுமானப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் பஞ்சாலைத் தொழில்களுக்குத் தேவையான பொருட்களின் தேவை அதிகரித்து உள்ளதால் பொறியியல் தொழில்கள் பெருகுவதற்குத் தக்கதொரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

**சூழ்நிலைகள் மற்றும் ஈடுபாடு :**

தொழில் முன்னேற்றம் ஈரோடு வட்டாரத்தில் தான் அதிக அளவு காணப்படுகின்றது. பதிவு செய்யப்பட்டுள்ள 3,672 தொழில்களில் பாதி அள்வு தொழில்கள் (1,881) இவ்வட்டாரத்தில் நடைபெறுகின்றன. இதற்குச் சந்தை வசய்ப்பும் போக்குவரத்து வசதியும், நிதி ஆதாரமும் முக்கிய காரணங்களாகும்.

மூலனூர், நம்பியூர், தாக்கநாய்க்கன்பாளையம், அந்தியூர், அம்மாபேட்டை போன்ற வட்டாரங்களில் தொழில் தொடங்க அடிப்படை வசதிகள் ஓரளவு இருந்தும் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க அதிக அளவில் ஆர்வம் காட்டாத காரணத்தினால் இப்பகுதிகளில் தொழில் வளர்ச்சி அதிக அளவில் முன்னேறவில்லை. செல்வம் படைத்தவர்கள், படித்து வேலையற்றோர் இவர்களின் ஆர்வத்தைத் தூண்டி, தொழில் தொடங்குவதற்குரிய பக்குவத்தினை வருவிக்கத் தொழில் மையம் முகாம்கள் நடத்தி வருகின்றது. தொடர்ந்து செய்யும் இம்முயற்சி பலன் அளிக்கும் என்று நம்பப்படுகின்றது.

தாளவாடி, பர்கூர் பகுதிகள் மலைப்பகுதிகளாதலால் இங்கு பல்வகையான தொழில்கள் வளர அதிக வாய்ப்பில்லை. அப்பகுதியின் தேவையைப் பூர்த்திசெய்கின்ற அளவுக்கு சில தொழில்கள் உருவாகி உள்ளன. தாளவாடி பகுதிகள் குறிப்பாக பட்டுத் தொழிலுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளன. அதற்கான நடவடிக்கைகள் 'பட்டு வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சாண எரிவாயுக் கலன் வளர்ச்சி :**

பெரியார் மாவட்டம் சாண எரிவாயுக் கலன்கள் தயாரிப்பதில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. ஆண்டொன்றுக்கு சுமார் 7,000 முதல் 8,000 கலன்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன.

இக்கலன்கள் செய்வதற்குத் தேவையான இரும்புத் தகடுகள் மற்றும் உருக்குச் சட்டங்கள் பெற்றுத் தர தொழில் மையம் ஆவன செய்கின்றது. அந்த வகையில் ஆண்டொன்றுக்கு 4,000 டன் வரையில் இரும்பு மூலப் பொருள்கள் தேவைப்படுகின்றன.



**எண்ணெய்த்தொழில் வளர்ச்சி :**

அன்றாடம் மக்கள் உபயோகிக்கும் பொருள்களில் ஒன்றான எண்ணெய் பிழியும் தொழில் இம்மாவட்டத்தில் குறிப்பாக ஈரோடு, காங்கேயம், வெள்ளக்கோவில் வட்டாரங்களில் அதிகமாக உள்ளது. இத்தொழிலுக்கு, தேவையான இயந்திரங்கள், கருவிகள், உதிரிப் பாகங்கள் அனைத்தையும் இங்கு தயார் செய்வதற்குரிய வார்ப்புப் பட்டறைகள் உருவாவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன.

**தோல் பதனிடும் தொழில் முன்னேற்றம் :**

தோல் பதனிடும் தொழில் இம்மாவட்டத்தில் குறிப்பான தொரு இடத்தைப் பெற்றுள்ளது தோலைப் பக்குவப்படுத்தி மெருகேற்றிப் பொலிவான தோல்கள் உற்பத்தி செய்யும் வகையில் இத்தொழில் வளர்ந்து வருகின்றது. இவ்வகையில் 192 தொழில்கள் சிறு தொழில்களாகப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

மின் அணுத் துறையில் படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களை ஒன்று சேர்த்து ஒரு அமைப்பை உருவாக்கி அவர்கள் மூலம் மின் அணுப் பொருட்களை உற்பத்தி செய்யும் - பழுதுபார்க்கும் செயல்திட்டம் ஒன்றும் மாவட்டத் தொழில் மையம் செயல்படுத்த உள்ளது.

**தொழிற்பேட்டை :**

ஒவ்வொரு வட்டத் தலைநகரங்களிலும் ஒரு தொழிற்பேட்டை அமைக்கின்ற செயல் திட்டம் ஒன்று தீவிரப் பரிசிலனையில் உள்ளது. அதற்கான நிலங்கள் தேர்வு செய்கின்ற பணியில் மாவட்டத் தொழில் மையமும், தமிழ்நாடு சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகமும் ஈடுபட்டுள்ளன.

பவானிசாகரில் 8 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட உள்ளது. இங்கு கிடைக்கும் இம்மின்விசையைக் கொண்டு ஒரு தொழிற்பேட்டை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பவானிசாகரில் அமைந்துள்ள காகிதம் மற்றும் அட்டை தயாரிக்கும் தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டு 10 துணைத் தொழில்களை இத்தொழில் பேட்டையில் இடம் பெறச் செய்ய,திட்டமிடப்பட்டுள்ளது.

**துணி அச்சடிக்கும் தொழிலில் சாதனை :**

இம்மாவட்டத்தின் கைத்தறி மற்றும் அச்சடித்த துணிகளுக்கு வெளிமாநிலங்களில் பெரும் சந்தை வாய்ப்பு உள்ளது. துணி மற்றும் நூலை அடிப்படையாகக் கொண்டு 1,088 சிறுதொழில்கள் இம்மாவட்டத்தில் நடைபெறுகின்றன. இப்பிரிண்டிங் தொழிலுக்குத் தேவையான தர நிர்ணயம் செய்யும் ஆய்வுக்கூடம் அமைப்பது மிகப் பொருத்தமாக இருக்கும்.

துணி அச்சடிக்கும் தொழிலுக்குத் தேவையான மெழுகு மற்றும் மண்ணெண்ணெய், மாவட்டத் தொழில் மையம் மூலம் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாதமொன்றுக்கு 2,63,000 லிட்டர் மண்ணெண்ணெய், அச்சடிக்கும் தொழிலுக்கு விநியோகிக்கப்படுகின்றது. 'பதிக்' அச்சடித்தல் என்று சொல்லப்படும் துணியில் வண்ணங்கள் அச்சிடும் தொழிலுக்கு ஆண்டொன்றுக்கு 310 டன் 'மெழுகு விநியோகம் செய்யப்படுகின்றது.

**அரசு கடனுதவி மற்றும் மானியம் :**

இம்மாவட்டத்தில் உள்ள தாராபுரம் வட்டம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டு, புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கு 15 சதவீத முதலீட்டு மானியம் வழங்கப்படுகின்றது. முதலீட்டில் 15 சதவீத மானியம் தொழில் முனைவோர்களுக்கு நல்ல ஊக்கத்தை அளித்துள்ளது. இச்சலுகை 31.12.'87 வரை நீட்டிக்கப்பட்டு உள்ளது. பெருந்துறை வட்டத்தையும் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கக் கோரும் செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசிலனையில் உள்ளது.

**வேலை வாய்ப்பு :**

1986-87ஆம் ஆண்டு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்





கீழ் 606 இளைஞர்களுக்கு ரூ. 105.92 இலட்சங்கள் கடன் அளிக்க வங்கிகள் ஒப்பளித்திருக்கின்றன. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றது,

1986-ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற தொழில் கருத்தரங்கில் மாவட்டத்திற்கென விரிவான மூன்றாண்டு செயல் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்தும் பணியில் மாவட்டத் தொழில் மையம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

1987-88ஆம் ஆண்டு இச்செயல் திட்டத்தின் மூலம் 348 புதிய சிறு தொழில்களை உருவாக்கவும் 2,645 பேர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**மாவட்டத் தொழில் மையத்தின் செயல்திறன் :**

ஈரோடு வட்டாரத்தைப் போன்று பிறவட்டாரங்கள் சம அளவில் தொழில் முன்னேற்றம் காண, மாவட்ட தொழில் மையம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஈரோட்டை மையமாகக் கொண்டு பிற வட்டாரங்களில் தொழில் முனைனேற்றத்திற்கு வழிகண்டு கொண்டிருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் இம்மாவட்டம் தொழில் துறையில் தன்னிகரில்லா வளர்ச்சி பெறும் என்பது நிச்சயம்.

தொழில்கள் பெருகினால் வேலையில்லாத் திண்டாட்டம் தீர்ந்து, பொருளாதாரம் பெருகி மக்கள் நல்வாழ்வு பெறுவர் என்ற நல்ல சிந்தனையோடு மாவட்டத் தொழில் மையம் முனைப்போடு செயல்பட்டு வருகின்றது.

**மு. நா. கிருஷ்ணசாமி,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெரியார் மாவட்டம்.**

# இதோ ஒரு இளம் மார்க்கோனி



முக்கிய அலுவல் காரணமாக நாம வெளியில் சென்றிருக்கிறோம். அந்தச் சமயத்தில் வானொலியிலோ அல்லது தொலைக் காட்சியிலோ நாம் விரும்பும் நிகழ்ச்சி ஒன்று வருகிறது.. நமக்கோ அதைக் கேட்க முடியாத சூழ்நிலை...

இருந்தாலும் அந்த நிகழ்ச்சியை மீண்டும் கேட்க வாய்ப்பளிக்கிறது, ஒரு புதுமையான மின்னணுக் கருவி! அதைக் கண்டுபிடித்தவர், பிறவியிலேயே பார்வையை இழந்த திரு அ. கலாநிதி என்னும் இளைஞர்.

சென்னை மாநிலக் கல்லூரியில் அரசியல் பாடத்தில் முதுநிலைப்பட்டம் பெற்ற இவர், தற்போது சென்னை சட்டக கல்லூரியில் மூன்றாம் ஆண்டு சட்டப் படிப்புப் பயின்று வருகிறார்.

இவர் கண்டுபிடித்துள்ள இந்தப் புதுமையான மின்னணுக் கருவி என்னென்ன வேலைகளைச் செய்கிறது?

நாம் முக்கிய அலுவல் காரணமாக வெளியில் சென்றிருக்கும் போதோ அல்லது வேறு வேலையில் ஈடுபட்டிருக்கும் போதோ இந்தக் கருவியானது வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து வைத்துக் கொள்ளும். பிறகு அதை இயக்கி அந்த நிகழ்ச்சியை நாம் கேட்க முடியும்.

இதேபோல் மின் விசிறி, மாவு அரைக்கும் இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி — இவற்றையும் குறிப்பிட்ட நேரங்களில் இயக்கவும், நிறுத்தவும் இதனால் முடியும், நாம் இல்லாமலேயே!

அது மட்டுமா? வயல்வெளியில் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்துடன் இந்தக் கருவியை இணைத்துவிட்டால் போதும், நாம் குறிப்பிடும் நேரத்தில் இது தானாகவே இயக்கி, பிறகு நிறுத்தி விடும்! அத்துடன் ரயில்வே நேரங்களையும் இதன் மூலம் துல்லியமாகத் தெரிந்து கொள்ளலாம்.

இரண்டு மாதங்களுக்கு இந்தக் கருவியின் மூலம் நம் பணிதொடர்பான நிகழ்ச்சிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள முடியும். அசந்தர்ப்பத்தில் மனிதர்கள்கூட செய்ய மறந்து விடும் வேலைகளை, இது கவனத்தில் வைத்துக் கொண்டு கருத்தாய்ச் செய்கிறது!

இந்த விந்தைக் கருவியைக் கண்டுபிடித்த திரு அ. கலாநிதி பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே விஞ்ஞானப் பாடத்தில் முதல் மதிப்பெண்கள் பெற்று வந்தார். பள்ளியில் இவரை நண்பர்கள் மார்க்கோனி என்று அன்புடன் அழைப்பார்களாம்.

இவர், பார்வையற்றோர் படிக்கும் 'பிரெய்லி' முறையில் படிக்கவில்லை. மற்றவர்களைப் படிக்கச் சொல்வார். அதை உன்னிப்பாகக் கேட்டுக்கொள்வார். அதை அப்படியே தேர்வில் எழுதிவிடுவாராம். கற்றலில் கேட்டலே நன்று என்பது இவரைப் பொறுத்தவரை மெய்யாகி விட்டது.

1982-ல் 'கான் ஆட்டோமேட்' என்ற கருவியை இவர் கண்டுபிடித்தார். இது மின்சாரச் சாதனங்களை தானாகவே இயக்கவும், நிறுத்தவும் வல்லது. திரு அ.கலாநிதி மதுரையிலுள்ள பசுமலையைச் சேர்ந்தவர். அறிவியலில் ஆர்வமிக்க இவருக்கு ஆசிரியர்கள், நண்பர்கள் கொடுத்த ஊக்கமே இத்துறையில் மேலும் மேலும் உழைக்கவும் உயரவும் உதவியாக இருந்தது என்று பெருமிதத்துடன் கூறுகிறார்.

'இந்தக் கருவியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வந்தது' என்று கூறும் இந்த இளைஞர், ''ஊனமுற்றவர்களை நல்லவிதமாக நடத்த வேண்டும். பஸ்சுக்காக காத்துக் கொண்டிருந்தாலோ, சாலையின் குறுக்கே செல்ல முயன்றாலோ அவர்களுக்கு மற்றவர்கள் உதவி செய்ய முன்வர வேண்டும். ஊனம் ஒரு குறையல்ல, சமுதாயத்தில் அவர்களுக்கும் சமபங்குண்டு. ஊனமுற்றவர்கள் எதற்கும் லாயக்கில்லாதவர்கள் அல்ல. அவர்களால் எதையும் சாதிக்க முடியும். இந்த எண்ணமே— தன்னம்பிக்கையே என்னை இத்துறையில் ஆழமாக ஈடுபட வைத்தது'' என்று அடக்கத்துடன் சொல்கிறார்.

பார்வையிழந்த இளைஞர் தயாரித்த இந்தக் கருவியானது, பார்வையுள்ள ஒருவர் செய்யும் வேலைகளைச் சொன்னபடி (நாம் குறித்தபடி) செய்கிறது என்றால் விந்தையாக இல்லையா?



—பேட்டி : பி.வி. கிரி

**தலைமைச் செயலகம் இயங்கும் விதமும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களும்**

அச்சிடுபவர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு.

வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் ரோடு, தியாகராய நகர், சென்னை-600017

விலை : ரூ. 14. பக் : 179

தமிழக அரசின் ஆட்சியை நடத்திவரும் தலைமைச் செயலகத்தின் துறைகள் எவ்வாறு பணி ஆற்றுகின்றன என்ற தகவல்களை இந்நூல் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

ஆளுநரின் அதிகாரம், அமைச்சர்களின் செயல்முறைகள், மசோதாக்கள் சட்டப்பேரவையில் வைக்கப்படும் முறைகள், பொதுமக்கள் தலைமைச் செயலகத்துக்கு மனுச் செய்து தீர்வு காணும் முறைகள், ஒரு ஃபைலின் சுற்றோட்டம் இப்படிப் பல செய்திகள் மிகத் தெளிவாக இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

அரசு ஊழியர் ஒருவரின் ஓய்வுக்கால ஊதியம் எவ்வாறு கணக்கிடப்படவேண்டும் என்பது செயல்முறையில் விளக்கப்பட்டிருக்கிறது. ஊழியர் ஒருவர் ஓய்வுக்காலத்தில் பெறும் நன்மைகள் யாவை என்பதும் விவரமாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

தமிழ்ப் புத்தகச் சந்தையில் இது ஒரு புதிய அணுகுமுறை என்றே சொல்லலாம். தலைமைச் செயலகம் என ஒன்று உண்டு என்பது பலருக்கும் தெரியும். அங்கே என்னென்ன பணிகள் நடைபெறுகின்றன என்ற தகவலை இந்நூலைப் படித்த பிறகே புரிந்து கொள்ள முடிகிறது.

எளிதில் படித்துப் புரிந்து கொள்ளும் விதத்தில் இந்நூலின் நடை அமைந்திருக்கிறது.

**அறிவுத் தாகம்**

ஆசிரியர் : கவிஞர் வேலூர் ம. நாராயணன்,.

வெளியீடு: நிறைவாணன் பதிப்பகம். தமிழ்ச்சோலை, 57, சர்க்கார் மண்டிவீதி, வேலூர்-4.

விலை : ரூ. 10. பக்: 112.

பதின்மூன்று கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். இலக்கியம் குறித்த கட்டுரை, இளைஞர்களுக்கு அறிவுரை பகரும் கட்டுரை, தந்தை பெரியாரைக் குறித்த கட்டுரை இப்படிப் பல வேறு வகையான கட்டுரை மணிகளின் தொகுப்பாக இது விளங்குகிறது. ஞானியார் அடிகள் அவர்களைப் பற்றிய வாழ்க்கை விளக்கக் கட்டுரை பாராட்டத் தக்க வகையில் உள்ளது. 'ஊரும் பேரும்' என்ற தலைப்புள்ள கட்டுரை, சுவை நல்குவதுடன், வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளபல ஊர்களின் வரலாற்றை நமக்குத் தெள்ளத் தெளிய எடுத்துக் கூறுகிறது. இனிய எளிய நடை, நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

—எஸ்.எஸ். சுந்தரம்




**அகிம்சை**

ஆசிரியர்: அ. அப்துல்ரசாக்,

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம், காந்தி மியூசியம், மதுரை-20.

விலை: ரூ.6 பக்கம்: 110

அண்ணல் காந்தியடிகள் தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்த -தம் உயிரினும் மேலாகப் போற்றிய உயரிய கொள்கை தான் அகிம்சை.

"அகிம்சையின் உதவியில்லாமல் சத்தியத்தைத் தேடுவது சாத்தியமன்று. அவை இரண்டும் இரட்டைக் குழந்தைகள். அவற்றை ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்றோ, முத்திரையிடாத பளபளப்பான உலோக உருளையின் இருபக்கங்கள் என்றோ கொள்ள வேண்டும். அகிம்சை என்பது வழிமுறை ஆகும். சத்தியம் முடிவு ஆகும்" என்று காந்தியடிகள் குறிப்பிடுவதைக் கோடிட்டுக் கொள்ள வேண்டும்.

பகைவனையே திருத்தும் ஆற்றல் மிக்கது அகிம்சை. அதன் அருமை பெருமைகள் எல்லாம் நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. நல்ல நூல். படித்துப் பயன் பெறலாம்.

**கோதுமையில் பதார்த்தங்கள் செய்வது எப்படி?**

ஆசிரியர்: மலேசியா வைத்திய நாதன்,

வெளியீடு: இமயப் பதிப்பகம், 20, பெருமாள் தெற்கு வீதி, நாகப்பட்டினம் -611001

விலை: ரூ. 5.50 பக்கம்: 80

உணவுப் பண்டங்களுள் கோதுமையும் ஒன்றாகும். அரிசியைப் போல அதிலும் சத்துகள் நிறைந்து காணப்படுகின்றன. கோதுமையைக் கொண்டு சர்க்கரைப் பொங்கல், பாயசம், பக்கோடா, இனிப்புக் கேக், சாக்லெட் இப்படிப் பல்வேறு பண்டங்கள் செய்யும் முறைகள் குறித்தும், மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கும் உணவுப் பொருள்கள் குறித்தும் இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன. இல்லத்தரசிகளுக்குப் பயன்படக்கூடியது.

**இன்னும் ஒரு மீரா...**

ஆசிரியர்: ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்,

வெளியீடு: சுதா பதிப்பகம், 14, முத்துமுதலிதெரு, புரசைவாக்கம், சென்னை-600007.

விலை: ரூ. 10. பக்கம்: 122

எளிமையான நடை, நல்ல நகைச்சுவை. அளவான வசனங்கள் ஆகியவற்றால் சிறந்த நாடக நூலாகும் பெருமைபெறுகிறது. இன்னும் ஒரு மீரா... நட்பு, காதலைவிட மென்மையானது. மேன்மையானது என்ற கருத்து நாடகத்தின் கருவாகக் கொள்ளப்பட்டுள்ளது.

கணவனை எவ்வளவுதான் நம்பினாலும் நேசித்தாலும் தன் வாழ்வில் இன்னொருத்தியால் இடையூறு ஏற்படுவதை எந்தப் பெண்ணும் பொறுத்துக்கொள்ள மாட்டாள் என்பது கண்ணனின் மனைவி மீனாட்சியின் மனப் போராட்டத்தின் மூலம் நன்கு உணர்த்தப்பட்டுள்ளது.

கண்ணன், கனிமொழி படைப்புகளும் நன்கு அமைக்கப்பட்டுள்ளன.

தொலைக்காட்சி மூலம் பலரும் பார்த்து மகிழ்ந்த இந்நாடகம், நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்றதாகும்.

### வாழ்க்கைத் துணை

ஆசிரியர் : புலவர் கோ. இளைய பெருமாள்
வெளியீடு: கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை-17.
விலை: ரூ. 5. பக்: 76.

வாழ்க்கைத் துணை. குமரி மூத்தாள், மலர்ந்த முகம், கவிஞரின் காட்சி, அருமையில் எளிமை, எது நாகரிகம், கம்பன் கண்ட சமரசம் முதலிய 15 கட்டுரைகளைக் கொண்ட சிறந்ததொரு தொகுப்பு நூல்.

வாழ்க்கைத் துணையின் இலக்கணத்தை அழகாக எடுத்துச் சொல்கிறார் பெரும்புலவர் கோ. இளையபெருமாள்.

'முளிதயிர்பிசைந்த' என்ற குறுந்தொகைப் பாடலொன்றின் விளக்கம் 'மலர்ந்தமுகம்' என்னும் கட்டுரையில் கவினுறக் கூறப்பட்டுள்ளது.

குறள், கலம்பகம், திருப்பாவை, திருவெம்பாவை, இராமாயணம் முதலில் இலக்கியங்களிலிருந்து வாழ்க்கைக்கு இன்றியமையாத கருத்துக்கள் பல நல்ல விளக்கங்களோடு இடம் பெற்றுள்ளன.

மக்கள், அறத்தின் வழி பொருள் ஈட்டி அன்புவாழ்க்கை கண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற ஆசிரியரின் விழைவு நூலெங்கும் வெளிப்படுகின்றது. அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

— மா.ரா.சி.

### நல்ல குடும்பமாக இருப்பது எப்படி?

ஆசிரியர்: மு.முத்துக்காளத்தி,
வெளியீடு: கண்ணம்மாள் பதிப்பகம்,
8 ஐயப்பன் நகர், இராஜ கீழ்ப்பாக்கம், சென்னை-600073
விலை ரூ. 7 பக்கம்.72

இல்வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லும் இலக்கண நூலாக இந்நூல் திகழ்கிறது. இல்லற வாழ்க்கையில் கணவன், மனைவி, குழந்தைகள் அனைவரின் கடமைகளையும் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார் நூலாசிரியர்.

கணவனும் மனைவியும் அன்பு செலுத்துவதிலும் அதிகாரம் செலுத்துவதிலும் சமமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார். ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுக்கும் தன்மை வேண்டும், அப்போது தான் இல்லறக் கனி சுவைக்கும்; இல்லாவிட்டால் கசக்கும் என்பதை ஆணித்தரமாக நிலைநாட்டுகிறார். இனிய எளிய நடை நூலுக்குச் சிறப்புச் சேர்க்கிறது. நூலாசிரியரின் அனுபவம் நூலுக்குப் பின்புலமாக அமைநதுருக்கிறது.

### அண்ணா போற்றிய அறிஞர்கள்

தொகுப்பாசிரியர்: அ.மறைமலையான்
விற்பனை உரிமை: குமரிப்பதிப்பகம், நாகப்பட்டினம்.
விலை: ரூ.10 பக்கம் 128

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு, எழுதிய கட்டுரை ஆகியவற்றிலிருந்து, 32 பெருமக்களைக் குறித்த பாராட்டுக்களைத் தமிழ்கூறு நல்லுலகுக்குப் பயன்படும் வகையில் தொகுத்திருக்கிறார் நூலாசிரியர்.

கல்கண்டு இனிப்பதில் வியப்பென்ன இருக்கிறது? கஸ்தூரி மணப்பதில் அதிசயம் ஏதும் உண்டா? அண்ணா அவர்களின் வாசகங்கள் சொல்லோவியமாகத் திகழ்வதற்கு அட்டியென்ன உள்ளது?

ஒவ்வொருவரைக் குறித்தும் அவர் தந்துள்ள மதிப்புரையின் ஒவ்வோர் அட்சரமும் ஒவ்வோர் இலட்சம் பெறும்.

அண்ணா அவர்கள் தீட்டியுள்ள பேனா ஓவியங்கள் இவை. தமது காலத்திற்கு முன்னே வாழ்ந்த பெருமக்களைக் குறித்து அண்ணா எழுதும்போது, அவர்கள் உயிர்த்தெழுந்து விடுகிறார்கள். அண்ணாவின் எழுத்து வல்லமை இது!

இதனைத் தொகுத்திருப்பதன் மூலம் அரும்பெரும் தொண்டினைச் செய்த பெருமை தொகுப்பாசிரியரைச் சேர்கிறது.

> நூலறிவு பேசும் —
> மெய்யறிவு கேட்கும்.
>
> —ஹோம்ஸ்

### வள்ளலார் கண்ட சாவாக்கலை

ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்.
வெளியீடு: காந்தி இலக்கியச் சங்கம், தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை-20.
விலை ரூ.3 பக்கம் 44

சாகாத கல்வி என்றும், மரணமிலாப் பெருவாழ்வு எய்தல் வேண்டும் என்றும் அருட்பெருஞ்சோதி இராமலிங்கர் சொல்லிய கொள்கைகளுக்கு விளக்கவுரையாக இச்சிறு நூல் அமைந்துள்ளது.

பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்னும் மூன்று மகாமந்திரங்கள் குறித்துச் சிலம்புச் செல்வர் நன்கு விளக்கியுள்ளார்.

இந்நூல் அளவில் சிறியதாக இருப்பினும் சொல்லும் செய்தியில் பெரிதாக உள்ளது. மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிது என்பதை நிலை நாட்டுகிறது.

''வள்ளலார் உலகனைத்துக்கும் பொதுவானவர்'' என்று நூலாசிரியர் குறிப்பிடுவது ஏற்புடைத்து.

### கேரளக் குயில்

ஆசிரியர்: கவிஞர் எஸ்.டி.எஸ்.
கிடைக்குமிடம்: மூவேந்தர் பதிப்பகம், அம்மையப்பட்டு, வந்தவாசி
விலை: ரூ. 5 பக்கம்: 64.

44 கவிதைகள் கொண்ட தொகுப்பு இது. நூலாசிரியர் கேரளத்தில் பணியாற்றுபவர் என்பதால் கேரளத்தின் இயற்கைக் காட்சிகளைப் பல கவிதைகளில் வருணித்துள்ளார், அத்துடன் தமிழகத் தலைவர்கள் அண்ணா, காமராசர் ஆகியோரைக் குறித்தும் இனிய கவிதைகளை வடித்துள்ளார். தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைக் குறித்தும், அவர் அறிமுகம்செய்துள்ள சத்துணவுத் திட்டத்தைப் போற்றியும் கவிதைகள் தீட்டியுள்ளார். கேரளத்தில் வாழ்ந்துகொண்டு தமிழகத்தை எண்ணிக் கவிதை தீட்டும் இந்தக் கவிஞரின் ஆர்வம் பாராட்டுக்குரியது.

—தமிழ்ப்பித்தன்

# தேவி கருமாரியம்மன்

# ஆலயக் குடமுழுக்கு விழா

சென்னை மாநகருக்கு மேற்கே 15 கி.மீ. தூரத்தில் செங்கல்பட்டு மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ளது திருவேற்காடு. அருணகிரிநாதரும் சேக்கிழாரும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மூர்க்க நாயனாரும் பாடிப் புகழ்ந்த தலமிது.

சூரபத்மனைக் கொல்ல முருகனுக்கு அம்பிகை வேல் கொடுத்து உதவியதால் திருவேற்காடு எனப் பெயர் பெற்றதாக வரலாறு உண்டு. வடவேதாரண்யம், வேற்காடு, வேலங்காடு, விஷம் தீண்டாப்பதி என்றெல்லாம் கூட இத்தலம் வழங்கப்படுகிறது. திருக்கயிலையில் நடந்த தங்கள் திருமணக் கோலத்தை இறைவனும் இறைவியும் தமிழ் முனிவர் அகத்தியருக்குக் காட்டித் திருவருள் புரிந்த திருப்பதியும் இதுதான்.

இங்கு எழுந்தருளியிருக்கும் அருள்மிகுதேவி கருமாரி அம்மன் ஆலயம் தமிழகத்து ஆலயங்களுள் மிகப் பிரசித்தி பெற்றதாகும். சங்கத் தமிழ்க் கடவுள் கந்தவேள் தனது சூலாயுதத்தால் இங்கு தோற்றுவித்த வேலாயுத தீர்த்தம் ஒரு புண்ணியத்தீர்த்தமாகும். இவ்வகைப் பேறுபெற்ற இவ்வாலயத்தின் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா 13-7-87 அன்று சிறப்புற நடைபெற்றது.

ஏற்கெனவே 1964 மற்றும் 1975-ஆம் ஆண்டுகளில் இந்த ஆலயம் புதுப்பிக்கப்பட்டு, குடமுழுக்குச் செய்விக்கப் பெற்றதாகும்.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒவ்வொரு கோயிலின் குடமுழுக்கும் நடத்தப் பெற வேண்டும் என்பது நடைமுறையில் கடைப் பிடிக்கப்பட்டு வருவதால், இவ்வாண்டு இவ்வாலயத்தின் குடமுழுக்கு நடத்தப்படத் தீர்மானிக்கப்பட்டது.

தேவி உபாசகர் தவத்திரு சுவாமி இராமதாசர் அவர்கள் தலைமையிலான திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப் பெற்று இராஜ கோபுரம், அம்மன் சன்னதி கோபுரம், மகா மண்டபம், அர்த்த மண்டபம், மதில்கள், பிரச்சார மண்டபங்கள் ஆகியவை ரூ. 25 இலட்சம் செலவில் புதுப்பிக்கப் பட்டன.

குடமுழுக்குக்கு முன் இரு நாட்களும் யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. காவிரி, கங்கை, யமுனை, கோதாவரி, பிரம்மபுத்திரா ஆகிய புண்ணிய நதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட தீர்த்தங்கள் வெள்ளிக் குடங்களில் வைக்கப்பட்டு பூஜைகள் செய்யப்பட்டன.

குடமுழுக்கு அன்று காலையில் சரியாக 6 மணிக்கு, யாகசாலையிலிருந்து புனிதநீர்க் குடங்கள் மேளதாளங்களுடன் கோபுர உச்சிக்குக்கொண்டு செல்லப்பட்டன. கோபுர உச்சியில் 7 விமானங்கள் (கும்ப கலசங்கள்) அமைக்கப்பட்டு இருந்தன. கோபுர உச்சிக்குக் கொண்டு செல்லப்பட்ட புனிதநீர், வேத விற்பன்னர்கள் மந்திரம் ஓத, பண்ணிசை வாணர்களும், ஓதுவார் மூர்த்திகளும் தேவார திருமுறை







**அருள்மிகு பாலாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் சீனிவாசப்பெருமாள் ஆலயக் குடமுழுக்கு**

இன்னிசை முழங்க,கும்ப கலசங்களின் மீது ஊற்றப்பட்டது.

இந்தத் தெய்வீகக் காட்சியைக் கண்டு,கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பக்திப் பரவசப்பட்டனர். கோபுரத்தின் அருகே இருந்த பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது.

மேதகு ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி இந்திரா குரானா, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன், மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு க. இராசாராம், மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன், மாண்புமிகு சத்துணவு சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்திரராசன், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் திரு ம.பொ. சிவஞானம், வணிகவரி மற்றும் அறநிலையத் துறை ஆணையர் மற்றும் அரசுச் செயலர் திரு சுகவனேஸ்வர் இ.ஆ.ப., இந்து சமய அறநிலைய ஆணையர் திரு இராச. கல்யாண சுந்தரம் இ.ஆ.ப. ஆகியோரும் திரளான மக்களும் இந்தக் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு தெய்வத் திருவருள் பெற்றனர்.

குடமுழுக்கு நிறைவுற்றதும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை அவரது இல்லத்தில் மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் சந்தித்து,ஆலய பிரசாதங்களையும் அபிஷேக நீரையும் அளித்தார்.

அருள்மிகு தேவி கருமாரி அம்மன் ஆலயத்துடன் இணைந்தது திருவேற்காட்டிலுள்ள அருள்மிகு பாலாம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் சீனிவாசப் பெருமாள் ஆலயம். இவ்வாலயத்தின் குடமுழுக்கு 12-7-87 அன்று நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், ஆயிரக்கணக்கான மக்களும் இதில் கலந்து கொண்டனர்.

குடமுழுக்கினைக் காணவும் இறைவனின் அருளைப் பெறவும் கூடிய மக்கள் எந்தவிதச் சிரமமுன்றிக் காணப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் குடிநீர், மருத்துவம், மின்சாரம், போக்குவரத்து போன்ற வசதிகளும் சிறப்புறச் செய்யப்பட்டிருந்தன."

தேவி உபாசகர் தவத்திரு சுவாமி இராமதாசர், ஆலய தக்கார் திரு எம்.பி.நாராயணன், பழனி கோவில் தக்கார் திரு கே. பொன்னுசாமி,ஆலய துணை ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர் திரு கே. எஸ். சோமசுந்தரம் ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

—நமது செய்தியாளர்

## தேவி கருமாரி

''கண்டாலும் பிணிநீங்கும் நிதிபெருகும் கலைஓங்கும்
ஞானமுறும் கருத்துணர்ந்து
விண்டாலும் வானாட்கள் மிகப்பெருகும் செவியுற்றால்
வீரமுறும் வேதை தீரும்
பண்டாலின் கீழமரும் பரமனருள் சிறப்புற்றுப்
பரஞானப் பதமளிக்கும்
மண்டலத்தில் தேவிகரு மாரியவின் புராணச்சீர்
எவராலும் மொழியொ ணாதே''

—நன்றி : திருக்கோயில்

# இளைய தலைமுறைக்கான இன்றையத் தேவை தடுப்பு ஊசி



ஆண்டுதோறும் ஏப்ரல் திங்கள் 7ஆம நாள் உலக நல்வாழ்வு நாளாக உலகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. 1950-ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் இந்நாளில் உலக நாடுகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட நல்வாழ்வுக் கருத்தை வலியுறுத்தும் திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்துவது வழக்கம். இவ்வாண்டு ''ஒவ்வொரு குழந்தைக்கும் தடுப்பு ஊசி'' என்ற கருத்தை உலகச் சுகாதார நிறுவனம் அறிவித்து, தடுப்பு ஊசித் திட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளது.

உலகச் சுகாதார நிறுவனம் 1974ஆம் ஆண்டு முதல் விரிவாக்கப்பட்ட தடுப்பு ஊசித் திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கியது. நோய்களால் அதிகரித்துக் கொண்டே வரும் இறப்பு விகிதங்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் காரணமாக அமைந்தன.

ஆண்டுதோறும் உலகில் 35 இலட்சம் குழந்தைகள் தட்டம்மை, கக்குவான் இருமல், இரணஜன்னி ஆகியவற்றாலும் 2 இலட்சத்து 75 ஆயிரம் குழந்தைகள் இளம்பிள்ளை வாதத்தாலும் உடல் ஊனம் அடைகின்றன. இவர்களில் நிமிடத்திற்கு 10 குழந்தைகள் வீதம் இறக்கின்றன.

விவரிக்கப்பட்ட தடுப்பு ஊசித் திட்டத்தின் முக்கிய நோக்கம், உலகிலுள்ள அனைத்துக் குழந்தைகளையும், கர்ப்பிணித் தாய்மார்களையும் ஏழு முக்கிய உயிர்க்கொல்லி நோய்களான தட்டம்மை, தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரண ஜன்னி, இளம்பிள்ளைவாதம், குழந்தைப்பருவ காசநோய் மற்றும் டைபாய்டு காய்ச்சலிலிருந்து பாதுகாப்பதாகும். இதன்படி 1990ஆம் ஆண்டிற்குள் உலக முழுவதும் பிறக்கின்ற அனைத்துக் குழந்தைகளும் தடுப்பு ஊசி சேவையைப் பெறுகின்றன.

பெரும்பாலான குழந்தைகளின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியின்மையே இந்த ஏழு முக்கிய தொற்றுநோய்கள் தாக்குவதற்கான காரணமாகும். இயற்கையாக நோய் எதிர்ப்புச் சக்தி ஒரு வரது வம்ச வழியான பாரம்பரியம் மூலமும், நல்ல சத்துணவு, சரியான சுகாதாரச் சூழல் காரணமாகவும் கிடைக்கிறது. நோய்த் தடுப்பு ஊசிகள் மூலம் பெறுவது செயற்கையாகப் பெறும் நோய் எதிர்ப்புச் சக்தியாகும்.

ஒரு குழந்தைக்குத் தடுப்பு ஊசி அல்லது தடுப்பு சொட்டு மருந்து கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த ஊசி அல்லது தடுப்பு மருந்தில் என்ன இருக்கிறது? எந்த நோயைத் தடுத்திடத் தடுப்பு ஊசிபோடுகிறோமோ அந்த நோயை உண்டாக்கும் கிருமிகள் வீரியம் குறைக்கப்பட்ட நிலையில் அந்த தடுப்பு மருந்தில் உள்ளன.

அத்தகைய வீரியம் குறைந்த கிருமிகள் தடுப்பு மருந்து மூலம் உள்ளே செலுத்தப்படும்போது அந்தக் குழந்தைக்கு நோய் வருவதற்கு மாறாக, அந்த நோயைத் தடுத்திடும் தடுப்பு அணுக்களை உருவாக்கும் ஆற்றலை அந்தக் குழந்தை பெற்று, அந்த நோயிலிருந்து வாழ்நாள் முழுதும் பாதுகாப்புப் பெறுகிறது.

ஒரு குழந்தை பிறந்ததும் தட்டம்மை எனப்படும் மணல்வாரி, தொண்டைஅடைப்பான், கக்குவான் இருமல், இரண ஜன்னி, இளம்பிள்ளைவாதம், குழந்தைப் டைபாய்டு போன்ற நோய்கள் தாக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**இளம்பிள்ளைவாதம்**

அசுத்தமடைந்த நீர், உணவுப் பண்டங்கள் மற்றும் காற்றுவழி பரவும் ''போலியோ வைரஸ்'' எனும் நுண் கிருமிகளால் உண்டாவதே இளம்பிள்ளைவாதம். நோய் தொற்றிய 5 அல்லது 14 நாட்களுக்குப் பிறகு நோயின் அறிகுறிகள் தென்படும். முதல்





மூன்று நாட்களில் குழந்தை நலமிழந்து காய்ச்சல் உண்டாகும். அடுத்த இரண்டு நாட்களில் காய்ச்சல் ,தலைவலி, சோர்வு,கழுத்து, முதுகு ஆகிய உறுப்புகளில் ஒரு விதப் பிடிப்பு, தசைகளில் வலி ஏற்படும். ஒருகால் அல்லது கை வலுவிழந்து ஊனமாகும்.

**ஒரு மாதத்திற்குட்பட்ட குழந்தைகட்கு ஏற்படும் இரண ஜன்னி நோய்**

பிறந்த 7 முதல் 10 நாட்களுக்குள் குழந்தைக்கு இரண ஜன்னி நோய் ஏற்படலாம். துருப்பிடித்த கத்தி, பிளேடினால் தொப்புள் கொடியை அறுத்தல், அதன் மீது சுண்ணாம்பு, செங்கல் தூள், மணல் போன்றவற்றை வைத்தல் ஆகிய தவறான முறைகளால் இந்நோய் ஏற்படுகிறது.

பிறந்தவுடன் குழந்தை நல்ல நிலையில் சப்பிப் பால்குடித்து, சீரான உடல்நிலையில் இருக்கும். 5 அல்லது 10 நாட்கள் கழித்து உதடுகளைக் கூப்பி, சப்ப முடியாது. முகம், உடல் மற்றும் எல்லாத் தசைகளும் இழுத்து வலிப்பு உண்டாகும். இந்நோய் கண்ட பெரும்பாலான குழந்தைகள் இறந்துவிடும்.

கர்ப்பிணித் தாய்மார்க்கு இரணஜன்னி தடுப்பு ஊசி தக்கபடி போடுவதுடன், மகப்பேறு காலங்களில் துருப்பிடித்த கத்தி, பிளேடு இவற்றால் தொப்புளை அறுக்காதவாறும், சாம்பல், மணல், சாணம் முதலியவற்றை தொப்புள் கொடியில் வைக்காதவாறும் இருக்க வேண்டும்.

**வயதான குழந்தைகள் மற்றும் பெரியவர்கட்கு ஏற்படும் இரண ஜன்னி நோய்**

இரண ஜன்னியை உண்டாக்கும் கிருமிகளின் 'ஸ்போர்கள்' சிறிய காயம், தூசி அல்லது இதர டெட்டனஸ் கிருமிகளின்ஸ்போர்கள் அடங்கிய நிலையில் உடலில் பரவுகின்றன. கிருமி நீக்கம் செய்து தூய்மைப்படுத்தப் படாத கருவிகளால் பல்பிடுங்குதல், அல்லது காதுகளைச் சுத்தம் செய்தல் ஆகியவற்றாலும் இந்நோய் ஏற்படலாம்.

ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகட்குக் காதில் சீழ்வடிதல் இந்நோய் ஏற்பட முக்கிய காரணமாகும். தாடைச்சதைகளில் வலிப்புடன் கூடிய இழுப்பு ஏற்படும். கழுத்து மற்றும் உடலின் தசைகளில் சுருக்கம் ஏற்பட்டு உடல் முழுதும் வில்போல் வளைந்துவிடும். மிகப் பெரும்பாலான குழந்தைகள் இறந்துவிடலாம்.

**தொண்டை அடைப்பான் நோய்**

டிப்தீரியா கிருமிகள் காற்று மூலம் பரவுகின்றன. மிகவும் நோய்பரப்புத் தன்மைகொண்ட ஒரு குழந்தையிடமிருந்து மற்ற குழந்தைகளுக்கு காற்று மூலம் இந்நோய் பரவுகிறது. முதல் மூன்று நாட்களில் தொண்டைக் கரகரப்பு, காய்ச்சல், தலைவலி, இருக்கும்.

குழந்தை சரியாகச் சாப்பிடாது. வழக்கம்போல் விளையாடாது. கழுத்து சற்று வீங்கிய நிலையிலிருக்கும். அடுத்த இரண்டு நாட்களில் உடல்நிலை மிகவும் மோசமடையும். கழுத்து வீக்கம் அதிகரிக்கும்.

சற்று அழுக்கு நிறம் கொண்ட வெள்ளைச்சவ்வு மூச்சுக்குழலுக்கு மேல் பரவி மூச்சுத் திணறலை ஏற்படுத்தும். நோயின் விஷத்தன்மை இருதயம் மற்றும் நரம்பு மண்டலத்தைப் பாதித்து உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும்.

**கக்குவான் இருமல்**

நோயின் ஆரம்பக் காலத்தில் மிகவும் நோய் பரப்புத்தன்மையுடைய ஒரு குழந்தையிலிருந்து மற்ற குழந்தைகட்கு காற்றின் சிறு சிறு துகள்கள் மூலம் இந்நோய் பரவுகிறது.

முதல் வாரம் இருமல், மூக்கு ஒழுகல் மற்றும் இலேசான காய்ச்சல இருக்கும். பின்னர் இருமல் மோசமடைந்து, மூச்சுத் திணறலுடன் அடிக்கடி ஒருவித 'இழுப்'போடு கூடிய நிலை, கணகள் வீங்கி, கண்ணுக்குள் இரத்தக் கசிவு ஏற்படும். இருமலைத் தொடர்ந்து வாந்தியும் இருக்கும். கக்குவான் இருமல் மூலம் நுரையீரல் அழற்சி, சத்துணவுக்குறை நிலை, மூளைக்குப் பாதகம் இவை நேரலாம்.

**குழந்தைப் பருவ காசநோய்**

காசநோயால் பாதிக்கப்பட்ட பெரியவர்கள் இருமித் துப்பும் சளியிலுள்ள காசநோய்க் கிருமிகள் காற்றில் பரவி இந்நோய் உருவாகும்.

பாதிக்கப்பட்ட குழந்தையின் வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்து பாதித்து குழந்தைக்குக் காய்ச்சல் இருமல், தலைவலி ஆகியவை உண்டாகி எப்போதும் ஒரு தளர்ச்சி நிலை மற்றும் விளையாட்டில் நாட்டமின்மை ஏற்படும். காசநோய் மூளை, நிணநீர் ஏந்திகள், நுரையீரல், எலும்பு போன்ற உடலின் பல்வேறு பாகங்களைப்பாதிக்கலாம்.

**டைபாய்டு காய்ச்சல்**

அசுத்தமான தண்ணீர் அல்லது உணவுப் பண்டங்கள் மூலம் டைபாய்டு கிருமிகள் பரவுகின்



றன. நோய்நிலை தாக்கிய இரண்டு வாரங்கட்குப் பின் நோயின் அறிகுறிகள் ஏற்படுகின்றன.

தொடர்ந்து இருக்கும் காய்ச்சல் மெதுவான நாடி ஓட்டம், அழுத்தமான மாவு படிந்த நாக்கு, பெருத்த கல்லீரல் ஆகியவை நோயின் அறிகுறிகளாகும். இதனால் குழந்தைக்குத் தொடர்ந்து தீராத காய்ச்சல், தலைவலி, தளர்ச்சி, பசியின்மை, ஒருவித எரிச்சலூட்டும் நிலை, தூக்கமின்மை, மலச்சிக்கல் ஆகிய தொல்லைகள் ஏற்படும்.

**தட்டம்மை நோய்**

காற்று வழிபரவும் 'தட்டம்மை வைரஸ்' நுண்கிருமிகள் மூலம் இந்நோய் பரவுகிறது. பொதுவாகப் பாதிக்கப்பட்ட ஒரு குழந்தையிலிருந்துதான் இந்நோய் மற்ற குழந்தைகட்குப் பரவுகிறது.

முதல் 10 நாட்களுக்கு என்ன மருந்து கொடுத்தாலும் குறையாத காய்ச்சல் இருக்கும். அடுத்த ஐந்து நாட்களில் மூக்கு ஒழுகி, கண் சிவந்து ஒருவிதத் தொந்தரவு கொடுக்கும். இருமல் முதலில் ஏற்படும். தொடர்ந்து முதலில் முகம், பின்பு மார்பு,முதுகு, கைகள், வயிறு, உயிர்நிலை, கடைசியாகக் கால்கள் என தட்டம்மைத் தழும்புகள் தோன்றும்.

ஒவ்வொருமுறை தழும்பு வரும் போதும் காய்ச்சல் இருக்கும். காய்ச்சல் அடங்கியபின்பு முகத்தில் ஒருவிதத் தோல் உரியும் நிலை உண்டாகும். உடல் பூராவும் தழும்பு மறைந்து தோல் உரியும்.

**தடுப்பு ஊசி கால அட்டவணை**

| வயது | தடுப்புஊசிகள் தடுப்புமருந்துகள் | முறைகள் | தடுக்கப்படும் நோய்கள் |
|---|---|---|---|
| 3 முதல் 9 மாதம் வரை | டி.பி.டி (மூன்றுநோய்த் தடுப்பு) | ஒன்றுமுதல் இரண்டுமாத இடைவெளியில் மூன்றுமுறை | தொண்டை அடைப்பான், கக்குவான், இரண ஜன்னி |
| | போலியோ சொட்டுமருந்து | ஒன்றுமுதல் இரண்டுமாத இடைவெளியில் மூன்றுமுறை | இளம்பிள்ளை வாதம் |
| 9 முதல் 12 மாதம் வரை | தட்டம்மைத் தடுப்பு மருந்து | ஒருமுறை | தட்டம்மை |
| 18 முதல் 24 மாதம் வரை | டி.பி.டி (மூன்றுநோய்த் தடுப்பு) | ஒருமுறை (ஊக்குவிப்பு) | தொண்டை அடைப்பான், கக்குவான், இரண ஜன்னி |
| | போலியோ சொட்டுமருந்து | ஒருமுறை (ஊக்குவிப்பு) | இளம்பிள்ளை வாதம் |
| 5 முதல் 6வயதுவரை | டி.டி.(D.T.) இருநோய்த் தடுப்பு | Δ ஒருமுறை (ஊக்குவிப்பு) | தொண்டை அடைப்பான், இரண ஜன்னி |
| | டி.ஏ.பி. | ஒன்று முதல் இரண்டு மாத இடைவெளியில் இரண்டுமுறை | டைபாய்டு காய்ச்சல் |
| 10 வயது | டி.டி (T.T.) | Δ ஒருமுறை (ஊக்குவிப்பு) | இரண ஜன்னி |
| 16 வயது | டி.டி. (T.T.) | ஒரு முறை (ஊக்குவிப்பு) | இரண ஜன்னி |
| கருவுற்ற பெண்கள் | | | |
| கர்ப்பகாலத்தில் 16 முதல் 36வாரங்கள் வரை | டி.டி. (T. T.) | ΔΔ ஒன்று முதல் இரண்டுமாத இடைவெளியில் (ஊக்குவிப்பு) | இரண ஜன்னி |

Δ இதற்கு முன்பு நோய்த்தடுப்பு ஊசிபோடாவிட்டால் ஒருமாத இடைவெளியில் இரண்டுமுறை போடவேண்டும்.

ΔΔ இதற்குமுன்பு டி.டி. (T.T.) 10 வயதிலும், 16 வயதிலும் கொடுத்திருந்தால் ஒரு ஊக்குவிப்பு டி.டி. கொடுத்தால் போதும்.

மேற்கூறியவை அனைத்தும் ஏழு உயிர்க்கொல்லி நோய்களுக்கான அறிகுறிகளாகும்.

உலகின் ஒவ்வொரு நாடும் அந்நாட்டில் பரவலாக உள்ள தொற்றுநோய்களின் தன்மை, அவற்றைத் தடுத்திட கிடைக்கும் தடுப்பு ஊசிகள், அவற்றைத் தேவைப்பட்ட குழந்தைகட்குக் கொடுக்கத் தேவையான நிதிவசதிகள் மற்றும் சேவை முறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அந்நாட்டுத் தடுப்பு ஊசி கால அட்டவணையைத் தயாரிக்கின்றன. நமது நாட்டைப் பொறுத்த அளவில் பொருத்தமான அட்டவணை ஒன்று, நிபுணர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

இந்தத் தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொண்டால் பெருமளவில் மேற்சொன்ன தொற்று நோய்கள் வராமல் தடுத்துவிடலாம். அப்படித் தவறி வந்தாலும் அந்த நோயின் கடுமையும் அதனால் ஏற்படும் சிக்கல்களும் வெகுவாகக் குறைந்துவிடும்.

அரசு மருத்துவ மனைகளிலும் ஆரம்பச் சுகாதாரம் மற்றும் துணைச்சுகாதார நிலையங்களிலும் இலவசமாகத் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. தனியார் மருத்துவ நிலையங்கள் சிலவற்றிலும் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. தட்டம்மை நோய் வராமல் தடுக்கும் தடுப்பு ஊசித் திட்டத்தை சென்னை

மாநகராட்சி 1987 ஏப்ரல் முதல் தீவிரப்படுத்தியுள்ளது. ஓராண்டு கால அளவில் ஏறத்தாழ 96 ஆயிரம் குழந்தைகள் இலவசத் தடுப்புஊசியின் பயனைப் பெறுவர்.

சென்னையிலுள்ள மாநகராட்சியின் 44 தாய்சேய் நல விடுதிகளிலும் மாநகராட்சியின் 61 மருந்தகங்களிலும் தடுப்பு ஊசி போடப்படுகிறது. அத்துடன் இளம்பிள்ளை வாதத்துக்கான 'போலியோ' சொட்டு மருந்தும் கக்குவான் இருமல் தடுப்புநோய்க்கான முத்தடுப்பு ஊசியும் இந்த மருத்துவமனைகளில் போடப்படுகின்றன.

குழந்தை பிறப்பு பற்றிய தகவல்கள் அந்தந்த மருத்துவமனைகளிலிருந்து மாநகராட்சிக்கு அனுப்பப்படுவதால், அப்படிப் பெறும் முகவரியைக் கொண்டு தடுப்புஊசிச் சேவை வழங்கப்படுகிறது. தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதற்கான விவரங்கள் அடங்கிய அட்டை குழந்தையின் தாயார் வசம் ஒப்படைக்கப்படுகிறது.



ஒவ்வொரு குழந்தையும் பரிபூரண ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வளர அன்புள்ளமும் ஆற்றல் திறனும் கொண்ட பெற்றோர்க்கு தடுப்பூசி விழிப்புணர்ச்சி அவசியம். குழந்தைகளின் உடல்நலம் பேணும் அக்கறையும் தேவை.

சத்துள்ள உணவு வகைகளைக் கொடுக்க வேண்டும். குழந்தை வாழுமிடம் சுத்தமாக இருக்க வேண்டும். நாள்தோறும் உடல் சுத்தம் பேணவேண்டும். கைவிரல் நகங்களில் அழுக்குச் சேராமல் நகங்களை வெட்டிவிட வேண்டும். காலில் செருப்பணியும் பழக்கம் வரவேண்டும். சுத்தமான ஆடைகளையே உடுத்த வேண்டும். ஒவ்வொரு மாதமும் எடை எடுத்து அளவு கூடுகிறதா அல்லது குறைகிறதா என்று பார்க்கவேண்டும்.

தடுப்பு ஊசி ஒரு குழந்தையின் வாழ்வையும் வளத்தையும் நிர்ணயிக்கிறது. நோய்களை எதிர்க்கும் திண்மைபெற ஒவ்வொரு குழந்தைக்கும் தடுப்பு ஊசிபோடுவது அவசியம். நாட்டின் எதிர்காலத் தூண்களான நமது இளந்தலைமுறையைச் சீருடனும் சிறப்புடனும் வளர்ப்போம்.

—வி. இராவணன்

# சேலம் மாவட்டத்தில்...

சேலம் மாவட்டம் காவிரி ஆறு பாயும் தென்மேற்குப்பகுதியைத் தவிர, மாவட்டத்தில் இதரப்பகுதிகள் அனைத்தும் பருவமழையையே சார்ந்துள்ளது. பருவமழை பெய்தால்தான் இம்மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள குடிநீர் ஆதாரங்களின் நிலத்தடி நீர் சுரக்கும்.

சேலம் மாவட்டத்தின் சராசரி மழையளவு [illegible]4.2 மி.மீ. ஆகும் இருப்பினும் சுமார் 1,000 மி.மீ அளவு மழைபெய்தால்தான் இம்மாவட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாது. 1984, 1985, 1986 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் இம்மாவட்டத்தில் பெய்த மழையளவு சராசரி மழையளவை விடக் குறைந்த அளவாக இருந்ததால் இம்மாவட்டம் கடந்த மூன்றாண்டுகளாகக் குடிநீர்த் தட்டுப்பாடால் பாதிக்கப்பட்டது. 1986ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவக்காற்றால் கிடைக்கவேண்டிய மழை கிடைத்தது. உண்மையேயாயினும், இந்த மழை ஏற்கெனவே இறங்கிவிட்ட நிலநீர்மட்டத்தைச் சில நாட்களுக்கு மேலும் குறைந்துவிடாமல் தடுக்க மட்டுமே உபயோகப்பட்டதே தவிர, மாவட்டத்தில் நிலவிய குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்குச் சிறிதும் உதவவில்லை.

மாவட்டத்தில் நில நீர்க்கோட்டத்தின் மூலம் சில கிணறுகளை ஆதாரமாகக் கொண்டு மாதாமாதம் நிலநீர் கணக்கிடப்படுகிறது. ஜனவரி 1987ல் பெய்த சிறிதளவு மழையின் காரணமாக பிப்ரவரியில் சராசரியாகக் கிணறுகளில் 0.9 மீட்டர் நிலத்தடி நீர் உயர்ந்தபோதும், அடுத்த மாதங்களில் சுத்தமாக மழையே இல்லாத காரணத்தால் நிலத்தடி நீர் வேகமாகக் குறைந்துவிட்டது. அவ்வாறு குறைவு ஏற்பட்டது 2.6 மீட்டராகும்.

வறட்சியினால் வேலைவாய்ப்பிழந்த விவசாய கூலி மக்களுக்கு மாற்றுவேலை கொடுக்க வேண்டி ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 256 வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மூலம் தினசரி 1,700 மனித நாட்களுக்கான வேலை கொடுக்கப்படுகின்றது.

பொதுப் பணித்துறையினர் மூலம் 13 வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. மொத்தம் 400 மனித சக்தி நாட்களுக்கான வேலை செய்யப்பட்டுள்ளது.

விவசாயப்பொறியியல் துறையின் மூலம் இரண்டு கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஒன்று, பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரங்களில் செட்டியூரிலும், மற்றொன்று மோகனூர் வட்டாரத்தில் திப்ரமாதேவி என்ற இடத்திலும் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மூலம் ஒரு நாளைக்கு 200 மனித சக்தி நாட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

வறட்சிகாரணமாக, விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டதால் கால்நடைகளுக்குத் தீவன இருப்பும் ஓரளவுக்குக் குறைந்துள்ளது. இதனைச் சமாளிக்க வேண்டி கால்நடைத்துறை மூலம் உபரி மாவட்டங்களில் இருந்து வாங்கி வரப்பட்டு, இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இத்தீவனம் அரசால் வாங்கப்பட்ட விலைக்கே ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன் பெறும் ஏழைக் குடியானவர்களுக்கு விற்கப்படுகிறது.

ஆத்தூர், பெத்தநாயக்கன் பாளையம், சங்ககிரி, மோர் பாளையம் ஆகிய இடங்களில் இத்தீவனம் விற்கப்படுகின்றது.

மு. கிருஷ்ணன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம் மாவட்டம்.




# அறிஞர்களின் பொன்மொழிகள்

**அச்சம்**

அச்சமில்லா உள்ளங்கள்தான் விரைவில் மணிமுடியை எட்ட முடியும்.
— வில்லியம்ஸ் ஷேக்ஸ்பியர்

அச்சம், பொய்மையின் நெருங்கிய நண்பன்; அது போலவே, அச்சமின்மையை வாய்மை தொடர்கிறது.
— ஜவஹர்லால் நேரு

நீ அச்சம் கொள்ள மறுத்தால், உன்னை அச்சுறுத்த எவரும் இருக்கமாட்டார்.
— மகாத்மா காந்தி

**இலட்சியம்**

உயர்ந்த இலட்சியத்திற்காக உயிர் துறப்போர் ஒரு நாளும் தோற்பதில்லை.
— பைரன்

இலட்சிய உணர்வுள்ள மனிதன் ஆயிரம் தவறுகள் செய்தால், இலட்சிய உணர்வு இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான் என்று நான் நம்புகிறேன். ஆகவே இலட்சிய உணர்வுகொண்டிருப்பதே சிறந்தது.
—சுவாமி விவேகானந்தர்.

**உண்மை**

உண்மை கொடியது. ஆனால் அதை நேசிக்க முடியும். தன்னை நேசித்தவர்களை, அது சுதந்திர மானவர்களாகச் செய்கிறது.
— ஜார்ஜ் ஸாந்தாயனா.

உடலுக்கு உணவு போலவே உள்ளத்திற்கு உண்மைகள்.
— எட்மண்ட் பர்க்.

உண்மையை விலைக்கு வாங்கு. அதை விற்காதே.
— சாலன் மன்னன்
(விவிலியம்)

**எழுத்தாளன்**

எழுத்தாளன், மனித ஆன்மாவின் பொறியாளர்.
— ஜோஸஃப் ஸ்டாலின்

திறமை மட்டும், ஒரு எழுத்தாளனைப் படைத்து விடாது. எழுத்துக்குப் பின் மனித இதயம் இருக்க வேண்டும்.
— ரால்ஃப் வால்டேர் எமெர்ஸன்.

ஒரு எழுத்தாளன், தன் ஆன்மாவின் உள்ளியக்கத்தை எந்த அளவுக்கு வெளிப்படுத்துகிறானோ, அந்த அளவுக்கு, நமக்குப் பிரியமான தேவையான எழுத்தாளனாவான்.
லியோ டால்ஸ்டாய்

## புற்றுநோய்க்கு விலங்குகளின் ஈரலில் இருந்து மருந்து

புற்றுநோய்த் தடுப்புக்குப் பயன்படக்கூடிய பொருள் ஒன்றை, விலங்குகளின் செல்களில் இருந்து பிரித்தெடுப்பதில் சோவியத்து விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர். செல் சேர்க்கை ஒருங்கிணைந்து நெருக்கமாக இருக்குமானால், அத்தகைய விலங்குகளுக்கு புற்றுநோய் வருவதில்லை என்பது, விலங்குகளைக் கொண்டு நடத்தப்பட்ட சோதனைகளில் தெரிய வந்துள்ளது. எனவே, புற்றுநோயைத் தடுக்க வேண்டுமானால், செல் .சேர்க்கையின் ஒருங்கிணைப்பை அதிகரிக்க வேண்டும். இதனைச் செய்யக்கூடிய பொருளை, விலங்குகளின் செல்களில் இருந்து விஞ்ஞானிகள் தற்போது பிரித்தெடுத்துள்ளனர். அவ்வாறு விலங்குகளின் ஈரலில் இருந்து 'காண்டாக்டின்' என்ற பொருள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளது.

**சோவியத்துச் செய்தி**

**ஒழுக்கம்**

ஒழுக்கம், வெள்ளைத்தாள் போன்றது; ஒரு முறை கறை படிந்து விட்டால், அது முன் போல் மீண்டும் வெள்ளையாகத் தோன்றச் செய்வது, அரிது.
— ஜோயல் ஹாஸ்

ஒழுக்கம், ஒரு மரம் போன்றது; புகழ், அதன் நிழல்; நாம் நிழலைப்பார்த்து, பொருளென்று எண்ணி விடுகிறோம். மரம்தான் நிலையானது; நிழல் அல்ல.
—ஆபிரகாம் லிங்கன்.

நம் அன்றாட வாழ்க்கையை ஆள்வது ஒழுக்கமே,; அது மேதைக்கும் மேம்பட்டது.
—ஃபிரெடரிக் சான்டர்ஸ்.

தொகுப்பு:

**கிருஷ்ண முத்துராமலிங்கம்**




**மா**ணவ மணிகளே!

இது உங்கள் பக்கம்.

குட்டிக்கதைகள், கட்டுரைகள், பொது அறிவுத் துணுக்குகள், கவிதைகள் முதலானவை எழுதி அனுப்பலாம். கதை, கட்டுரை, கவிதைகள் சொந்தமானவையாக இருத்தல் வேண்டும். துணுக்குகளுக்கு ஆதாரம் இருத்தல் வேண்டும்.

கல்வியோடு கதை, கட்டுரை எழுதுதல், விளையாட்டு, நாடகம், ஓவியம், பேச்சு முதலானவற்றில் திறமையுள்ள மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய குறிப்புடன், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தையும் இணைத்து, வகுப்பு ஆசிரியர் கையொப்பமுடன் அனுப்பி வைக்கலாம்.

பள்ளிச் சார்பில் நடக்கும் நாட்டு நலப்பணித் திட்டம் (என். எஸ். எஸ்.) பற்றிய செய்திகளையும் புகைப்படத்துடன் ஆசிரியர்கள் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்.

# அறிவுச் சுடர்!



■ நீர்த் தாவரங்கள் என்றால் என்ன?
அல்லி, தாமரை போன்றவை நீரில் மட்டுமே காணக்கூடிய தாவரங்களாகும்.

■ உழவனின் நண்பன் என்று எது அழைக்கப்படுகிறது? ஏன்?
மண்புழு, நிலத்தைத் துளைத்து உழுதது போல் செய்கிறது.

■ சூயஸ் கால்வாயால் இணைக்கப்பட்ட கடல்கள் யாவை?
செங்கடல், மத்திய தரைக் கடல்.

■ கங்கையும், யமுனையும் கூடுமிடம் எது?
அலகாபாத்.

■ ஒரு பொருள் மேலிருந்து கீழே விழுவதற்குக் காரணம் என்ன?
புவி ஈர்ப்பு விசையால்.

■ ஆக்ஸிஜனைத் திரவமாக்கிய அறிவியல் மேதை யார்?
பிக்டெட்.

■ பாதரசம் எந்த உலோகத்தைப் பிரிக்கப் பயன்படுகிறது?
தங்கம், வெள்ளி.

■ சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகம் எது?
புதன்.

■ நீராவி எஞ்சினில் இயக்க ஆற்றலை உருவாக்கும் இடம் எது?
நீராவி சிலிண்டர்.

■ லென்ஸின் இருவகைகள் யாவை?
குவி லென்ஸ், குழி லென்ஸ்.

■ சிறந்த மின் கடத்திகளாக இருக்கும் உலோகக் கலவைகள் மூன்று கூறு.
நிக்ரோம், கான்ஸ்டன்டான், மாங்கனீஸ்.

■ அதிக அளவில் வைரங்கள் எங்கு கிடைக்கின்றன?
தென் ஆப்பிரிக்காவில். 90% வைரங்கள் கிடைக்கின்றன.

■ பேதி மருந்தாகப் பயன்படுத்தப்படும் படிகத்தின் பெயர் என்ன?
மக்னீசியம் சல்பேட் என்ற படிகம், பேதி மருந்தாகப் பயன்படுகிறது.

■ மாலை நட்சத்திரம் எனப்படுவது எது?
வீனஸ் கிரகம்.

■ உலகிலுள்ள ஒரே இந்து அரசு எது?
நேபாளம்.

■ தமிழ்நாட்டில் பாயும் ஆறுகள் எவை?
காவேரி, கோதையாறு, தாமிரவருணி, தென்பண்ணை, பாலாறு, வைகை.

■ ரோல்ஸ்ராய்ஸ் கார்கள் எங்கே செய்யப்படுன்றன?
டெர்பியில்.

■ ஆமையின் வேகம் எவ்வளவு?
1 மணிக்கு 0-17 மைல்.

■ உடலில் அயோடின் குறைவால் ஏற்படும் நோய் எது?
முன் கழுத்துக் கழலை.

■ மிக உயரமான விமான தளம் எங்கே இருக்கிறது?
லடாக்.

■ கிளியரிங் ஹவுஸ் என்பது என்ன?
பல்வேறு வங்கிகளின் பிரதிநிதிகள் கூடி காசோலைகளைத் தத்தம் வங்கிகளுக்கு மாற்றுவது.

■ முதன்முதலாக தபால்களை விமானம் மூலம் எப்பொழுது ஏற்றிச் சென்றார்கள்?
1911ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ஆம் தேதி.

■ முத்திரை இடுவதற்குப் பயன்படும் அரக்கு எதனால் செய்யப்படுகிறது?
அரக்கு, டர்பைன்டைன், இங்குலிகம், இம்மூன்றும் கலந்தது.

■ இந்தியாவின் தேசிய மலர் என்ன?
தாமரை.

■ ஜப்பானியர்களின் மிக முக்கியமான பண்டிகை எது?
புத்தாண்டு பிறப்பு.

■ ஊசியைப் பயன்படுத்தி நோயைக் குணப்படுத்தும் முறைக்கு என்ன பெயர்?
அக்குபஞ்சர்.

■ அணுவின் முக்கிய அடிப்படைத் துகள்கள் யாவை?
எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான்.

■ எவ்வகை இரும்பு மிகத் தூய்மையானது?
தேனிரும்பு.




பல்லவன்

சிறகைக் கட்டிக் கொள்ளுங்கள் - இளைய
சிட்டுக ளேஇங்கு வாருங்கள் !
பறந்து வானில் கூடுங்கள் - மெல்லிய
பாதம் பதித்துப் பாடுங்கள்!

வெள்ளிச் சம்பா அரிசிதனை-அந்த
வெள்ளை நிலவுப் பானையிலே
அள்ளி வந்து கொட்டுங்கள்-மேகம்
அளித்த நீரை ஊற்றுங்கள்!

நிலவைக் காட்டிப் பிள்ளைக்கு-தாய்தான்
நிதமும் ஊட்டும் உணவைப்போல்
நிலத்தில் பசித்த குழந்தைக்கு-அந்த
நிலாச் சோற்றை ஊட்டுங்கள்!

நிலவில் சென்று குடியேற-அறிவால்
நித்த நித்தம் முயலுங்கள்!
நிலத்தில் உலவும் மனிதருக்குள்-பேதம்
நிலவும் போக்கைக் களையுங்கள்!



# நீர் அமுதம்

## எஸ்.எஸ்.இராமசாமி

தண்ணீர், தண்ணீர் என்று தண்ணீரைத் தேடி அலையும் இந்நாளில் தண்ணீர் அமுதமாகவே உள்ளது. திருவள்ளுவரும் தண்ணீரை அமிழ்தம் என்றே திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார். தண்ணீர் உயிர்போன்றது என்று கம்பர் இராமாயணப் பாடலில் காணப்படுகிறது. இன்று வானம் பொய்த்துத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வறட்சி ஏற்பட்டுள்ளது. சென்னை நகரில் ஒருநாள் விட்டு ஒருநாள் குழாய்களில் குடிநீர் வருகிறது. 1983ஆம் ஆண்டிலும் இதே நிலைமை ஏற்பட்டது.

நம் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருக்கும் தண்ணீரைப் பற்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் நாம் அறிந்துகொள்வது நல்லது. இதற்கு இயற்பியல், வேதியல் வானிலையியல், புவியியல், கடலியல், இயக்கவியல் முதலான பல அறிவியல் துறைகளைப் பற்றிய அறிவை நாம் ஓரளவு பெற்றிருக்க வேண்டும். அப்பொழுது தான் சில இயற்கைக் காட்சிகளையும், விந்தை விளைவுகளையும் நாம் விளங்கிக் கொள்ள முடியும். இன்னும் சில புதிர்கள் விளங்காமலேயே இருந்து வருகின்றன.

உலகில் பெரும்பகுதி நீர்தான். மலிந்துகிடக்கும் இந்த அற்புதப் பொருள் நூற்றுக்கு 97 பங்கு கடல். தண்ணீர் பட்டபாடு என்ற பழமொழி வழங்கி வந்த போதிலும் கடல் நீரைக் குடிக்கவோ வேளாண்மைக்கோ பயன்படுத்த முடிவதில்லை. இது உப்பு நீர். மீதமுள்ள மூன்று பங்கிலும் இரண்டு பங்கு வட, தென் துருவங்களில் பனிக்கட்டிப் பாறைகளாய் உறைந்து கிடக்கின்றது. கடைசி ஒரு பங்கிலும் பெரும்பகுதி நிலத்தடி நீராக உள்ளது. நிலத்தின் மேற்பரப்பிலுள்ள ஆறு, குளம், ஏரி முதலானவற்றை நம் குடிநீர்த் தேவைக்குப் பெரும்பாலும் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு நம் தேவைக்கு ஈடு கொடுத்து வரும் தண்ணீர் நூறில் ஒரு பங்குகூட இல்லை. இதிலும் சிறு பகுதி தான் குடிக்கத்தக்கது.

உலகில் மனிதன் தோன்றிய நாளில் இருந்த தண்ணீர்தான்-அதே தண்ணீர்தான் -இந்த நாளிலும் உள்ளது. உலகின் நீர் மொத்தத்தில் கூடுதல் குறைதல் இல்லை.

### நாகரிகத்தின் தோற்றம்

உலகில் தோன்றிய பெரிய நகரங்கள் எல்லாம் ஆற்றங்கரையில் தோன்றி வளர்ந்தவையே என்பதை நாம் வரலாற்று வாயிலாக அறிகிறோம். பழங்காலத்தில் எகிப்திய நாகரிகத்திற்கு நைல் ஆறு காரணமாகும். வட ஆப்பிரிக்காவின் பெரும்பகுதி சகாரா பாலை வனமாகும். ஆனால் நைல் ஆறு பாயும் எகிப்தியச் சமவெளி செழிப்பாக உள்ளது. இதுபோன்று கங்கை, காவிரி, தாமிரபரணி முதலான ஆறுகள் பாயும் செழிப்பான பகுதிகளைக் கூறலாம். நம் நாட்டில் சிந்து வெளி நாகரிகம் ஏற்பட்ட வரலாற்றையும் நாம் அறிவோம்.




பூமியின் மேற்பரப்பிலும், மண் துகளுடன் சேர்ந்தும், புவியின் அடியிலும் காற்றிலும் எல்லா உயிர்களிடத்தும் நீர் காணப்படுகிறது. நம் உடலில் 70 விழுக்காடு, நீர் என்று கண்டுள்ளனர். நம் இரத்தத்தில் காணப்படும் உணவுப் பொருளை மாற்றி நீரானது இரத்த ஓட்டத்தின் மூலம் திசுக்களின் வளர்ச்சிக்கு எடுத்துச் செல்கிறது. மற்றப் பிராணிகளின் உடலிலும் அப்படியே. பூமியிலுள்ள உப்புச் சத்துகளைக் கரைத்து, தாவரங்களின் பல பகுதிகளுக்கும் அவற்றின் வளர்ச்சிக்காக எடுத்துச் செல்வது நீர் தான்.

### கூட்டுப் பொருள்

நெடுங்காலமாக நீரை ஒரு தனிமப் பொருளாகக் கருதி வந்தனர். 18ஆம் நூற்றாண்டில் தான் இது ஹைடிரஜனும், ஆக்சிஜனும் சேர்ந்த ஒரு கூட்டுப் பொருள் என்று தெரிய வந்தது. பல விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாகச் சோதனை நடத்தி வந்தனர். ஆக்சிஜனைக் கண்டுபிடித்த ஜோஸப் பிரீலிட்ஸ் 1781-ஆம் ஆண்டில் சோதனைக் குழாயில் அடங்கிய ஆக்சிஜன், ஹைடிரஜன் கலவையினூடே மின் ஆற்றலைச் செலுத்தி இரண்டும் சேர்ந்து நீர்த்துளிகள் உண்டாவதை மெய்ப்பித்துக் காட்டினார். தண்ணீரை ஹைடிரஜனாகவும், ஆக்சிஜனாகவும் பிரித்துவிடலாம்.

### மூன்று நிலைகள்

தண்ணீர் மூன்று நிலைகளில் இருக்கக்கூடும். தண்ணீராக இருக்கும்போது இது ஒரு திரவம்; கெட்டி நிலையில் அது பனிக்கட்டியாக இருக்கும்; வாயு நிலையில் இது நீராவியாகக் காற்றில் கலந்திருக்கும். தூய்மையான நீருக்கு நிறம், மணம், சுவை கிடையாது. மழைநீரும், காய்ச்சி வடித்த நீரும் தூய்மையானது என்று கூறலாம். ஆனால் மழை நீர் காற்று மண்டலத்தினூடே வரும்பொழுது காற்றிலுள்ள

ஆக்சிஜனும், நைட்ரஜனும், கார்பன்டை-ஆக்ஸைடும் ஓரளவு அதில் கலந்து விடுகின்றன. ஒளியைத் தண்ணீர் நன்கு எதிரொளிக்கிறது. ஆனால் வெப்பத்தையும், மின்சாரத்தையும் எளிதில் கடத்துவதில்லை.

நமது அன்றாட வாழ்க்கையில் நீர் முக்கிய இடம் பெறுகிறது. உணவுப் பொருள்களைச் சமைப்பதற்கும், உடலையும், உடைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கும் நீர் தேவைப்படுகிறது. தொழிற்சாலைகளுக்கும், வேளாண்மைக்கும் நீர் பெருமளவில் தேவை.

**மழை**

வளி மண்டலத்தைச் சுமார் மூன்று அடுக்குகளாகப் பிரிக்கலாம். 6 அல்லது 7 மைல் உயரம் வரை அடி வளி மண்டலம் (Stratosphere), அதற்குமேல் 60 மைல் உயரம் வரை மீவளி மண்டலம் (Troposphere), இதற்கு மேலுள்ள பகுதி அயனிமண்டலம் (Ionosphere).

அடி வளி மண்டலத்தில் உண்டாகும் மேகத்திரள்களும் மேகக் கூட்டங்களுமே மழை பெய்வதற்குக் காரணமாக அமைகின்றன. ஆறு குளம், ஏரிகள் போன்ற நீர் நிலைகளிலுள்ள நீர், வெப்பத்தால் ஆவியாகிறது. இது காற்றிலுள்ள வாயுக்களுடன் சேர்ந்து, காற்றினால் வானிற்குக் கொண்டு செல்லப்படுகிறது. மேலே செல்லும் காற்று குளிர்ச்சியடைந்து கொண்டே போகும். மிகக் குறைந்த தட்ப நிலையில் காற்றிலுள்ள தூசுகளை மையக் கருவாக கொண்டு சிறிய நீர்த்திவலைகளாக மாறுகிறது. இத்தகைய தட்பநிலையை 'பனிநிலை' (Dew point) என்பார்கள். நீர்த் திவலைகள் நிறைந்த காற்றைத் தான் மேகம் என்கிறோம். நீர்த் திவலைகள் மேலும் குளிர்ச்சியடைந்து அவை பல ஒன்று சேர்ந்து திரண்டு மழைத்துளிகள் உண்டாகின்றன.

உலகிலுள்ள பல்வேறு இடங்களின் வெப்பநிலை, உயரம், ஈரப்பதம், காற்றின் அழுத்தம் இவற்றைப் பொறுத்து மழை பெய்யக்கூடும். ஒரு மழைத்துளியின் விட்டம் 5 மில்லிமீட்டர் என்றும், மணிக்குப் பதினெட்டு மைல் வேகத்தில் மழைத்துளிகள் புவியில் விழுகின்றன என்றும் அறிவியல் அறிஞர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

காற்றில் ஈரப்பதம் மிகவும் அதிகமாகவும், மிக்க வெப்பமான நாளாகவும் இருந்தால் காற்றின் மேலடுக்கு வழக்கத்திற்கு மாறா



கக் குளிர்ச்சியடையும். நீர்த்துளிகள் கடும் குளிரில் இறுகி ஆலங்கட்டி மழை பெய்கிறது. ஒரு துளி, கிட்டத்தட்ட எலுமிச்சம் பழம் அளவு இருக்கும்.

இந்தியாவில் இமயமலையின் தெற்குமலைச் சரிவில்தான் உலகிலேயே மிகுதியாக மழை பெய்கிறது. இங்கு ஆண்டுக்கு 500 முதல் 1500 சென்டி மீட்டர் மழை பெய்கிறது. அசாம் மாநிலம் செரப்பூஞ்சியில் ஆண்டுக்குச் சராசரி மழை 1300 சென்டிமீட்டர் ஆகும்.

**செயற்கை மழை**

தமிழ்நாட்டில் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வறட்சி நிலைமை ஏற்படுகிறது. 1983ஆம் ஆண்டிலும் இப்பொழுது 1987ஆம் ஆண்டிலும் வறட்சி ஏற்பட்டுள்ளது. 1983ஆம் ஆண்டில் செயற்கை மழையைப் பொழியச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக அமெரிக்காவிலிருந்து ஹெண்டர்சன் தலைமையில் வல்லுநர் குழு சென்னை வந்தது. மீனம்பாக்கம் விமான நிலையத்தில், சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்ட ரேடார் (Radar) கருவி பொருத்தப்பட்டது. இதனால் வானிலை பற்றிய தகவல்களைத் துல்லியமாகப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது.

செயற்கை மழைக்கென்று கட்டப்பட்ட விமானம் ஒன்றும் வந்து சேர்ந்தது. 1987 ஜூலை மாதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி குறிப்பிடத்தக்கது. மழை பொழிவதற்கேற்ற கார் மேகங்கள் உருவானதைத் தெரிந்துகொண்டு அமெரிக்கக் குழுவினர் தங்களுடைய விமானத்தில் சோழவரம் பகுதியிலும், பூண்டி பகுதியிலும் விமானத்தில் சென்று சில்வர் அயோடைடு என்னும் இரசாயனப் பொருளை தூவினார்கள். சுமார் 20,000 அடி உயரம் சென்றதும் விமானத்தின் ஒருபுறம் நீட்டிக்கொண்டிருக்கும் (12 வத்திகள்) குழாயினையும் எரியச் செய்து 'சில்வர் அயோடைடு' துகள்களை மேகத்தினூடே செலுத்தினார்கள். இதனை விதைத்தல் (Cloud Seeding) என்று கூறுகிறார்கள். இத்துகள்கள் மேகத்தினூடே பரவி ஒவ்வொரு துகளும் ஒரு மையக் கருவாக அமைகின்றது. ஒவ்வொன்றைச் சுற்றிலும் திடீர் உறைவினால் பனிக்கட்டி உறைந்து மழைத்துளிகள் போதிய பருமனளவில் உருவாகி மழை பெய்கிறது. அந்த ஆண்டு பூண்டி ஏரிப்பகுதியில் நன்கு செயற்கை மழை பெய்தது.

இவ்வாறு மழை பெய்வதற்குப் பக்குவமான வானிலை உருவாக வேண்டும். அதற்கேற்ற கார் முகில் கூட்டங்கள் (Cumulonimbus Clouds) திரண்டு இருந்தால் தான் செயற்கை முறையில் மழை பொழியச் செய்ய முடியும். இல்லையெனில் மழையை வரவழைக்க முடியாது. இந்த ஆண்டில் (1987) தமிழ்நாடு அரசின் முயற்சியால் சென்னையில் 26.8.87 அன்று இரவு செயற்கை மழை 3 மணி நேரம் பெய்தது. இதனால் சோழவரம் ஏரியில் 38 மில்லி மீட்டரும், புழலேரியில் 24 மில்லி மீட்டரும் மழை பெய்துள்ளது.

**பனிக்கட்டி**

கெட்டியான நிலையிலுள்ள தண்ணீர்தான் பனிக்கட்டி என்பது நமக்குத் தெரியும். சாதாரண அழுத்தத்தில் 32° பாகை பாரன்ஹீட் (0° பாகை சென்டிகிரேட்) தட்பநிலையில் தண்ணீர் பனிக்கட்டியாகின்றது. தூய்மையான நீர் உறைந்து பனிக்கட்டியானால் அது நிறமற்றதாக இருக்கும். இவ்வாறு உறையும்போது நீரின் அடர்த்தி, நிறையை விடக் குறைகிறது. பருமன் அதிகரிக்கிறது. இதனால் தான் பனிக்கட்டி தண்ணீரில் மிதக்கிறது. அதன் கன அளவில் 9ல் ஒரு பங்கு தான் நீரின் மேற்பரப்பில் காணப்படும். மீதமுள்ள பகுதி தண்ணீரின் அடியில் இருக்கும். பெரிய பனிப் பாறைகள் (Ice Berg) கடலில் மிதக்கின்றன. கப்பல்கள் இவற்றில் மோதிச் சேதமடைவதுண்டு.

**பனிபாறு: (Glaciers)**

இமயமலை போன்ற உயரமான மலைப்பகுதிகளிலும் துருவப் பிரதேசங்களிலும் வெப்பநிலை மிகக் குறைவாக இருக்கும். அங்கு நீர் உறைந்து, பல பகுதிகள் எப்பொழுதும் பனிக் கட்டியாகவே இருக்கும். இவற்றின் மீது மேலும் மேலும் வெண்பனி (Snow) படிந்து குவிவதால் அதன்பளுவே

அதை மெள்ள மெள்ள நகரச் செய்கிறது. இவ்வாறு உண்டாகும் பனிக்குவியலே பனியாறு எனப்படும். இவை நகரும்போது வெப்பம் அதிகமாகும். பனிக்கட்டி உருகுவது மிகுதி. இப்பனியாறுகளினால் பல மலைப்பகுதிகளுக்குச் சேதம் ஏற்படும். பனியாறு கடலில் விழும்போது உடைந்து பனிக்கட்டிப்பாறைகளாகச் சிதறுகின்றன. மலையேறுபவர்களுக்குப் பனிப்பாறைச் சரிவினால் ஆபத்து உண்டாகிறது. சிலர் புதையுண்டு இறக்கிறார்கள்.

**குடிநீர்** : பொதுவாக ஆறுகள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் முதலானவற்றிலிருந்து நாம் குடிநீர் பெறுகிறோம். பெரிய நகரங்களுக்குக் குழாய்மூலம் குடிநீர் கிடைத்து வருகிறது. உலகின் சில பகுதிகளில் குடிநீரும், வேளாண்மைக்குக் கிடைக்கும் நீரும் அரிதாகி வருகிறது. எனவே கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டத்தை ஆராய்ந்து வருகிறார்கள். இதற்குச் செலவு மிக அதிகமாகும். அமெரிக்காவின் தென் கிழக்கிலுள்ள ஃபிளாரிடா, ஆஸ்திரேலியா, அரபுநாடுகள் ஆகியவற்றில் அதிகப் பொருட்செலவில் இத்திட்டம் செயல்படுகிறது. சென்னையிலும் இது பற்றி ஆராய்ந்து வருகிறார்கள்.

குடிநீருக்கு, முழுக்க முழுக்க வடகிழக்குப் பருவமழையைத்தான் சென்னை நகரமக்கள் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. சரிவர மழை பெய்து பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஆகியவை நிரம்பினால் 6.5 மில்லியன் கன அடி நீர் கிடைக்கும். அடுத்த 12 மாதங்களுக்கு இது போதுமானது.

இந்த ஆண்டு பூண்டி, சோழவரம் நீர்த்தேக்கங்கள் ஏப்ரல் மாதத்தில் வறண்டுவிட்டன. ஜூன் இறுதிக்குள் புழலேரியும் வறண்டு விட்டது. எனவே நிலத்தடி நீரைப் பயன்படுத்தி ஒரு நாள் விட்டு ஒருநாள் குடிநீர் சுமார் 43 மில்லியன் காலன் வழங்கப்படுகிறது.

**ஏப்ரல், மே மாதங்களில் உருவாகும் புயல்** : சில சமயங்களில் ஏப்ரல்-மே மாதங்களில் புயல் உருவாகி வழக்கத்திற்கு மாறாக கனத்த மழை பெய்து ஓரளவு குடிநீர்ப் பஞ்சம் நீங்குவதுண்டு. இந்த நூற்றாண்டில் 8 முறை புயல் அல்லது காற்றழுத்த மண்டலம் உருவானது. சில, ஆந்திரக் கடற்கரையைக் கடந்து சென்றன. ஆனால், சென்னைக்கு மழையைக் கொண்டு வந்தன. 1979-ஆம் ஆண்டில் உருவான புயல், சென்னை அருகே கடந்து சென்றதால் கனத்த மழை பெய்தது. 1952 ஆம் ஆண்டு மே மாதம் உருவான கோடை காலப் புயல் சென்னைக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைத்தது. மூன்று நாட்களில் 47 சென்டிமீட்டர் மழை பொழிந்தது.




போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களுக்கு 1977ல் குறைந்தபட்ச ஊதியம் ரூ. 453. 1987ல் அவர்களது குறைந்தபட்ச ஊதியம் ரூ. 1378.

கடந்த 10 ஆண்டுகளில் செயல் திறனுக்காக இருபதிற்கும் மேற்பட்ட தேசிய விருதுகளை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெற்றன.





1977-78இல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்புத்திறன் 66,000 மெட்ரிக் டன்கள் மட்டுமே. ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் சேமிப்புத் திறனளவு 3.96 இலட்சம் டன்களாகும்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சில்லறை அங்காடிகளின் எண்ணிக்கை 1977-78ல் 1241. ஆனால் 1986-87ல் அங்காடிகளின் எண்ணிக்கை 5038 ஆகும்.




**சராசரி மழை அளவு** : தமிழ்நாட்டில் ஆண்டுக்குச் சராசரி 100 சென்டி மீட்டர் மழைபெய்கிறது. சில பகுதிகளில் 70 அல்லது 80 சென்டி மீட்டர் மழைதான். உதகையில் 250 சென்டிமீட்டர் பெய்வதுண்டு. தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பு 13 மில்லியன் எக்டேர். இங்கு பெய்யும் மழையில் சுமார் 34 விழுக்காடு தண்ணீர் நீராவியாக மாறியும், மரங்கள் தாவரங்கள் ஆகியவற்றால் உறிஞ்சப்பட்டும் செலவாகிறது. 14.5 விழுக்காடு தண்ணீர் நிலத்துக்கடியில் செல்கின்றது. மீதமுள்ள நீர் நிலத்தில் வழிந்தோடிக் கடலில் விழுகிறது.

### நிரந்தரத் திட்டம் தேவை

எனவே, தமிழ்நாட்டின் குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க நிரந்தரமான திட்டத்தை வகுக்க வேண்டும். கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் (தெலுங்கு-கங்கைத் திட்டம்) போன்ற பிற மாநிலத் திட்டங்களுடன் உள் மாநிலத் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

கடலில் விழும் நீர் அளவைக் குறைத்து நிலத்தடி நீர்த்தேக்கத்தை அதிகரிக்கலாம். புதிய நீர்த் தேக்கங்கள், அணைகள் மூலம் ஓரளவு பயன்கிடைக்கலாம். ஏற்கெனவே இருக்கின்ற நீர் நிலைகளைச் செப்பனிட்டு, ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்றவற்றின் கொள்ளளவை அதிகரிக்கலாம். வண்டல் முதலியவற்றை அகற்றி, தேங்கும் நீரின் அளவை அதிகரிக்கலாம். நிலத்தடி நீரின் திட்டமும் உயர வாய்ப்புண்டு.

நாம் காடுகளை அழித்து வருவதால் பெய்யும் மழை அளவு குறைந்து வருகிறது. நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் ஏரி, குளங்களைத்தூர்த்து, கட்டடங்கள் கட்டி வருகிறார்கள். இதனாலும் நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கையும் அளவும் குறைந்து வருகின்றன. வேளாண்மைக்கு நவீன முறைகளைக் கையாண்டு சிக்கனமாகத் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும்.

கேரளத்தில் வீணாகிக் கடலில் விழும் நீரைத் தமிழ்நாட்டிற்குப் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்கலாம்.

இரசாயன உரக் கலப்புக் காரணமாக அந்தத் தண்ணீர் மீண்டும் பயன்படுத்தும் தன்மையற்றதாகிவிடுகிறது. விவசாயக் கழிவு நீரும் தொழிற்சாலைக் கழிவு நீர் போன்று ஆகிவிடுகிறது. இவற்றையெல்லாம் கவனத்திற்கொண்டு வல்லுநர்களின் துணையுடன் புதிய திட்டங்களை வகுப்பதன் மூலம், தமிழ்நாட்டின் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும்.




# திறமைசாலிகள் இங்கே உருவாகிறார்கள்

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள ஜவகர் சிறுவர் இல்லம், 5லிருந்து 16 வயதுக்குட்பட்ட சமூகம், மற்றும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த பள்ளிக் குழந்தைகள், உடல் ஊனமுற்ற குழந்தைகள், வறுமையின் காரணமாகப் பள்ளிக் கல்வியைப் பாதியில் கைவிட்ட குழந்தைகள் போன்றோர்களிடம் மறைந்து கிடக்கும் ஆக்கப்பூர்வமான படைப்பாற்றல்களை வெளிக்கொணர்ந்து அவைகளை வளர்த்துக் கொள்ள இலவசமாகப் பயிற்சியளிக்கிறது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவால் இந்நிறுவனம் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றது.

மறைந்த இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களின் நினைவு நிதியின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து நிர்வாகம் செலவு செய்கிறது.

வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவ சமுதாயத்திடம்மறைந்து கிடக்கும் நாட்டியம், நாடகம், கைவினை, இசை, தையல் போன்ற படைப்பாற்றல்களைக் கண்டுணரவும், வெளிப்படுத்தவும், வளர்த்துக் கொள்ளவும் போதிய வாய்ப்புகள் அளித்து, அவர்களை ஊக்குவித்தல்; மொழி, மதம், இனம், கலாச்சாரம் என்றவேறுபாடின்றி அனைத்து மாநிலச் சிறார்கள் பங்கு கொள்ளும் வகையிலும், உணர்ந்து, மகிழ்ந்து ஈடுபாடு கொள்ளும் வகையிலும், இயல், இசை, நாடகம் மற்றும் ஓவிய நுண்கலை போன்ற கலைகளின் வாயிலாக தேசிய ஒருமைப்பாட்டுணர்வை ஏற்படுத்துதல் முதலான நோக்கங்களுடன் இது செவ்வனே பணியாற்றி வருகின்றது.

29-7-'87 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில், 'பள்ளிகளில் ஜவகர் சிறுவர் இல்லப் பங்கேற்பு' என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நடந்தது. இதில், சென்னை நகரில் உள்ள 600க்கும் மேற்பட்ட ஆரம்ப, நடுநிலை மற்றும் மாநகராட்சிப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.

அன்று காலை, தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் திரு



ஆ. பத்மநாபன், இ. ஆ. ப. அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

"இந்த இல்லம் மாணவர் திறனை வெளிப்படுத்தும் வகையில் சிறந்தமுறையில் பணியாற்றி வருகிறது. கல்வியோடு ஆற்றல், ஆர்வம், மனப்பக்குவம் ஆகியவற்றை ஒன்று திரட்டி, நாடகம், நாட்டியம், ஓவியம், இசை முதலான துறைகளில் ஈடுபட வேண்டும். வருங்காலத்தில் அவர்கள் நல்ல குடிமகனாகத் திகழ இந்த இல்லம் சீரிய முறையில் பணியாற்றி வருகிறது. இங்கு இதுவரை 2,500மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளது பாராட்டத்தக்கது.

"மாவட்டந்தோறும் இந்த மாதிரியான கல்வி நிறுவனங்களை நிறுவி அங்குள்ள குழந்தைகளுக்கும் வாய்ப்புத் தர வேண்டும். முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் பல கோடி ரூபாய்ச் செலவில் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஏழை எளிய குழந்தைகளுக்கும் இலவசச் சீருடை வழங்குகிறோம். அவர்களுக்குக் காலணி வழங்கும் திட்டமும் செயல்படவிருக்கிறது. இன்றைய சிறுவர்கள் நாளை நாட்டை ஆள்பவர்கள். இவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். நாட்டுப் பற்று, அன்பு முதலான பண்புகளைச் சொல்லித்தர வேண்டும்.''

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''கல்வியோடு மாணவர்களின் கற்பனைவளம், சிந்தனை வளம், உடல் வளம் ஆகியவையும் வளர்க்கப்படவேண்டும். ஜவகர் சிறுவர் இல்லக் குழந்தைகள் பல மாநிலங்களில் நடந்த போட்டிகளில் வெற்றிவாகை சூடியவர்கள்' என்றார்.

முன்னாள் மைய அமைச்சர் மற்றும் சிறுவர் இல்லத் துணைத் தலைவர் திரு சி. ஆர். பட்டாபிராமன் அவர்கள், ஜவகர் சிறுவர் இல்லத்தின் நோக்கங்களை, பணிகளை விளக்கினார்.

தமிழகத் தொடக்கப்பள்ளிக் கல்வி இயக்குநர் திருமதி ச. சரோஜினி அவர்கள் பேசுகையில், 'குழந்தைகளின் கைவண்ணமும், கலைவண்ணமும் வளர்ந்திருக்கிறது. மற்ற மாநிலங்கள் புகழும் அளவுக்குத் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் இங்கு பயிற்சி அளிக்கப்படுவதைப் பாராட்டுகிறேன்'' என்றார்.



## நமது செய்தியாளர் பெற்ற தேசியப் பரிசு

**புதுடில்லியிலுள்ள கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசியக் கவுன்சில் நடத்திய, குழந்தை இலக்கியத் தேசியப் பரிசுப் போட்டியில் 'தமிழரசு' செய்தியாளர் திரு பி. வி. கிரி எழுதிய 'நிலாச்சோறு' என்னும் கவிதைத் தொகுப்பு நூலுக்குப் பரிசு கிடைத்துள்ளது. இப்பரிசு ரூ. 5,000 ரொக்கமும், சான்றிதழும் கொண்டது.**

**பி. வி. கிரி ஏற்கெனவே குழந்தை இலக்கியத்துக்காக 'யுனெஸ்கோ' மன்றச் சான்றிதழும், ஏ.வி.எம். அறக்கட்டளையின் தங்கப்பதக்கமும், தமிழக அரசின் முதல் பரிசும் மற்றும் சிறந்த பத்திரிகையாளருக்கான வி. ஜி. பி. அறக்கட்டளையின் சிறப்பு விருதும் பெற்றவர்.**

மாலையில் கருத்தரங்கநிறைவு விழா நடந்தது.

மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

"அறிவியல் படிப்பைப் பிள்ளைப் பருவத்திலேயே தொடங்க வேண்டும். குழந்தைகள் விளையாட்டை ஏனோதானோ என்று கருதக் கூடாது. நல்ல உடற்பயிற்சி தேவை. நல்ல உடல் வளம் இருந்தால் தான் உள்ள வளமும் இருக்கும்; அறிவுத் திறனும் பெருகும். கட்டாயமாக ஒவ்வொரு குழந்தையும் விளையாட்டில் ஈடுபட வேண்டும். என். சி. சி. முதலானவற்றில் பங்கேற்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு செய்துள்ளார். இதை நடைமுறைப்படுத்த இருக்கிறோம்.

"நேரு பெயரில் அமைந்துள்ளது இந்த இல்லம். நேருவின் சிறப்பியல்புகளை மட்டும் கூறுவது நோக்கமல்ல, அவரது கனவை நனவாக்க-இந்தியத் திருநாட்டை விஞ்ஞான ரீதியிலே முன்னேற்ற நாம் செயல்பட வேண்டும்.''

செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''நமக்குத் தேவை, ஒரு நிலையில் இருக்கக் கூடிய, திடகாத்திரமான-பாகுபாடுகளைக் கடந்த நல்ல சமுதாயம். இந்தச் சமுதாயம் வலுவுள்ளதாகவும், ஒற்றுமையைச் சுட்டிக் காப்பதாகவும் அமைய வேண்டும் என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்தாகும்.

''ஒரு மனிதனை உருவாக்கும் சமுதாயம் - ஒரு நாட்டை உருவாக்கும் சமுதாயம் சிறந்து விளங்கிட வைக்கும் தலைமையாசிரியர்கள் இங்கே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் எதை நினைத்தாலும் அதைச் சாதிக்கக் கூடியவர்கள். முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம், இலவசப் பாட நூல்கள் வழங்குதல், இலவசக் காலணி வழங்குவது போன்ற நல்ல திட்டங்களைச் செயல்படுத்த முழுமூச்சுடன் ஈடுபட்டு ஆசிரியர்கள் முழு ஒத்துழைப்பு நல்கி வருகிறார்கள்.

"மாணவ மணிகளின் திறமையை - தன்னம்பிக்கையை வளர்க்க இந்த இல்லம் நல்ல பயிற்சி தந்து வருகிறது.''

இந்தியக் குழந்தைகள் நலச் சங்கப் பொதுச் செயலாளர் திருமதி ஆண்டாள் தாமோதரன் அவர்கள், ஜவகர் சிறுவர் இல்லத்தின் தொண்டுகளைப் பாராட்டிப் பேசினார்.

தொடக்கத்தில் சிறுவர் இல்ல இயக்குநர் செல்வி தை. மரிஸ்டெல்லா அனைவரையும் வரவேற்றார். இல்லக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன. மாணவ, மாணவியரின் கைவண்ணத்தைக் காட்டும் கண்கவர் கண்காட்சியும் நடந்தது.

—நமது செய்தியாளர்



# டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நூற்றாண்டு விழா

தமது இறுதி மூச்சுவரை சமூகத் தொண்டுக்காக அதிலும் குறிப்பாக பெண்கள் முன்னேற்றத்திற்காகவே பாடுபட்ட டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி அவர்கள் பிறந்து ஆண்டு நூற்று ஒன்றாகிறது.

ஆண்களுக்கு அடிமையாகி,வீட்டிற்குள் அடிமைப்பட்டுக் கிடந்த காலம் மாறி, பெண்கள் தம் சொந்தக்காலில் நின்று, தமக்கும் பிறருக்கும் உதவி புரியும் வகையில் முன்னேற, வழிவகை கண்டவர் டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி அவர்கள். பெண்கள் படிக்கவும், படிப்பிக்கவும், பிணியைத் தீர்க்கும் மருத்துவர்களாக தாதியர்களாக மற்றும் பல்வேறு துறைகளில் பணி ஆற்றக் கூடிய நிலையை உருவாக்கவும் பாடுபட்டவர் அவர்.

தேவதாசித் தடுப்பு மசோதாவை சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்தச் செய்து,பொட்டு கட்டும் வழக்கத்திலிருந்து பெண்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தார். பலதாரத் தடை மசோதா சட்டமன்றத்தில் கொண்டு வரப் பாடுபட்டார். பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டும் எனக் குரல் கொடுத்து அதைப் பெற்றுத் தந்தார். ஆதரவற்று, கொடுமைகளுக்குஆளாக்கப்பட்ட பெண்கள் வாழ, இல்லங்கள் அமைத்துத் தந்தார். இந்திய மகளிர் சங்கத்தை உருவாக்கிய முன்னோடி அவர். கணக்கிட முடியாத தொண்டு நிறுவனங்களை உருவாக்கிய டாக்டர் முத்து லெட்சுமிரெட்டி அவர்கள் சென்னையில் புற்றுநோய் மருத்துவ மனை உருவாகவும் பாடுபட்டார்.

புதுமைப் பெண்ணாய்த் தோன்றி, புரட்சிப் பணிகளில் ஈடுபட்ட அம்மையாரின் நூற்றாண்டு விழா, அவர் பிறந்த மண்ணாம் புதுக்கோட்டை நகரில் 28-7-'87 அன்று அரசின் சார்பில் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்களும் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்களும், மாண்புமிகு புதுவை மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் திரு வெ. வைத்திலிங்கம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாலை 6 மணி அளவில் நாயன இசையுடன் விழாத் துவங்கியது.

செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன்,இ.ஆ.ப அவர்கள் தமது வரவேற்புரையில்,

"இந்த மண்ணுக்குப் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கும் டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி அவர்களுக்கு நூற்றாண்டு விழாவைச் சென்னையில் மட்டுமின்றி அவர் பிறந்த மண்ணிலும் விழா எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு ஆணையிட்டார்கள். பெண்களின் உரிமைக்காகப் போராடிய பெருமாட்டி அவர். தமது இறுதி மூச்சு உள்ள வரை சமூகத் தொண்டுக்காகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்' என்று கூறி அனைவரையும் வரவேற்றார்.

விழாவையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத்துறை தயாரித்த டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி வரலாற்றுநூலை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி.சுவாமிநாதன் அவர்கள் வெளியிட, முதல் பிரதியினை மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து, சென்னை உயர் நீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு என். கிருஷ்ணசாமி ரெட்டி அவர்கள் உரையாற்றினார். அவர் தமது உரையில்,

'மக்களுக்குத் தொண்டு செய்த நல்லவர்களை, மக்கள் மனதிலே இடம் பெற்றிருக்கும் பெரியோர்களை வாழ்த்தித் தமிழக அரசு பாராட்டி வருகிறது. பழங் காலத்தில் மன்னர்கள் பாராட்டியதுபோல இன்று அரசே கட்சி,

இன, மத பேதமின்றி, நமக்குப் பின்வரும் சந்ததியர்க்கு அறிமுகப்படுத்தும் வகையில் விழா எடுக்கிறது. இந்த அரசைப் பாராட்ட வேண்டும். நான் எந்தக் கட்சியையும் சாராதவன். இத்தகைய சிறப்புச் செய்யும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டும் என்று என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேவையின் பெருமையைப் பற்றி இரஷ்ய ஞானி டால்ஸ்டாய், 'எனக்காக நான் வாழ்ந்தேனேயாகில் மரணத்திற்குப் பயன்படுவேன், ஆனால் பிறருக்காக வாழ்ந்தால் மரணத்தை எந்தவித அச்சமுமின்றி நான் எதிர்கொள்வேன்' என்று கூறுவார். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் பிறருக்காகவே வாழ்ந்தார். அதிலும் பெண்களையே நினைத்தவர். தம் வாக்குவன்மையாலும் மனத்திண்மையாலும் பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார்'' என்று கூறினார்.

நூற்றாண்டு விழாவை இத்துணைச் சிறப்பாக அரசு நடத்துவதற்கு இந்திய மகளிர் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்ட இந்திய மகளிர் சங்கத் தலைவி திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள்,

'எத்தனையோ பேர் வாழ்ந்து மறைகிறார்கள். ஆனால் அத்தனை பேருக்கும் நாம் விழா எடுப்பதில்லை. பெண்களில் அவர் ஒரு நல்முத்து. மகாத்மா காந்தி சிறைப்பட்டார் என்று கேள்விப்பட்டதும் தமது சட்ட மேலவைத் துணைத் தலைவர் பதவியைத் துறந்தார். பதவி பெறுவதைவிட இழப்பதுதான் சிரமம் என்றிருக்கும் நிலையில் அந்தத் துணிந்து செய்தார். வாழ்க்கையை ஒரு சவாலாக ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்தார். தளராத ஊக்கத்துடன் எடுத்த காரியத்தை முடிக்கக் கூடிய தைரியத்துடன் செயலாற்றினார். முதன் முதலில் மாதர் நல இலாகா உருவாகக் காரணமாயிருந்தவர் அவர். அவ்விலாகா, பின்னர் சமூக நல இலாகாவாகப் பெயர் மாற்றம் பெற்றது' என்று கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவ்வை இல்லக் காப்பாளரும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களின் மருமகளுமான திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''ஒரு முக்கிய நிகழ்ச்சியில் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் கலந்து கொள்கிறேன். இந்த விழாவை ஏற்பாடு செய்து தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அரசுக்கும் என் சார்பிலும் என் குடும்பத்தின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''1956-ஆம் ஆண்டில் அவ்வை இல்லம் நிறுவ மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களை அணுகியபோது 30 கிரவுண்ட் நிலம் வாங்குவதற்காக ரூ. 30,000 நன்கொடை அளித்ததோடு நான்கு அனாதைக் குழந்தைகளின் இரண்டாண்டுப் பராமரிப்புச் செலவுக்காக ரூ. 1,800 மனமுவந்து வழங்கினார்கள். சென்னை அடையாறில் உள்ள பூங்காவிற்கும் லாடிஸ்பிரிட்ஜ் பாலத்திற்கும் டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி அவர்களின் திருப்பெயரைச் சூட்டினார்கள். இதற்கும் அவ்வை இல்லம் முன்னேற உதவி அளித்து வருவதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அவர் நல்ல உடல் நலத்துடன் நீண்டகாலம் வாழப் பிரார்த்திக்கிறேன்'' என்றார்.

விழாவில் கலந்து கொண்டு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைத்த புதுவை மாநில மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு வெ. வைத்திலிங்கம் அவர்கள் தமது உரையில், ''சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட பெரியோர்க்கு விழா எடுப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. சிறுவயதிலிருந்தே தமது வாழ்க்கையைப் போராட்டக் களமாகக் கொண்டவர் அவர். தேவதாசிகள் என்று ஆக்கப்பட்டவர்களின் மறுவாழ்விற்காகப் பாடுபட்ட அம்மையாரின் பெருமையை இன்றைய சமுதாயம் அறிய இது ஒரு நல்ல வாய்ப்பு'' என்று கூறினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே.இளங்கோவன் இ.ஆ.ப., அவர்கள் அரசின் நலத்திட்ட உதவிகள் பற்றி விளக்கவுரை ஆற்றியதோடு ''அம்மையார் அவர்களைப்போல் இம்மாவட்டத்தில் பலர் உருவாக வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

அடுத்து, விழாத் தலைமை ஏற்ற மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர்திரு வி.வி.சுவாமிநாதன் அவர்கள் உரையாற்றினார்கள். தமது உரையில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். பெண்கள் கல்விக்காகப் பள்ளிக்கூடம் போகக் கூடாது என்றிருந்த அந்தக் காலத்திலேயே புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் பயின்று படிப்பில் முதலிடம் பெற்றார்.

''எல்லாத் துறைகளிலும் முதன்மையாகவிளங்கிய டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்களின் பிறந்த நாளை அவர் பிறந்த மண்ணில் கொண்டாடுவது மிகப் பொருத்தமாகும். நல்லவர்களுக்கும் நாட்டிற்காகப் பாடுபட்டவர்களுக்கும் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தொடர்ந்து விழா நடத்திச் சிறப்பித்து வருகிறது. அடுத்த மாதம் தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு சிறப்பாகக் கொண்டாட உள்ளது. இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அழைத்துள்ளார்கள்.''

திருக்கோகர்ணம் ஆலய ஊழியர்களுக்கு கருணைக் கொடை ரூ. 200 வழங்க முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். DC, AC நிர்வாகத்தின்கீழ்ப்பணி

## ஆறாவது உலகத் தமிழ் மாநாடு

ஆறாவது உலகத் தமிழாராய்ச்சிமாநாடு வரும் நவம்பர் 15-ஆம் நாள் முதல் 19-ஆம் நாள் வரை கோலாலம்பூர் மலேசியப் பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெறும்.

மலேசியப் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் (I.A.T.R.) மலேசியக் கிளை, உலகத் தமிழர் மாமன்றம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் நடைபெறும் இம்மாநாட்டில் உலகின் பல நாடுகளில் இருந்து 500-க்கு மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்கிறார்கள்.

யாற்றும் அனைவருக்கும் இந்த கருணைக் கொடை வழங்கப் படும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

பின்னர், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா, காது கேளாதோர்க்குக் காது கேட்கும் கருவி, முன்னாள் படைவீரர்க்கு திருமண மான்யம் போன்ற அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''நமது மாவட்டத்தில் பிறந்து பலவிதங்களில் சிறப்புப் பெற்றவர் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள். சாதாரண குடும்பத்தில் பிறந்து ஆரம்பக் கல்வியை முடித்தார். தொடர்ந்து படிப்பை நடத்த வசதி இல்லாத காரணத்தால் சிரமப்பட்டார். மெட்ரிகுலேஷனைப் பிரைவேட்டாகப் படித்தார். அப்போது மன்னர் கல்லூரியில் ஆண்கள் மட்டுமே படிக்க முடியும். அந்தக் கல்லூரியில் 'இண்டர் மீடியட்' சேர வேண்டும் என்று ஆர்வத்துடன் போராடியதால் அதில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரே பெண்மணி முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள்தான்.

''மருத்துவப் பட்டம் பெற்ற முதல் பெண்மணிஎன்ற சிறப்புப் பெற்றார். சமுதாயத்தில் நிலவும் கொடுமைகளைக் களையத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் அவர். தேவதாசி சட்டத்தை நீக்க முயற்சிஎடுத்தார். அவ்வை இல்லத்தை ஆரம்பித்தார். புற்று நோய் மருத்துவமனையைத் துவக்கினார். இந்திய மகளிர் சங்கத்தை ஆரம்பித்தார். அச் சங்கத்தின் பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்தார். இப்படி எல்லாத் துறைகளிலும் சிறந்தவராக ஒரு பெண்மணி விளங்க முடியும் என்று ஏறத்தாழ 80 ஆண்டுகளுக்கு முன்பே நிரூபித்துக் காட்டினார். பெண்ணடிமை நீங்கப் பாடுபட்டவர் நம்முடைய மண்ணிலே பிறந்த டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள். இம்மாவட்ட மருத்துவ மனைக்கு அவருடைய திருப் பெயர்; பாடப்புத்தகத்திலே அவருடைய வாழ்க்கை வரலாறு; மேலும் அம்மையார் காண விரும்பிய சீர்திருத்தங்களை எல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் செய்து வருகிறார்'' என்று கூறினார்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஜே. முகமதுகனி, திரு. க. மாரிமுத்து ஆகியோரும் புதுக்கோட்டை நகரமன்றத் தலைவர் திரு அ. தியாகராஜ காடு வெட்டியார் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் பலர் இவ்விழாவில் ஆர்வத்துடன் வந்து கலந்துகொண்டு, தம்ஊரில் பிறந்து சாதனைகள் பல செய்த அம்மையாரின் புகழுக்குப் பெருமை சேர்த்தனர்.

விழாவின் இறுதியில் பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும், செய்தி - மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு வி.டி. வீரப்பன் நன்றி நவின்றார்.



# இந்திய மகளிர் சங்கத்தின் முப்பெரும் விழா!

இந்திய மகளிர் சங்கத்தின் வைரவிழாவும், பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பெரும்பாடுபட்ட டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, சகோதரி ஆர். எஸ். சுப்புலெட்சுமி ஆகியோரின் நூற்றாண்டு விழாவும் 30-7-'87 அன்று சென்னையில் நடைபெற்றது.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் முன்னாள் பல்கலைகழகத் துணைவேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேசய்யாஅவர்கள் முதியோர் கல்வி பற்றிய கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்தார். தலைமை வகித்த திரு சி. சுப்பிரமணியம் அவர்கள், மகளிர் சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். விழாத் தொடர்பாக நல்வாழ்வுத் துறை ஆதரவுடன் மகளிர் சங்கங்கள் தயாரித்த கலைப்பொருட்களும் உணவு, உடை போன்ற பொருட்களும் கொண்ட கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இக்கண்காட்சியை மாநில சமூக நல வாரியத் தலைவர் திருமதி தாராசெரியன் திறந்து வைத்தார்.

மாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி திரு எஸ். மோகன் அவர்கள் தலைமை ஏற்க மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர்டாக்டர்திருஇரா. நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது உரையில், 'நமது நாடு வறுமையில் உழலக் காரணம், மக்கள் கல்வி அறிவு பெறாமல் அடிமைப்பட்டு வீழ்ச்சி அடைந்ததுதான். இதனைச் சிந்திக்க முற்பட்டதுடன் அதைச் சீராக்கும் பணியையும் சிறப்பாகச் செய்தவர்கள்தான் டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி அவர்களும் சகோதரி சுப்புலெட்சுமி அவர்களும். இந்த இருவரையும் முன்னோடிகளாகக் கொண்டு பெண்கள் சமுதாயம் தொடர்ந்து முன்னேற நாம் அனைவரும் பாடுபட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திருமதி அகிலா சிவராமன் விழா மலரை வெளியிட்டார். நிகழ்ச்சிக்கு வருகை தந்தோரை இந்திய மகளிர் சங்கத் தலைவி திருமதி சரோஜினி வரதப்பன் வரவேற்றார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப., இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient



# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்



ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002